டி ட்பண் டீ௩௪

V211,1j7.M27
N34
170652

# ரிப்பன் பிரபு

7 MAR 1932

இது
சென்னைப் பச்சையப்பன் கல்லூரி
திரு. ர. சாரங்கபாணி, எம். ஏ.
வரைந்தது

சென்னை :
"ஆனந்த போதினி" பத்திராதிபர்
நா. முனிசாமி முதலியாரவர்களால்
வெளியிடப்பெற்றது

1931

காபிரைட்] [விலை அணா 10

துரைத்தனத்தாரால் அங்கீகரிக்கப்பெற்றவை

## மாணவர்க்குரிய புஸ்தகங்கள்.

| | | ரூ. | அ. |
|---|---|---|---|
| சதானந்தர் | ... | 1 | 4 |
| ஜீவகன் | ... | 1 | 0 |
| கர்ணன் சரிதை | ... | 0 | 12 |
| ஸ்ரீ பீஷ்மவிஜயம் | ... | 0 | 10 |
| வீரத்தன்மையுள்ள ஹிந்து மாதசிரோமணிகள் | ... | 0 | 10 |
| கீர்த்திசிங்கன் | ... | 0 | 8 |
| அரிச்சந்திரன் சரிதை | ... | 0 | 8 |
| சகோதரவாஞ்சை | ... | 0 | 7 |
| நீலக்கொடி | ... | 0 | 5 |
| மணவாளன் | ... | 0 | 3 |
| பரசுராமன் | ... | 0 | 3 |
| ஸ்ரீ கிருஷ்ணன் தூது | ... | 0 | 8 |
| தசாவதார மகிமை | ... | 0 | 6 |
| சிசுபாலன் | ... | 0 | 8 |
| சண்டோபாக்கியானம் | ... | 0 | 6 |
| அங்கதன் | ... | 0 | 4 |
| மங்களேசுவரன் | ... | 0 | 6 |
| சத்திய வசனன் | ... | 0 | 4 |
| நாலு மந்திரி கதை | ... | 0 | 4 |
| விமலன் or விதியின் வெற்றி | ... | 0 | 4 |
| கண்ணபிரான் | ... | 0 | 4 |
| உதயணன் | ... | 0 | 6 |
| ஸ்ரீபாலன் | ... | 0 | 8 |
| தசக்கிரீவன் | ... | 0 | 14 |
| போஜ சரித்திரம் | ... | 0 | 5 |
| லார்ட் கிளைவ் | ... | 0 | 12 |
| மூப்பெருந்தாசர் | ... | 0 | 10 |
| சீமந்தனி | ... | 0 | 8 |
| [illegible]ன் | ... | 0 | 6 |

ஆனந்தபோதினி ஆபீஸ்,

மதராஸ்.

7 MAR 1932

# முன்னுரை

"உரிமை ! உரிமை !!" என்ற பேராவம் பாரத கண்டமெங்கணும் முழங்குந் தற்காலத்தில் ஆங்கில குலத்தில் உதித்து, சாதி மத பேதம் விண்டு அன்பு வழி நின்று, அறநெறிபற்றி, தம் மக்களுந் தம்மைத் தூற்றிட, இந்திய மக்களுக்கு ஒருவாறு உரிமை வழங்கிய ரிப்பன் பிரபுவினுடைய சரிதத்தையும், அவர் இந்தியமக்களுக்காற்றிய பெருந் தொண்டையும், நிறுவிய சீரிய சட்டங்களையும், அச் சட்டங்களால் இந்தியர் எய்திய நன்மைகளையும், தெள்ளிய உரை நடையில் வரைந்து விளக்குமாறு நண்பர் பலர் வேண்டினமையான், இச்சிறு புத்தகத்தை, லூஸியன் உல்ப் என்னும் பெரியாரின் நூலைத் தழுவியும், கீன், ஸ்மித் என்பவர்களின் இந்திய சரிதத்தின் உதவியை நாடியும் வரையலானேன்.

இதுகாறும் என்னுடைய நூற்களை ஆதரித்த தமிழுலகம் இந்நூலையும் ஆதரித்து எனக்கு ஊக்கமளிக்குமென்று நம்புகின்றேன்.

திரு. ர. சாரங்கபாணி.

# உள்ளுறை


| | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | "குலத்தளவே யாகுங் குணம்" | .... | 1 |
| 2. | இளமைப் பருவம் ... | .... | 9 |
| 3. | "காலத்தின் கடன்" ... | .... | 14 |
| 4. | அரசியல் மன்றம் ... | .... | 19 |
| 5. | இந்திய உணர்ச்சி ... | .... | 24 |
| 6. | இல்லற வாழ்க்கை ... | .... | 32 |
| 7. | அரசியல் அமைச்சர் ... | .... | 38 |
| 8. | ஆன்ம உணர்ச்சி ... | .... | 48 |
| 9. | இந்திய இராஜப்பிரதிநிதி | .... | 51 |
| 10. | ஆப்கானிய வழக்கு ... | .... | 54 |
| 11. | மைசூர் அரசாங்க வமைப்பு | .... | 64 |
| 12. | பொதுக் குடிக் கணக்கு | .... | 73 |
| 13. | பஞ்சக் கொடுமை விலக்கு | .... | 74 |
| 14. | வங்காள நிலவரிச் சட்டம் | .... | 78 |
| 15. | தேச பாஷைப் பத்திரிகைச் சட்டம் | | 83 |
| 16. | கல்வி முறை ... | .... | 88 |
| 17. | இராஜரீக உத்தியோகமும் போட்டிப் பரீட்சையும் ... | .... | 91 |
| 18. | ஸ்தல சுய ஆட்சி ... | .... | 94 |
| 19. | இல்பர்ட் சட்டம் ... | .... | 99 |
| 20. | இந்தியர் உரிமையை நாடிய இராஜப் பிரதிநிதி ... | .... | 103 |
| 21. | அரசியல் நிபுணர் ... | .... | 105 |
| 22. | முடிவுரை ... | .... | 111 |


# ரிப்பன் பிரபு

## 1. குலத்தளவே யாகுங் குணம்.

உலகிடை யுதித்த மனிதன் "ஒன்றே குலமும் ஒருவனே தேவன்" என்னும் அறநெறி பற்றி, அன்பு வழி நின்று, "என்கடன் பணிசெய்து கிடப்பதே" என்னும் பேருண்மையை யோர்ந்து, தன்னலந் தவிர்ந்து பிறர்நலமே பேணி, தன்னாலியன்ற தொண்டை மக்களுக்கியற்றத் துணிவதற்கு, குலத்தின் பெருமையே முதற்காரணமென்பது அறிஞர்கள் துணிபு. பாரத மக்களுக்கு உரிமையை ஒருவாறு வழங்க, பழங்குடிப் பிறந்த பெரியாரின் சரிதையும் இப்பேருண்மையையே வெள்ளிடை மலையென எடுத்தோதுகின்றது.

இராபின்ஸன் (Robinson) குலமெனப் பெரிதும் போற்றப்படும் குலத்திற்கு யார்க் (York) நகரின் வில்லியம் இராபின்ஸன் (William Robinson) என்னும் பெரியரே தலைவரெனக் கூறுதல் மிகையாகாது. வில்லியம் இராபின்ஸன் என்பார் வியாபாரத்தில் ஏராளமான பொருளை யீட்டியதன்றிச், சில வியாபாரக் கலங்களுக்கும் உரியவராக இருந்தாரெனின், அவருடைய செல்வச் சிறப்புக் கூறாமலே விளங்கும். அவருடைய தந்தையாராகிய பீடர் (Peter) இராபின்ஸன் என்பவருடைய வாழ்க்கையைப் பற்றி, சரித்திர

வாயிலாக ஒன்றும் விளங்கவில்லை யாதலால், வில்லியம் இராபின்ஸனே இக்குலத் தலைவராகக் கொள்ளுதலே அமைவுடைத்து. வியாபாரத்துறையில், பொருளீட்டுவதிலேயே கண்ணுங் கருத்துமாக விருந்தும், அவர் நகர பரிபாலன சபையில் தம்மாலியன்ற தொண்டை யார்க் நகர வாசிகளுக்குப் புரிந்துவந்தார். அவருடைய மெய்யன்போடியைந்த பொது ஊழியத்தைக் கருதி அந்நகர வாசிகள் அவரை அந்நகர பரிபாலன சபையின் தலைவராக இருமுறையும், பார்லியமெண்டிற்கு (Parliament) அந்நகரப் பிரதிநிதியாக இருமுறையுந் தெரிந்தெடுத்தனர்.

இவ்வாறு தங்குலத்திற்குப் பெரும் பொருட் செல்வத்தையும், பொதுநல ஊழியமென்னும் புகழ்ச் செல்வத்தையு மீட்டிய, இப்பெரியார் 1616-ம் ஆண்டு மண்ணுலகை நீத்து விண்ணுலகேகினர். பின்பு, இவருடைய மூத்த புத்திரராகிய வில்லியம் என்பவர், "தந்தை யெவ்வழித் தநய னவ்வழி" என்னும் பொய்யா மொழிக்கிணங்க, தம்முடைய பிதாவின் நல்லடி நாடி, யார்க் நகர பரிபாலன சபையின் தலைவராகத் தெரிந்தெடுக்கப்பட்டார்; 1628-ம் ஆண்டு யார்க் நகரப் பிரதிநிதியாகவும் பார்லியமெண்டின் அங்கத்தினராகவு மாயினர். அவருடைய அரச பக்தியையும், பொதுநல ஊழியத்தின் இயல்பையு முணர்ந்த முதல் சார்லஸ் மன்னர் (Charles I) 1638-ம் வருடம் அவருக்கு "சர்" (Sir) என்கிற பட்டத்தையும் ஒரு ஜமீனையு மளித்தார்.

அவருக்குப் பின்னர் அவருடைய மூத்த குமாரராகிய மெட்காப் (Metcalfe) என்பவர் அவருடைய செல்



வத்திற் குரியவராயினர். குலத்தின் மேன்மைக்கிணங்க, பொதுஜன சேவையில் அவர் ஈடுபட்டிருந்தமையால், சிலவாண்டுகள் பார்லியமெண்டில் யார்க் நகரப் பிரதிநிதியாகவும் வீற்றிருந்தார். இறுதியில் 1689-ம் ஆண்டில் புத்திரப்பேறின்றி அவர் இறந்தமையால், அவருடன் பிறந்தவராகிய தாமஸ் (Thomas) என்பவரின் மூத்த குமாரராகிய வில்லியம் என்பவர் அவருடைய செல்வத்திற்கும் ஜமீனுக்கும் உரியவரானர்.

அவர் நார்த்தாலர்டன் (Northallerton) என்னும் நகரத்தின் பிரதிநிதியாக பார்லியமெண்டிலும், இரண்டாவது சார்லஸ் மன்னர் (Charles II) காலத்தில் கூட்டப்பட்ட கன்வென்ஷன் பார்லியமெண்டிலும் (Convention Parliament) அங்கத்தினராக வமர்ந்து, பின்னர் ஐந்தாண்டுகள் யார்க் நகரப் பிரதிநிதியாகவும் பார்லியமெண்டில் வீற்றிருந்ததை நோக்க அவருடைய புகழ் இனிது விளங்குகின்றது. அவருக்கு ஐந்து புதல்வர்கள் இருந்தனர். அவருக்குப் பின்னர் அவர்களுள் மூத்தவராகிய மெட்காப் என்பவர் குடும்ப ஐஸ்வரியத்தையும் ஜமீனையும் பெற்றார். ஆயினும், நான்கு தினங்களுள் மணமின்றி அவர் மடிந்தமையால் அவருக்கிளையவராகிய சர் டாங்கிரட் (Sir Tancred) என்பவர் பட்டத்திற்கு வந்தார். அவர் சில வாண்டுகள் யார்க் நகர பரிபாலன சபையின் தலைவராக இருந்தார். அவருக்குப் பின்னர் அவருடைய மூன்று குமாரர்களும் ஒருவர் பின் ஞெருவராக ஜமீனுக்குரியவராகி, அவர்கள் அனைவரும் புத்திரப்பேறின்றி இறந்தமையால், அவர்களுடைய சிறிய தந்தையாராகிய கிராந்

தாம் பிரபுவின் (Lord Grantham) பௌத்திரராகிய எர்ல் டி கிரே (Earl de Grey) என்பவர் இராபின் ஸன் ஜமீனைப் பெற்றார்.

கிராந்தாம் பிரபு பல வாண்டுகளாக வியன்னு (Vienna) நகரில் ஆங்கிலத்தூதராகத் தொண்டாற்றியவர்; ஆயிக்ஸ் லா சாப்பேல் (Aix-La-Chapelle) என்னும் பெயரிய சமாதான உடன்படிக்கையை முற்றுவித்த சங்கத்தின் முக்கிய அங்கத்தினராக இருந்தவர்; இரண்டாவது ஜார்ஜ் மன்னர் (George II) காலத்தில், வெளியூர் அரசியல் காரியதரிசியாகவும் (Foreign Secretary of State) அரசியல் மன்றத்தின் தலைவராகவும் அவ்வரசராலேயே அமர்த்தப்பட்டவர்; நாட்டிற்கு அவர் செய்திட்ட தொண்டின் பயனுல், அம்மன்னவரிடமிருந்து ஆண்டிற்கு மூவாயிரம் பவுன் இரண்டு தலைமுறைகளுக்குப் பென்ஷனுகப் பெற்றவர்; மூன்றும் ஜார்ஜ் மன்னரால் (George III) 1761-ம் ஆண்டு கிராந்தாம் பிரபுவாக ஏற்படுத்தப்பட்டவர்.

அவர், கொடுங்கோல் மன்னருடன் ஏழை மக்களின் உரிமைக்காகப் பொருதிட்ட பெரும் வீரர் கிராம்வெல் (Cromwell) என்பவருடைய பௌத்திரியின் புத்திரியாகிய பிரன்ஸேஸ் ஓர்ஸ்லி (Frances Worsley) என்னும் பெண்மணியை மணந்தார். அவர் அவளை மணம்புரிந்தமை இராபின்ஸன் குலத்திற்கே ஒரு பெரும்புகழை உண்டாக்கியது. இது காறும் இராபின்ஸன் குலத்தார், பொதுநலவூழியத்தையே பெரிதும் நாடி வந்தனர் என்னும், ஒப்பிலா அரசபக்தியும் அவர்கள்மாட்டுப் பொலிந்து நின்றது.



அவர்கள் செல்வச் செருக்கற்றவர்களாக இருந்தனர். ஏழைமக்களின் உரிமைக்கென அவர்கள் அரங்க மேடை யேறியறியார். அத்தகைய குலத்துதித்த உத்தமர்களுக்கு ஏழைமக்களிடத்து அன்பும், அவர்களுடைய உரிமைக்கெனப் போராடும் ஆற்றலும், இம் மணம் அளித்ததெனக் கூறினும் மிகையாகாது.

கிராந்தாம் பிரபுவின் மூத்த குமாரராகிய தாமஸ் என்பவர் அவருக்குப் பின்னுல் கிராந்தாம் பிரபு வாயினர். செல்போர்ன் பிரபுவின் (Lord Selbourne) அரசியலில் வெளியூர் அரசியல் காரியதரிசியாக அவர் இருந்தார். பின்னர் மாட்ரிட் (Madrid) நகரத்திற்குத் தூதராகச் சென்று ஆற்றிய தொண்டால் ஆண்டுக்கு இரண்டாயிரம் பவுன் அவர் பென்ஷனுகப் பெற்றார். டி கிரே (De Grey) ஜமீன்தாரின் ஒரே புதல்வியாகிய மேரி கிரே யார்க் (Mary Grey York) என்னும் பெருமாட்டியை அவர் மணந்தமையால் அவருடைய புதல்வர், இராபின்ஸன் ஜமீன், கிராந்தாம் ஜமீன் முதலிய இரண்டு ஜமீன்களுடன் கிரே ஜமீனையும் பெற்றார்.

அவருக்குப் பின்னுல் அவருடைய மூத்த குமாரர், இராபின்ஸன் ஜமீனையும், கிராந்தாம் ஜமீனையும், கிரே ஜமீனையும் ஏராளமான குடும்பச் செல்வங்களையும் பெற்றார். அவர் அரசியல் துறையிலும் தமது குலப் பெருமைக்கிணங்கப் பொலிந்து, அயர்லாந்து (Ireland) தேயத்தின் இராஜப் பிரதிநிதியாகப் பல ஆண்டுகள் வீற்றிருந்தார். பொருட் செல்வப் பேறு பெரிதும் பெற்ற இவர்மாட்டுக் கல்விச்செல்வப்

பேறும் இயைந்து விளங்கியது. கற்றவருங் காமுறும் பல நூற்களையும் அவர் இயற்றிப் பெரும்புகழ் எய்தினர். அவர் புத்திரப்பேறின்றி மடிந்தமையால், கிராந்தாம் பிரபுவின் இரண்டாவது புதல்வரும், அவருடைய இளைய சோதரருமாகிய பிரடிரிக் இராபின்ஸன் (Fredrick Robinson) என்பவரின் ஏக புதல்வராகிய ரிப்பன் பிரபுவே (Lord Ripon) அவருடைய ஜமீன்களுக்குஞ் செல்வத்திற்கும் உரியவராயினார்.

ரிப்பன் பிரபுவின் தந்தையாகிய பிரடிரிக் இராபின்ஸன், அரசியல் காரியதரிசி, கப்பற் படைத்தலைவர், பொருளதிகாரி, இரகசிய மந்திரி, வியாபார சங்கத்தின் தலைவர், மற்றுமுள்ள அரசியல் துறைகளிலும் மிகவும் முக்கிய பதவிகளை வகித்தவர். ஆயினும் அவர் கிராந்தாம் பிரபுவினுடைய இரண்டாவது புதல்வராகையால் பட்டத்திற்கும், குலச்செல்வத்திற்கும் அவருக்குள்ள உரிமையற்றுவிட்டது. எனவே, அவர் சுயேச்சையாகவே, தம்முடைய விடாமுயற்சியினாலும், குலப்பெருமையாலும், சமயோசித யுக்தியாலும் அரசியல் துறையில் பெரும்புகழடைந்தார். கானிங் பிரபு (Lord Canning) பிரதானியாக இருந்த அமயத்தில் காடரிச் (Goderich) என்னும் ஜமீன் அவருக்கு அளிக்கப்பட்டது. அன்று முதல் அவர் காடரிச் பிரபு (Lord Goderich) என்னும் நாமமே வகித்தார். கானிங் பிரபுவுக்குப் பின்னால் அவர் 1827-ம் ஆண்டு பிரதான மந்திரியின் பதவியையும் வகித்தாரெனினும், அரசியல் துறையில் அவருடைய மாண்பு கூறுமலே விளங்கும்.



காடரிச் பிரபு மிகவும் நற்குணமும், அரசியல் துறையில் பெரும்பெயரெடுக்க வேண்டுமென்னும் பேரவாவும் உடையவர். அத்துறைகளில் அவர் உயர்ந்த பதவிகளை வகித்திருந்தாரெனினும், அமைச்ச தந்திரங்களும், தலைவருக்குரிய இலக்கணங்களும் அவரிடத்திலில்லை. அதனால், அவர் பிரதானி பதவியைச் சில தினங்களுக்குமேல் வகிக்க இயலாது போய்விட்டது. 1833-ம் ஆண்டு அவர் அரச முத்திரைக் கதிகாரியாக (Lord Privy Seal) ஏற்படுத்தப்பட்டு, ரிப்பன் ஜமீனையும்பெற்று ரிப்பன் எர்ல் (Earl of Ripon) என்ற பட்டம் பெற்றார். இவ்வாறு அரசியல் உத்தியோகங்களை யெல்லாம் வழுவில்லாது வகித்து, 1859-ம் ஆண்டு ஜனவரித் திங்கள் அவர் பரகதி யெய்தினார்.

அவர் 1814-ம் ஆண்டு பகிங்காம் ஷயர் எர்லினுடைய (Earl of Buckingamshire) ஏக புதல்வியாகிய சாரா அல்பீனியா லூயிஸ் (Sarah Albinia Louise) என்னும் உத்தமியை மணந்து இல்லறத்தை வழுவாது நடத்திவந்தார். அவருக்கு முதலில் ஹெர்பர்ட் பிரடரிக் (Herbert Frederick) என்னும் ஓர் ஆண் மகவு பிறந்து இரண்டு தினங்களுள் இறந்துபட்டது. அக்குழவிக்குப் பின்னால் பிறந்த எலியனார் ஹென்ரியட்டா விக்டோரியா (Eleanor Henrietta Victoria) என்னும் பெண் குழவி, குணமும் அறிவும் நிறைந்து அழகிய இளம் பெண்ணாக வளர்ந்து திடீரென்று இறந்துவிட்டது. அதனுடைய தாயாகிய சாரா ஆல்பீனியா லூயிஸ் அம்மைக்கு அக்குழந்தையினிடமிருந்த அன்பு

அளவு கடந்ததாகும். அப்பெண்
வாண்டுகள் கழிந்தும், அப்பெண் விளையாடிய விளையாட்டுப் பொருள்களையெல்லாம் மிகவுஞ் சாக்கிரதையாய், அதன் ஞாபகார்த்தமாக அப்பெண்ணரசி வைத்திருந்தாள். அதனால், அவர்களுக்கு அப்பெண்மணியின் மீதிருந்த அன்பு இனிது விளங்குகின்றது.

இவ்வாறு சதியும் பதியும் இருகண்ணேபோ லீன்ற தமது இருமக்களையும் இளமையிலேயே இழந்த துயரம் தாங்கவியலாது வாடி நிற்கையில் 1827-ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 27-ம் நாள் புதன்கிழமை யன்று அழகிற் சிறந்த ஆண்மக வொன்றை அவ்வம்மையார் ஈன்றெடுத்தார். அதுசமயம் காடரிச் பிரபு பிரதானியாக இருந்தமையால், பிரதானிகளின் இருப்பிடத்திலேயே அக் குழவி பிறந்தது. நற்சகுனங்கள் எங்கும் தோன்றின. தங்கள் குலப்பெருமையை விளக்க வந்த இருகண்மணிகளையும் இழந்த தங்கள் துயரத்தைப் போக்கத் தோன்றிய அக்குழவியைக் காணுந்தோறுங் காணுந்தோறும் காடரிச் பிரபுவும், அவருடைய மனைவியாரும், இன்பக் கடலில் மூழ்கினர்.

சில தினங்களுக்குப் பின்னால் தங்கள் சோகத்தை ஒழிக்க உதித்த சுதனுக்கு அவர்கள் இருவரும் ஜார்ஜ் பிரடிரிக் சாமுயல் (George Frederick Samuel) என்னும் நாமஞ்சூட்டினர். பின்னர், கண்ணை இமை காப்பதுபோல் அவர்கள் அம்மதலையைக் காத்து நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்த்து வருவாராயினர்.

## 2. இளமைப் பருவம்

ஆறறிவு படைத்த மக்கள் பெறுதற்குரிய செல்வங்களுள் தலை சிறந்து விளங்குவது கல்விச் செல்வமேயாகும். அறியாமையை யொழித்து அறிவைப் பண்படுத்தி, அன்பு நெறியைக் காட்டி, இன்பவாழ்வை யளித்து ஒழுக்க நீர்மையை நாட்டுஞ் செல்வமே கல்வியெனப்படும். அத்தகைய கருந்தனம் தற்காலம், உத்தியோகக் கல்வியாகவும், நூற் கல்வியாகவும், பெரும்பாலும் ஆங்கிலக் கல்வியாகவும், வரம்புகளால் பிணிக்கப்பட்ட போலிக் கல்வியாகவும் மாறியிருக்கிறது. தவிர, தற்காலக் கல்வி, இயற்கையின் எழிலையும், இறைவனின் இயல்பையும் நுகரவல்ல ஆன்மவுணர்ச்சியை யளித்திடும் மெய்யறிவிற்குரிய வலிமையற்றிருப்பதும் உலகறிந்த வுண்மையாகும்.

ஆனால் ரிப்பன் பிரபு இளமையில் பயின்ற கல்வி, கல்விக்கழக வரம்புகளற்ற இயற்கைக் கல்வியேயாகும். கொள்ளலுந் தள்ளலுமற்ற ஒரு நூதனக் கல்வி முறையையே அவர் கையாண்டார். தம்முடைய நாற்பத்து மூன்றும் வயதில் அவர் தம்முடைய அந்தரங்கக் காரியதரிசியாகிய சர் புரூஸ் சேடன் (Sir Bruce Seton) என்பவரை நோக்கி, "நீரும் நானும் கல்வி வரம்புகளுடன் பொலியும், கல்வி முறையைக் கையாளும் பாக்கியத்தைப்பெற்றோமில்லை யெனினும், உலகிடை நம்முடைய வாழ்க்கையை நன்றாகவே நடத்தியுள்

ளோம்'' என்று கூறிய மொழிகளே இவ்வுண்மையை வலி யுறுத்துகின்றது.

அவருடைய பெற்றோருக்கு ஏக புதல்வராக இருந்தமையால், அவர் மிகவுஞ் செல்வமாகவே வளர்க்கப்பட்டார். இளமையிலேயே கல்வியை யூட்டி, அவருடைய தேக சௌக்கியத்திற்கு இடைஞ் சலை இழைக்க, அவருடைய அன்னைக்கும் பிதாவுக்கும் இச்சை யில்லை. ஏராளமான செல்வம் இருந்ததால், உத்தியோக வேட்கையால், கல்வி வரம்புகளையொட்டி, கல்வியில் பட்டம் பெறவேண்டும் என்ற ஆவல் ரிப்பன் பிரபுவுக்கும் கிடையாது. எனினும், கல்வியென்னுங் கருந்தனத்தைக் கொள்ளவேண்டும் என்ற ஆர்வம் அவர்மாட்டு இளமையிலேயே பொலிந்து நின்றது. முதன் முதலில் அவர் ஆங்கில மொழியின் எழுத்துக் களைத் தம்முடைய தந்தைக்கு வந்த கடிதங்களிலிருந்து தாமாகவே கற்றார். இதனால், கல்விச் செல்வத்தைக் கைக்கொள்ள அவருக்கிருந்த இச்சை இனிதுவிளங்கும். இல்லத்திலேயே கல்வி பயிலத் தொடங்கிய அவரிடத் தில் ''கண்டது கற்கப் பண்டிதனாவான்'' என்ற ஆன் றோர் வாக்கு மெய்த்தது என்றுகூறுதல் குற்றமாகாது. அறியாமையை ஒழித்து அறிவைப் பண்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற பேரவா அவரைப் பிடர் பிடித்துந்த, அவர் கண்ட நூற்களை யெல்லாம் விருப் புடன் கற்பாராயினர். அவருடைய பெற்றோரும் கல்வி யில் அவருக்குள்ள இயற்கை அன்பை வரம்புகளிட்டுப் பிணியாது வாளாவிடுத்தனர். அவர் இத்தகைய வரம்பு களற்ற கல்வி முறையைக் கையாண்டு, தமது ஊக்கத்தி னாலுங் குன்றா அன்பினாலும், பெற்ற அறிவு அவர்



அரசியல் துறையை நண்ணிய காலத்தில் அவருக்குப் பேருதவி புரிந்த தென்பது அவருடைய சரிதத்தி லிருந்தே நன்கு விளங்கும்.

பின்பு அவர் வாலிப பருவம் அடைந்தனர். அது காலை அவருடைய குலத்திற்கு இயற்கையாகவுள்ள நற் குணங்கள் அவரை நாடின. பொதுநலச்சேவையே தம் குலத்திற்குச் சிறந்த தொண்டு என்பதை அவர் உணர்ந் தார். ஏழை மக்கள் படுந் துன்பத்தைக் கண்டு அவர் மிகவும் வருந்தினார். அவர்கள் உடையும், உணவும், உறை விடமும், உரிய உரிமையுமின்றி, முதலாளிக ளிடத்திலும், அரசியல் தலைவர்களிடத்திலும் படும்பாடு அவருடைய உள்ளத்தை உருக்கியது. அத்தகைய ஏழை மக்களுக்கே தொண்டாற்ற வேண்டுமென அவர் மனவுறுதி செய்துகொண்டார். அது சமயம் பரம்பரை வழக்கிற்கிணங்க அவர் காடரிச் பிரபு என்றே அழைக் கப்பட்டார்.

பல தேயங்களுக்குப் பிரயாணஞ் செய்து கண் கூடாகக் கண்ட அனுபவத்தினாலேயே கல்வி பெரும் பாலும், முற்றுப்பெறும் என்ற கொள்கை மேனாட்டா ரிடத்தில் உண்டு. அக்கொள்கையைச் செல்வந்தர் கையாளுவது சாதாரணமாக இருக்கின்றது. அக்கொள் கைக் கிணங்க 1848-வது ஆண்டு காடரிச் பிரபு, சர் ஹென்றி எல்லிஸ் (Sir Henry Ellis) என்னும் பெரி யாருடன், இத்தாலியா தேயத்திற்கு அனுப்பப்பட்டார். பிறதேயங்களிலுள்ள ஏழை மக்களின் நிலையையும் நேரில் கண்டறியத் தமக்குச் சமயம் வாய்த்ததேயென அவர் இன்ப மெய்தினார். அப்பிரயாணகாலத்தில் தான் அவர் இராபர்ட் எல்லிஸ் (Robert Ellis) என்னும்

தம்முடைய நெருங்கிய உறவினருடைய நட்பைப்பெற்றார். இத்தாலியா தேயத்தில் முளைத்த இம்மெய்ந் நட்பு நாளேறவேற வளர்ந்து பத்தாண்டுகளுக்குப் பின்னர் காடரிச் பிரபுவுக்கு இந்திய அரசியல் விஷயங்களைப் பற்றி யறியப் பெரும் உதவியை யளித்தது.

நண்பர்களிருவரும் 1849-ம் வருடம் இத்தாலியா, சுவிட்ஸர்லாந்து, பிரான்ஸ் முதலிய நாகரிகம் முதிர்ந்த நல்லிடங்களுக்கெல்லாஞ் சென்று, ஆங்காங்குள்ள ஏழை மக்களின் நிலைமையையும், அவர்களுக்கு உதவிசெய்யத் துணிந்தவர்கள் கையாளும் முறைகளையும், உரிமையாட்சியின் இலக்கணத்தையும் ஆராய்ந்தறிந்தனர். அதே ஆண்டு ஏப்ரல்மாதம் காடரிச் பிரபு பாரிஸ் (Paris) நகரை யடைந்தனர். அப்போது, ஆங்குத் தொடங்கப்பட்டிருந்த தொழிலாளர் இயக்கங்களையும், அத்தகைய சங்கங்களால் தொழிலாளர் பெறும் நன்மைகளையும் அவர் உய்த்துணர்ந்தார்.

இவ்வாறு தமது பிரயாணத்தில் தாமுணர்ந்த உண்மைகளையெல்லாம் ஆங்கிலநாட்டில் நிலைநாட்டவேண்டும் என்ற ஆர்வம் அவருக்குண்டாயிற்று. ஏழை மக்களுக்குப் பொதுவாகவும், தொழிலாளிகளுக்குச் சிறப்பாகவும், தம்மாலியன்ற தொண்டையாற்ற வேண்டும் என அவர் முன்பே கருதியிருந்தார். இவ்வுண்மைகளையுணர்ந்ததும் அவ்வெண்ணம் வலிமையுற்றது.

எனவே, தம்முடைய கருத்துக்களை யெல்லாம் வெளியிட்டுழைக்க அவர் சமயம் பார்த்து நின்றார். மாரிஸ் (Maurice) டாம் ஹியூஜஸ் (Tom Hughes) லட்லி (Ludley) சார்ல்ஸ் கிங்ஸ்லி (Charles Kingsley) முதலியவர்கள் சமூக சீர்திருத்தத்திற்கென, கிறிஸ்



தவ சமய சீர்திருத்தக்காரர்கள் (Christian Socialists) என்னும் இயக்கத்தைத் தொடங்கி, "மக்களுக்குரிய அரசியல் முறை" (Politics for the People) என்னும் வாரப் பத்திரிகையையும் நடத்தி வந்தனர். அப்பத்திரிகையிலே காடரிச் பிரபு தம்முடைய கருத்துக்களையெல்லாங் கட்டுரைகள் வாயிலாக வெளியிட்டு வந்ததுடன், பல தொழிலாளர் இயக்கங்களிலும் அங்கத்தினராகி, தம்மாலியன்ற உதவியைச் செய்துவந்தார். பாரிஸ் நகரத்திலுள்ள தொழிலாளர் இயக்கங்களையும், அவ்வியக்கங்களின் தன்மைகளையும், ஆங்கிலத்தில் எழுதிப் பல சிறு புத்தகங்களாக வெளியிட்டார்.

1851-ம் ஆண்டு காடரிச் பிரபு எர்ல் டி கிரே (Earl de Grey) யின் பௌத்திரியும் காப்டேன் ஹென்றி வைன் (Captain Henry Vyne) என்பவரின் புதல்வியுமான ஹென்ரியட்டா வைன் (Henrietta Vyne) என்னும் பெண்மணியை மணந்தார். அப்பெண்ணரசியார் ஒழுக்கத்திலும், அடக்கத்திலும், இரக்கத்திலும், தலைவன் குறிப்பறிந் தொழுகும் நீர்மையிலும் சிறந்தவர். அரசியல் துறையில் காடரிச் பிரபு கொண்ட கொள்கைகளையே அவ்வம்மையாரும் ஆமோதித்து, அவற்றிற் கிணங்க, அவருடன் ஒத்துழைத்து வந்தார். "பர்த்தாவிற் கேற்ற பதிவிரதை" அப்பெண்மணியே யென்று அனைவரும் அவ்வம்மையாரைப் போற்றினர். அத்தகைய நற்குணங்கள் மிகுந்த அவ்வம்மையாரை மணந்த காடரிச் பிரபு இல்லறத்தை வழுவின்றி நடத்தினார் என்பது அவருடைய சரிதத்திலிருந்தே இனிது விளங்குகின்றது.

# 3. காலத்தின் கடன்

"என் கடன் பணிசெய்து கிடப்பதே" என்ற உண்மையை உணர்ந்த காடரிச் பிரபு 1852-ம் வருடம் பொதுத் தேர்தல் நடந்த சமயம் அரசியல் மன்றத்தின் (Parliament) அங்கத்தினராக வேண்டும் என்று துணிந்து தம்முடைய கொள்கைகளையெல்லாம் விளக்கி ஒரு கட்டுரையை வரையலானார். அக்கட்டுரையில் "உரிமை யாட்சி" என்ற கிளர்ச்சி, பண்டைக் காலத்திலிருந்து தற்காலம் வரையில் எவ்வாறு காலத்திற்கேற்ப மாறி மாறி வளர்ந்த தென்றும், உரிமை யாட்சியென்பது தற்காலம், செல்வந்தர் ஆட்சியையும் அவர்களுடைய அதிகாரத்தையும் ஒழித்தல் என்னுங் கருத்தைக் கொண்ட தென்பதையும், குடிகளின் நன்மைக்காகச் செலுத்தும் ஆட்சியே குடியரசு அல்லது உரிமையாட்சி என்கிற மெய்ம்மையையும், அத்தகைய ஆட்சியை நிலை நாட்டலே தற்காலத்திற் செய்தற்குரிய கடன் என்பதையும் மிகவுந் தெளிவாக அவர் வரைந்துள்ளார்.

அக் கட்டுரையில் அவர் தற்கால அரசியல்களின் இயல்பை நன்கு ஆராய்ந்து "ஐரோப்பாக் கண்டத்து மக்கள் இரு வகுப்பினராகப் பிரிக்கப்பட் டிருக்கின்றனர். ஒரு வகுப்பு ஆளுகின்றவர்களைக் கொண்டது; மற்றொன்றோ ஆளப்படுகின்றவர்களா லாகியது...... எல்லா விடங்களிலும் ஆளுங் கட்சி சிறு பான்மையோர்களடங்கிய செல்வர்களா லாகியது; மற்றொன்றோ



பெரும்பான்மையோ ரடங்கிய ஏழைமக்கள் நிறைந்தது" என்று முடிவு கட்டிக்கூறினார். பின்பு அத்தகைய ஆட்சியே உலகெங்கும் நிறைந்துள்ள தென்னும் உண்மையை யெடுத்துக் காட்டி, செல்வர் ஆட்சி மக்களை ஒருங்கு சேர்ப்பதற்கு மாறாக, ஒருவனை மற்றொருவனிட மிருந்து பிரிக்கின்றது, அன்பையும் சமாதானத்தையும் வளர்த்தற்குப் பதில் வெறுப்பையும் கலகத்தையும் மூட்டுகின்றது," "எல்லாச் செல்வராட்சியும், விலக்கல், பிரித்தல் சுயநலம் பேணல், என்னுங் குறைகளையே குறிக்கின்றன" என்று, அத்தகைய அரசியல் முறையில் அமைந்துள்ள குறைகளை ஓதியுள்ளார்.

பின்னர் அவர் உரிமையைப் பற்றியும், உரிமையாட்சியைப் பற்றியும் வரையுங்கால்"

"தனக்காகவும் ஒரு வகுப்பிற்காகவும், அல்லது நாட்டினருக்காகவும் உரிமையை நாடிய கிரேக் தேயத்தின் கொள்கை 1800-ம் ஆண்டுகளுக்கு முன்னரே மடிந்துவிட்டது" என்றும்,

ஆங்கில மக்களுக்கு புகழைத்தரும் குடியரசு ஒன்றிருக்கிறது. ஆனால், அக்குடியரசின் மக்கள் அடிமைகளை அடித்துவாட்டுஞ் சவுக்கைக் கையிலேந்தி, "நீகிரோ மக்கள் "வஞ்சம்! வஞ்சம்!!" என்று கதறியலற, அவர்கள் இரத்தத்தை உறிஞ்சித் தங்களை உரிமையரசின் குடிகளென்று அஞ்சாது கூறத் துணிகின்றனர். உரிமையைப் பற்றியும் சமத்துவத்தைப் பற்றியும் சகோதரத்துவத்தைப் பற்றியும் பேசத் துணிகின்றனர். அவர்கள் என்னவாயிருப்பினும் உரிமையரசின் குடிகளல்லர்"

என்றும் உரிமையாட்சி யென்பது போலிப்பெயருடன் விளங்குகிறது என்றும் கண்டித்துக் கூறினர்.

தவிர, "ஒவ்வொரு மனிதனும் மானிடக் குலத்தைச் சேர்ந்தவனாக இருத்தலின் தன் நாட்டின் அரசியலிலும், கடன்களிலும், பொறுப்புகளிலும், பாகம் பெறுவதற்கு அவனுக்கு உரிமையுண்டென்றும், அரசியல் நூலிற்சிறந்ததும், பெருமை மிகுந்ததும் அரசியல் நிற்றற் குரிய மாசில்லா அஸ்திவாரமா யிருப்பதும் இவ்வுரிமையே யாகும்" என்றும்,

"எல்லோரும் உரிமை நிறைந்த பொது ஆட்சியின் குடிகளாக வேண்டுமென்றும் வரி செலுத்தும் உரிமையுடன் நில்லாது அரசியலிலும் பங்குபெற வேண்டுமென்றும், பல்லாயிர வேழை மக்கள் பேரவாகொண்டுள்ளார்கள்—குடியரசை நாடும் அம்மக்கள்—கடவுளால் தங்களுக்கு அளிக்கப்பட்ட உரிமையையே வேண்டுகின்றனர்." என்றும் உண்மையான உரிமையாட்சியை விளக்கினர்.

"அரசியல் நூலின் உண்மையான நியதி சுய ஆட்சியிலேயே கிடக்கின்றது" என்று முடிவு கட்டியுங் கூறியுள்ளார்.

ஒற்றுமையை அழித்து வேற்றுமையையே வளர்த்திடும் செல்வந்தர் குலத்துதித்த ஒருவர் இந்நியாய வரம்புகளைப் பற்றியும், ஏழைமக்களின் உரிமையைப் பற்றியும், வரைவது அவருடைய நற்குணத்தையும், மேன்மையையும் விளக்குகின்றது.



மேலோதிய செம்பொருள்களையெல்லாம் தமது கட்டுரையில் தெளிவாக வரைந்து, அதனைத் தம்முடைய நண்பராகிய சார்ல்ஸ் கிங்ஸ்லியினிடம் காடரிச் பிரபு அனுப்பினர். அவர் அதை வாசித்து அக மகிழ்ந்து, அதற்கு "காலத்திற் செய்யும் கடன்" என்னும் மகுடமீந்தார். ஆனால், அக் கட்டுரையை வாசித்த அவருடைய மற்றொரு நண்பராகிய மாரிஸ், ஒரு செல்வந்தர் இக் கட்டுரையை வரைவது, "சமூக சீர்திருத்தத்திற்கும், கடவுளுக்கும், நம்பிக்கைத் துரோகம் செய்வதாகும்" என்று கண்டித்தார். அக் கண்டனத்தைக் காடரிச் பிரபு சிறிதும் பொருட் செய்தாரில்லை. தம்முடைய உள்ளத்திற்கும், அறிவிற்கும், குல வுணர்ச்சிக்கும் முரணாகாத இவ்வுண்மையை வெளிப்படையாக உலகிலோத அவர் சிறிதும் அஞ்சினரில்லை. அக்கட்டுரை, அவர் நாமமின்றி அச்சிடப்பட்ட போதினும், அது அவருடைய மன வுறுதியை நன்கு விளக்கிக் காட்டியது.

அவ்வாண்டு ஜனவரித் திங்கள் அவருக்குப் பேரின்பமூட்ட ஒரு செல்வச் சுதன் தோன்றினன். அவர் அவனுக்கு ஆலிவர்(Oliver)என்ற நாமமிட்டு அக மகிழ்ந்தார். ஏழை மக்களின் உரிமைக்கெனக் கொடுங்கோன் மன்னருடன் பொருத வீரராகிய ஆலிவர் கிராம்வெல் பெரியாரின் இரத்தம் தம்முள்ளும் பாய்ந்தோடுகின்றது என்ற கருத்தை விளக்கவே அவர் தம்முடைய சிறு மைந்தனுக்கு அப்பெயரைச் சூட்டினர் என்பதற்கோ ரையமில்லை.

அரசியல் மன்றத்தின் தேர்தலுக்கு எங்கு நிற்பதென்று அவர் முதலில் கவலைப்பட்டார். ரிப்பனிலேயே நிற்கலாமென்று அவர் விரும்பியும் எர்ல் டி கிரே அதை

விரும்பாமையால் ஹல் (Hull) என்ற நகரில் தேர்தலுக்கு நின்றார். ஆங்கு எதிர்த்து நின்றவர் வயதிலும் அரசியல் அநுபவத்திலும் காடரிச் பிரபுவைவிடப் பெரியவராவர். ஹல் பாக்கட் (Hull Packet) என்னும் பத்திரிகை இவ்வுண்மையைக் குறிக்குங்கால், "அவருக்கு (காடரிச் பிரபுவுக்கு) இருபத்து நான்கு வயதேயாயின; அரசியல் ஞானம் என்கிற பல்லே அவருக்கு முளைக்கவில்லை" யென்று வரைந்தது. தேருதலில் யாருக்கு வெற்றி கிடைக்குமோவென்று காடரிச் பிரபுவும் அவருடைய நண்பர்களும் கலக்க முற்றனரெனினும், இறுதியில் அவரே வெற்றி பெற்றார். இவ்வாறு வெற்றி பெற்றும் காடரிச் பிரபு, இலஞ்சமளித்தே வெற்றி பெற்றார் என்று அவருடைய விரோதிகள் தொடுத்த வழக்கால், அவர் நான்குமாத மளவும் தம்முடைய அரசியல் மன்றத்தின் அங்கத்தினர் பதவியை இழக்க நேர்ந்தது.

எனினும், 1853-ம் ஆண்டு ஹட்டர்ஸ்பீல்டு (Huddersfield) என்ற இடத்தில் மறுபடியும் தேருதலுக்கு நின்றார். ஆங்கு, அவருடைய எதிரிகளால் அவர், "தம்முடைய குலத்தைக் கெடுக்கவந்த கோடரிக் காம்பென்றும், அது பற்றியே அவருடைய குடும்பத்தினர் அவரைக் குடும்பத்தினின்றும் விலக்கிவிட்டனர் என்றும், ஹல் நகரில் இலஞ்சமளித்துத் தேர்தலில் வெற்றி பெற்றமையால் அரசியல் மன்றத்தினின்றும் விலக்கப்பட்டார் என்றும்" பழித்துரைக்கப்பட்டனர். ஆயினும், அவர் இறுதியில் தேர்தலில் பெரும் வெற்றி பெற்று, அரசியல் மன்றத்தின் அங்கத்தினராக ஆறு ஆண்டுகள் வீற்றிருந்து, அழியாப் புகழெய்தினார்.

## 4. அரசியல் மன்றம்

அரசியல் மன்றத்தின் அங்கத்தினராகக் காடரிச் பிரபு ஆறாண்டுகளே வீற்றிருந்தார். எனினும், அவ்வாண்டுகளுள் அவர் அரசியல் நிபுணர் என்ற பெயரைப் பெற்றார். தம்முடைய இருபத்தாறாம் ஆண்டு அம்மன்றத்தை அடைந்த அவர் தமக்கு முப்பத்திரண்டாம் ஆண்டு நிறைவதன் முன்னர், அத்தகைய புகழைத் தாங்கியது அவர் திறமையைக் குறிக்கின்றது.

ரஸ்ஸல் பிரபு (Lord Russel) சீர்திருத்தச் சட்டத்தை (Reform Bill) கொண்டுவருவதாக வாக்களித்ததும், காடரிச் பிரபு உடனே விசேஷ உரிமை (Franchise) யைக் குறிக்கும் விஷயத்தைப்பற்றி ஆராயத் தொடங்கினார். அவ் வாராய்ச்சியின் இறுதியில் அவர் அடைந்த முடிவு, 'காலத்தின் கடன்' என்னுங் கட்டுரையில் அவர் அதே விஷயத்தைப் பற்றிக்கொண்ட முடிவிற்கு முரண்பட்டது. கற்றோரும் மற்றோரும், ஏழையுஞ் செல்வந்தனும், அரசியலில் பங்குபெற வேண்டும் என்று முன்பு அக்கட்டுரையில் முடிவு கட்டினாரல்லவா! அவர், அவ்விஷயத்தைப்பற்றி நுண்ணிய விஷயங்களைத் தெளிவாக உணர்ந்த பின்னர், "விசேஷ உரிமை கல்வி யறிவு வாய்ந்தவர்களையே பொறுத்தது" என்ற முடிவிற்கு பின்பு வந்தது நியாயமாகவே இருக்கின்றது. அரசியல் மன்றத்தை அடைவதன் முன்னர், அவர் கொண்ட கொள்கை இவ்வாறு மாறி

யது அவர் ஆங்குப்பெற்ற அநுபவத்தினாலேயே யாகும்.

அதைப்போலவே தொழிலாளர்கள் விஷயத்திலும் அவருடைய கொள்கை பெரிதும் மாறுண்டது. அவ்வாறு அவருடைய கொள்கை மாறியது அவருக்கு ஏழைமக்கள் மாட்டுள்ள அன்பு குன்றியதினாலன்று. தொழிலாளர் இயக்கங்களினால் தொழிலாளர்கள் எய்திடவல்ல நன்மைகளை விடப் பன்மடங்கு நன்மைகளை வேறு வழியில் அவர்கள் எளிதில் கொள்ள இயலும் என்பதை யுணர்ந்தே அவர் இம்முறையை நாடினார் என்பதற்குச் சந்தேகமில்லை. "முதலாளிகளைக் கொண்டே, தொழிலாளர்களுக்கு நன்மை நல்கிட வேண்டும்" என்று அது சமயம் அவர் தம்முடைய நண்பராகிய டாம் ஹியூஜஸ் என்பவருக்கு எழுதினார். அதனால் அவருடைய கருத்து நன்கு விளங்குகின்றது.

தொழிலாளர்களுடைய கஷ்டங்களை யெல்லாம் ஒழிப்பதற்கும், முதலாளிகளுக்குந் தொழிலாளர்களுக்குந் தொன்று தொட்டிருந்த பகையை அழிப்பதற்கும், அவ்வழியே நல்வழியென அவருக்குத் தோன்றியது. ஒவ்வொரு வியாபாரத்திலும் தொழிலாளர்களாலும், முதலாளிகளாலும், நம்பிக்கையுடன் தெரிந்தெடுக்கப் பட்ட சில முதலாளிகளையுந் தொழிலாளிகளையுங் கொண்ட சங்கமொன்று நிறுவப்படவேண்டும் என்ற எண்ணம் அவருக்குதித்தது. அச்சங்கம் முதலாளிகளுக்கும் தொழிலாளர்களுக்கும், பொதுவாக இருத்தலால், இருதிறத்தினர் உரிமைகளுக்கும் இடைஞ்சல் நேரிடாவண்ணம் காரியம் நடப்பதன்றி, வேலை நிறுத்



தம், கலகம், விரோதம் முதலியவை விளையுங் காலத்தில் அந்தக் குறைகளும் நீங்கும் என்றும் அவர் உணர்ந்தார்.

மேலும், வியாபாரத் துறையில் பங்காளர்களைச் சேர்க்கும் உரிமையும் அக்காலத்தில் இல்லாதிருந்தது. அத்தகைய உரிமையைப் பெறுவதற்குக் காடரிச் பிரபு அரசியல் மன்றத்தில் மிகவும் உழைத்தார். அக்கருத்தைச் சட்டவாயிவாக அமைத்தற்கு அவர் 1854-ம் ஆண்டு 'பங்காளர் சட்ட சீர்திருத்தம்' என ஒரு சட்டத்தையும் 1858-ம் ஆண்டு 'பங்காளர் ஒப்பந்த சட்டம்' என மற்றொரு சட்டத்தையும் கொண்டுவந்தார்.

மேலோதிய இரண்டு சீர்திருத்தங்களையும் முதல் முதலில் கொண்டுவந்தவர் காடரிச் பிரபுவே யாவர். அவருடைய காலத்திலேயே அவ்விரண்டும் சட்டங்களாகி அமுலுக்கு வரவில்லையெனினும், அவருக்குப் பின் வந்தோர் அவ் விருமுறைகளுந் தொழிலாளர்களுக்கு ஆற்றவல்ல நன்மைகளை யுணர்ந்து அவைகளைச் சட்டங்களாக்கினர்.

இயற்கையிலேயே யுத்தங்களில் காடரிச் பிரபுவுக்கு ஒருவாறான நம்பிக்கையுண்டு. "நாம் யுத்தஞ் செய்ய நேரிடின் எம்முறையிலும் நாம் பின்வாங்கலாகாது; சில லௌகிகத் தீங்குகளுக்கஞ்சி நாம் நம்முடைய கடனையாற்றாது ஒழியலாகாது" என்ற அவருடைய மொழிகளே யுத்தத்தைப் பற்றிய கருத்தை வலியுறுத்துகின்றன. யுத்தத்தால் விளையுந் தீங்குகளையும் கஷ்டங்களையும் உயிர்ச் சேதங்களையும் பொருட் செலவையும் அவர் உணர்வாரெனினும், யுத்

தங்கள் இன்றியமையாதவை என்ற கருத்தையே அவர் கொண்டவர். 1854-ம் ஆண்டு ரஷ்யா(Russia)வி னுடன் யுத்தம் தொடங்கியது. காடரிச் பிரபுவுக்கு அந்த யுத்தம் நியாயமான யுத்தமென்றே தோன்றியது. அவருடைய கருத்துக்கிணங்க, ரஷ்ய ஆட்சி குடிகளின் நலத்தை நாடாத கொடுங்கோல் ஆட்சியாகவே இருந்தது; ரஷ்யதேயத்து மன்னவனோ குடிகளின் உரிமையைக் கனவிலுங் கருதாத கொடிய வேந்தனாக இருந்தான். அத்தகைய மன்னவனுடன் பொருது, அவனுடைய கொடுங்கோல் அரசை முறித்துக் குடிகளுடைய நன்மையை நாடல் நியாயமென்றே அவருக்குத் தோன்றியது. வியாபாரம், சமூக உரிமையாட்சி முதலிய சீர்திருத்தங்களில் காடரிச் பிரபுவினுடைய கருத்து அரசியல் மன்றத்தின் அங்கத்தினராயின பின் பெரும்பாலும் மாறியதெனினும், யுத்தத்தைப் பற்றி அவர்கொண்ட கருத்துக் கடுகளவும் மாறிற்றில்லை.

அது சமயம் காடரிச் பிரபுவினுடைய மனைவியார் மிகவும் வியாதியாக விருந்தார். அவ்வம்மையாரைப் பிரனீஸ் (Pyrennes) என்னும் மலையடிவாரத்திலுள்ள அல்ஸனோ (Alsono) என்னும் நல்லிடத்திற்கு அழைத்துக்கொண்டு போகவேண்டுமென்று வைத்திய சிரோமணிகள் கூறினர். எனவே, காடரிச் பிரபு அரசியல் மன்றத்தின் முதல் கூட்டங் கலைந்ததும் தம்முடைய மனைவியாருடன் அந்நல்லிடஞ் சார்ந்தார்.

ஆங்கு, அவர் சாதாரண செல்வந்தர்கள்போலும், அரசியல் மன்றத்தின் போலி அங்கத்தினர்களைப்



போலும், வாளா காலங்கழித்தாரில்லை. ஓய்வு நேர்ந்த காலங்களில் அரசியல் முறைகளைப் பற்றியும், சமூக வியாபார, விசேஷ உரிமைமுதலிய விஷயங்களைப் பற்றியும், ஓயாது சிந்தித்தும் அவைகளுக்குரிய அரிய நூற்களை வாசித்தும், ரஷ்ய யுத்தத்தைக் கூர்மையாகக் கவனித்தும் வருவாராயினர்.

அவ்வாண்டின் இறுதியில் கிரீமியா (Crimea)வில் யுத்தஞ் செய்துகொண்டிருந்த ஆங்கிலசேனை உணவின்றி வாடியது. அதனைச் செவியுற்றதும், அல்ஸனோவிலிருந்த காடரிச் பிரபுவினுடைய உள்ளம் உருகியது. உணவின்றிப் பசியால் வருந்தும் யுத்தவீரர்களுக்கு உதவிசெய்ய வேண்டுமென்று அவர் எண்ணினார். மற்றவர்களுடைய நன்மைக்காக, உயிரையும் மதியாது, யுத்தஞ்செய்யத் துணியும் யுத்தவீரர்கள் அந்த யுத்தத்தில் உணவுமின்றி வாடியதை எண்ணுந்தோறும் சேனை விஷயத்தில் சீர் திருத்தங்கள் பல செய்திடல் வேண்டுமென்று அவருக்குத் தோன்றியது. எனினும், அவருடைய மனைவியாரின் தேக அசௌக்கியம் அவர் உடனே ஆங்கிலதேயம் செல்லவும் அவர் உன்னிய சீர்திருத்தங்களை அரசியல் மன்றத்தில் கொண்டுவாராதவாறும் தடுத்தன. அதன்பின்னர், இராணுவச் சீர்திருத்தங்களின் அவசியத்தை இந்த ரஷ்யயுத்தம் அவருக்கு நன்றாக விளக்கியது.

## 5. இந்திய உணர்ச்சி

காடரிச் பிரபுவின் அன்னை வழியில்வந்த தாதையாகிய பக்கிங்காம்ஷயர் எர்ல் (Earl of Buckinghamshire) இந்திய அரசியல் நிபுணர். அவர் சென்னை இராஜதானியின் கவர்னராக இருக்கையில், அவருடைய அன்பும், நேர்மையும், அந்த இராஜதானியின் வாசிகளுடைய உள்ளத்தைக் கொள்ளைகொண்டன. அக்காலத்தில் ஆங்கிலநாட்டுச் சீமானும், வேறு ஜாதியிற் பிறந்தவருமாகிய அவர் அநாகரிகரென்றும், அறிவிலாக் கயவரென்றும் ஆங்கில அறிவிலிகளால் தூற்றப்பட்ட இந்திய மக்கள்மாட்டு அன்பைப் பூண்டு, அவர்களுக்கு நேர்ந்த துன்பம் தமக்குற்றதெனக் கருதும் பெருந்தகையாளர் அவரொருவரே என்று கூறினும் மிகையாகாது. பல்லாயிர மக்களை நீதிவழுவாது ஆளுதற்கு வேண்டிய அரசர்களுக்குரிய இயல்புகளெல்லாம் அவர்பால் பொலிந்தன.

அக்காலத்தில், இந்தியாவை அரசாண்டுவந்த நிபுணர்கள் அரசியலைப்பற்றிச் சிறிதும் உணராதவர்கள். கிழக்கு இந்திய கம்பெனியார்(East India Company)களுக்கு வியாபாரக் கொள்கையே முக்கிய கொள்கையாகும். பொருளீட்டுவதிலேயே கண்ணுங் கருத்துமாகவிருந்த அப்பேதையர்கள், ஆங்கிலநாடு அநாகரிகம் என்னும் அந்தகாரத்தில் ஆழ்ந்திருக்கையில் ஆன்ம உணர்ச்சியோடியைந்து அரிய நாகரிகத்தின் நல்லிடமாகத் துலங்கிய பாரததேயத்தைக் கொள்ளவும்,



அத்தேயத்தையாளவும் அவர்கள் விரும்பினார்களில்லை. அக்காலத்தில் இந்தியாவில் பலிந்துகிடந்த சரக்குகளைக் கையாண்டு பெருஞ் செல்வங்கொள்ள விரும்பிய அன்னார்களுக்கு இந்தியாவை யாளுவது பெருந்தொல்லையாகவே இருந்தது.

இக்கெடுதிகளையும் கம்பெனியின் முக்கிய நோக்கத்தையும் உணர்ந்த பக்கிங்காம்ஷயரின் எர்ல், இந்தியாவின் அரசியலை, உண்மையான அரசியலாக மாற்றவும், அத்தேயத்தின் மக்களின் நலத்தைத்தேடவும், அவர்களுடைய உரிமைகளின் பாதுகாப்பை நாடவும், அத்தேயகதின் வியாபாரத்தை அவனியெங்கும் பரப்பவும், ஆங்கில மன்னரே இந்தியாவின் மன்னராக இருக்கவும் வேண்டும் என்ற கருத்தை ஒருநூற்றாண்டுக்கு முன்னரேயே வெளிப்படையாக உரைத்துள்ளார்.

காடரிச் பிரபு பிறப்பதற்குப் பதினொரு ஆண்டுகளுக்கு முன்னரே, இந்திய உரிமையை நாடிய பெருந்தகையாளராகிய பக்கிங்காம்ஷயரின் எர்ல் இறந்துபட்டார். ஆயினும், இந்தியாவின் அரசியலைப்பற்றி, காடரிச் பிரபுகொண்ட கொள்கைகளுக்கு, அவரே முதற் காரணராவார். காடரிச் பிரபு தமது இளமைப்பருவத்தைப் பக்கிங்காம்ஷயரின் எர்லினுடைய மாளிகையிலேயே கழித்தனர். முதன்முதலில் கல்வியென்னுங் கருந்தனத்தை அவர் கைக்கொண்டதும் அப்பெரியாரின் நல்லிடத்திலேயே வாகும். பக்கிங்காம்ஷயரின் எர்ல், சென்னை இராஜதானியின் கவர்னராக இருக்கையில் இந்தியாவுக்குப் பல நன்மைகள் புரியக் கருதியிருந்தார். அவ்வன்பின் அறிகுறிகள் இளமைப்பருவத்தி

லேயே காடரிச் பிரபுவுக்கு இந்தியாவின்மீது ஓர் ஆர்வத்தை யுண்டாக்கியது.

மேலும், சர் ஹென்றி எல்லிஸ் (Sir Henry Ellis), இராடர்ட் எல்லிஸ் (Robert Ellis) என்னும் இரண்டு நெருங்கிய உறவினருடன் அவர் மிகவும் நெருங்கிப்பழகினார். சர் ஹென்றி எல்லிஸ் பக்கிங்காம் ஷயர் எர்லின் ஏக புதல்வராவர். இராபார்ட் எல்லிஸ் இந்தியாவில் அரசாங்க உத்தியோகம் வகித்திருந்தார். இவ் விருவர்களுடனும் காடரிச் பிரபு பூண்டநட்பு இந்தியாவின் மாட்டு இயற்கையிலேயே அவருக்கிருந்த ஆர்வத்தைப் பெருக்கியது. ஓய்ந்த நேரங்களிலெல்லாம் அவர் இந்திய சரிதத்தையும், இந்திய அரசியலைப் பற்றிய விஷயங்களையும் ஓதி யுணர்ந்து வந்தார். அவருடைய நண்பர் இராபர்ட் எல்லிஸ் 1844-ம் ஆண்டு இந்தியாவுக்குச் சென்றது முதல் இந்திய அரசியலைப் பற்றியும், இந்தியர்களுடைய இயல்புகளைப் பற்றியும் அடிக்கடி காடரிச் பிரபுவுக்கு லிகிதவாயிலாக அறிவுறுத்தி வந்தார்.

ஆகையால், இந்திய சிப்பாய் கலகமும், அக்கலகத்தில் நிகழ்ந்த அட்டூழியங்களும், அகோர சித்திரவதைகளும், கொடூர ஸ்திரீ, சிசு கொலைகளும், அவருக்கு அச்சத்தையும் ஆச்சரியத்தையும் விளைவிக்கவில்லை. அக் கலகத்தைப்பற்றிய விஷயங்களை யுணர்ந்த அரசியல் மன்றத்தின் அங்கத்தினர்கள், இடியுண்ட நாகம்போல் கலங்கினர். இந்திய மக்கள் சிப்பாய்களுடன் கூடி "உரிமை! உரிமை!" யென்று இந்தியாவில் கதற, ஆங்கில தேயத்திலிருந்த ஆங்கிலப்



பெரியோர்கள் இந்தியர் செய்வன வெல்லாம் "வஞ்சம் வஞ்ச" மென்று கதறினர்.

அது காலை, பிரதான அமைச்சராக இருந்த பாமர்ஸ்டன் பிரபு (Lord Palmerston) கம்பெனியின் கொடிய ஆட்சியே இந்திய சிப்பாய் கலகத்திற்குக் காரணமென உணர்ந்து கம்பெனியின் ஆட்சியை ஆங்கில ஆட்சிக்கு மாற்றுதற்குரிய முறைகளைத் தேடலாயினர். ஆனால், அவருடைய எண்ணம் ஈடேறுவதன் முன்னர், தம்முடைய அமைச்சர் பதவியை அவர் இழக்க நேர்ந்தது. அதனால், அவருக்குப் பின்னால் அவருடைய பதவியை யடைந்த டேர்பி பிரபு (Lord Derby) யின் காலத்திலேயே இந்திய கம்பெனியின் ஆட்சி ஆங்கில ஆட்சியாக மாறியது.

காடரிச் பிரபு இந்தியாவைப்பற்றித் தாம் உணர்ந்த உண்மைகளின் உதவியால் இந்திய உரிமையைப் பற்றியும் இந்திய ஆட்சியின் அமைப்பைப் பற்றியும் ஒருவகை நம்பிக்கையுடனும், மெய்யன்புடனும், நுண்ணிய அறிவுடனும், சமயம் வாய்த்தபோதெல்லாம் அரசியல் மன்றத்தின் அங்கத்தினர்களுக்கு அறிவூட்டத்தொடங்கினர்.

"ஒரு புதிய அரசாங்கத்தை இந்தியாவில் அமைப்பது மிகவுங் கடினம்" என்று அவர் உணர்வாராயினும், தம்மால் இயன்றவரையில் இந்தியாவிற்குத் தொண்டாற்றத் துணிந்தார்.

"தேயத்தின் தனிமையும் அத்தேய மக்களின் ஒழுக்க நேர்மையும், அவர்களுடைய உயர்ந்த நாகரிகத்தின் இயல்பும் இந்தியாவிற்குச் செல்லும் வழிப்போக்க

னின் உள்ளத்தில் உடனே பதிவுறுகின்றன" என்று இந்தூரில் (Indore) இருந்து காடரிச் பிரபுவுக்கு அவருடைய நண்பர்களில் ஒருவராகிய லேயார்ட் (Layard) என்பவர் ஒரு கடிதமெழுதினார். அந்தக்கடிதம் இயற்கையிலேயே அவருக்கு அத்தேயத்தின்மீதிருந்த அன்பையும், மதிப்பையும் பெருக்கியது. இந்திய அரசியலை அமைப்பது மிகவுங் கடினமென்று உணர்ந்த அவர் இந்திய சபை (India Council) யைச் சரியான நீதி வரம்புகளிட்டு அமைத்திடின் இந்திய ஆட்சி தானாகவே ஒழுங்குபடுமென்பதை உணர்ந்தார். அரசியல் மன்றத்திற்குப் பல்லாயிர காதங்களுக்கு அப்பாலுள்ள ஒரு தேயத்தில் அம்மன்றத்திற்கு இடையூறில்லாமல் சகல உரிமைகளுடன் கூடிய ஓர் அரசாங்கத்தை அமைப்பதே நன்றென அவர் உன்னினார்.

அக்கருத்தை மற்ற அங்கத்தினர்களுக்கும் அறிவுறுத்தக் கருதி அவர் அதனைப் பன்முறை அரசியல் மன்றத்தில் எடுத்தோதினார். இந்திய சபையைப்பற்றியும் அச்சபையின் இலக்கணத்தைப் பற்றியும் 1858-ம் ஆண்டு ஜூன் மாதம் 15-ம் நாள் அரசியல் மன்றம் சிந்திக்கலாயிற்று. ஒரு பாதி தெரிந்தெடுக்கப்பட்டவர்களாலும் (Elected members) மற்றொரு பாதி குறித்தெடுக்கப்பட்டவர்களாலும் (Nominated members) ஆகிய ஒரு இந்திய சபையை அமைக்கவேண்டுமென்று அரசியல் மன்றத்தின் அங்கத்தினர்களும், ஆங்கில அரசாங்கத்தினரும் தீர்மானித்தனர். இது காடரிச் பிரபுவின் தீர்மானங்களுக்கும், கருத்துக்களுக்கும் மாறாக இருந்தது. காடரிச் பிரபுவோ குறித்தெடுக்கப்பட்ட



வர்களாலுந் தெரிந்தெடுக்கப்பட்டவர்களாலும் அமைக்கப்பட்ட இந்தியசபை நீதி வழுவாது இந்திய அரசியலை நடாத்துவதற்குரிய சபையாகாது என்றறிவார். ஆதலால், மேலோதிய இந்தியசபை அமைப்பில் தெரிந்தெடுக்கும் நியதி நலமுறாது என்னும் உண்மையை பன்முறையெடுத்தோதினார்.

தவிர, இந்திய அரசியலுக்குப் பொறுப்பானவர்களை அமைச்சரே குறித்தெடுத்து அச்சபையை அமைத்தல் வேண்டும் என்று முடிவுகட்டிக் கூறினார். அவர் எடுத்துக் காட்டிய நியாயங்களை யோர்ந்த அரசியல் மன்றத்தின் மற்ற அங்கத்தினர்களும், அவர் கருத்தை ஆமோதித்தனர். எனவே, இறுதியில் ஆங்கில அரசாங்கம், குறித்தெடுக்கப்பட்டவர்களாலும், தெரிந்தெடுக்கப்பட்டவர்களாலும் இந்தியசபை அமைக்கப்படுதல் வேண்டும் என்ற சட்டத்தின் பகுதியை விலக்கினர். ஆனால், இந்தியாவிற்குரிய அரசியல் காரியதரிசியாலும் கீழ் இந்தியக் கம்பெனியாரின் (East India Company) முதலாளிகளாலும் (Directors) குறித்தெடுக்கப்பட்டவர்களையே இந்தியசபை கொள்ள வேண்டுமென்று தீர்மானித்தனர். இம்முறையும் இந்திய அரசியலின் நலத்தை நாடாததொன்றாக இருந்தமையால், இச்சட்டத்திற்குப் பதிலாக இந்திய சபையின் அங்கத்தினர்கள் இந்திய அரசியல் காரியதரிசியினாலேயே (Secretary of State for India) குறித்தெடுக்கப்படவேண்டும் என்ற சட்டமும் ஏற்படுத்தப்பட்டது. காடரிச் பிரபு முதன்முதலில் கொண்ட கருத்தும் நிறைவேறியது. இந்திய விஷயங்களைப்பற்றிய பொறுப்பை

அரசியல் மன்றத்தினின்றும் பெரும்பாலும் நீக்கிய அவர் அந்தப் பொறுப்புகளையெல்லாம் இந்திய அரசாங்கத்திற்கே அளித்தல் வேண்டுமென்று தீர்மானித்தனர்.

அதுகாலை, இந்தியாவில் பெரும்பாலும் இராஜரிக விஷயங்களை உணராதவர்களே இராஜரிகத் தலைவர்களாகவும் இந்தியமக்களை ஆளும் உரிமையை உடையவர்களாகவும், ஜில்லாக்களின் கலெக்டர் (Collector)களாகவும் இந்தியாவில் அமர்த்தப்பட்டிருந்தனர். கம்பெனிக்கு வேண்டியவர்களுக்கும், அல்லது கம்பெனியின் அங்கத்தினர்களுடைய உறவினர்களுக்கும், அவர்களுடைய நண்பர்களுக்குமே அப்பதவி அளிக்கப்பட்டுவந்தது. அரசியலைப் பற்றியும் நீதிநெறிகளைப் பற்றியும் அறியாத அன்னோர்களை, அதிகாரிகளாகவும் கலெக்டர்களாகவும், அமர்த்துவதினால் நேரிடுந் தீங்குகளைக் காடரிச் பிரபு நன்றாக உணர்வார். இந்திய சிப்பாய் கலகத்தின் காரணங்களில் அத்தகைய கொடிய ஆட்சியும் ஒன்றாகுமென்றும் அவர் உணர்வார். இக்குறையை நீக்க அரசியல் மன்றத்தில் இராஜரீக உத்தியோக சட்டம் (Civil Service Reform) என்னுஞ் சட்டத்தைக் கொண்டுவந்தார். அச்சட்டம் இந்தியாவில் கலெக்டர்களாக இச்சைகொள்ளும் ஆங்கிலர்கள் அரசியலைப் பற்றிய ஒரு போட்டிப் பரீக்ஷையில் தேற வேண்டுமென்பதை வற்புறுத்தியது. கம்பெனியின் அங்கத்தினர்கள் தங்களுடைய இஷ்டம்போல் தங்களுடைய உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் இப்பதவியை யளித்துவந்தன ரல்லவா? அப்பழக்கத்தை இச்சட்டம் முறித்தொழித்தது. 1857-ம் ஆண்டு இச்சட்டம் அமுலுக்கும் வந்தது.



இந்திய விஷயத்திலும் அரசியலிலும் காடரிச் பிரபு காட்டிய அறிவும், ஆர்வமும், அவருக்குப் பெரும் புகழை அளித்தன. இயற்கையிலேயே இந்தியாவின் மாட்டு அவருக்கிருந்த ஆர்வமும், இந்திய மக்களுடைய உரிமையைப் பற்றிய எண்ணமும், இருபதாண்டுகளுக்குப் பின்னால், அவர் இந்தியாவின் இராஜப்பிரதிநிதி (Viceroy) யாகிய காலத்தில், அவருக்குப் பேருதவியாக விருந்தன. இந்திய விஷயங்களைப்பற்றி அரசியல் மன்றத்தில் அவர் காட்டிய நுண்ணறிவால் கிலாட்ஸ்டன் (Gladstone) பிரபுவின் நட்பை அவர் பெற்றனர். அதுசமயம் அரும்பிய இந்நட்பு இறுதிவரையில் அவ்விருவர்களையும் பிணித்து நின்றது.

காடரிச் பிரபு அரசியல் மன்றத்தில் தெரிந்தெடுக்கப்பட்ட அங்கத்தினராக ஆறாண்டுகளே இருந்தனர். ஆயினும் அவ்வாண்டுகளுள் அவர் எய்திய பெயரும், புகழும் மற்றெந்த அங்கத்தினரும் அதுகாறும் தம்முடைய இளவயதில் கொண்டாரில்லை.

# 6. இல்லற வாழ்க்கை

1859-ம் ஆண்டு ஜனவரி மாதம் 23-ம் நாள் காடரிச் பிரபுவினுடைய தந்தையாராகிய ரிப்பனின் எர்ல் (Earl of Ripon) இறந்துபட்டமையால் காடரிச் பிரபுவே ரிப்பனின் எர்ல் ஆயினார். எர்ல் ஆனதும் காடரிச் பிரபு பொது அரசியல் மன்றத்தை (House of Commons) விட்டு, பிரபுக்களின் அரசியல் மன்றத்தை (House of Lords) அடைந்தார்.

அவ்வாண்டு முடிவதன் முன்னர், எர்ல் டி கிரேயும் (Earl de Gray) விண்ணுலகெய்தியமையால் அந்த ஜமீனும் காடரிச் பிரபுவையே அடைந்தது. அன்று முதல் காடரிச் பிரபு டி கிரே ரிப்பன் எர்ல் என்று அழைக்கப்பட்டனர். ஆயினும், டி கிரே ஜமீன் ரிப்பனைவிட மிகவும் பழமையான ஜமீன் ஆதலால் சுருக்கமாக அவர் டி கிரே என்றே அழைக்கப்பட்டார்.

இம் மாறுதல்களெல்லாம் அவருடைய அரசியல் கட்சியில் வேற்றுமையை யுண்டாக்கவில்லை யெனினும், அவருடைய இல்லற வாழ்க்கையில் பெரும் மாறுதல்களை விளைவித்தன. அவருடைய தந்தையார் உயிருடன் இருக்கையில் அவர் தம்முடைய இல்லறத்தை ஓர் இடத்தில் நிலையாய் நடாத்தினாரில்லை. அவருடைய வருமானமும் வரையறுக்கப்பட்டிருந்தது. அவர் தமக்கென ஒரு தனிமாளிகையும், தமக்கு வேண்டிய பணியாளர்களையும், தம்முடைய தந்தையினிடமிருந்தும்



பெறாதது ஆச்சரியமாகவே இருக்கின்றது. தம்முடைய பெற்றோர்களுக்கு அவர் ஏக புதல்வராகவும், செல்வச் சுதராகவும் இருந்தும், அவருடைய இல்லற வாழ்க்கையை அவர்கள் நன்கமைக்காதது வியப்பையே அளிக்கின்றது. அவர் தமது குலத்திற்கும் செல்வந்தர் மரபிற்கும் முரணான கொள்கையுடையவர். அவைகளே பெரும்பாலும் இவற்றிற்குக் காரணமென்று கூறலாம். செல்வச் செருக்கற்று அவர் ஏழைமக்களின் உரிமையை நாடியதும், செல்வாட்சியை முறியடிக்க அவர் எண்ணியதும், தொழிலாளர்கள் மாட்டு அவர் பேரன்பு காட்டியதும், அவருடைய பெற்றோர்க்கு வெறுப்பை உண்டாக்கின போலும்! அதனால், அவர் நாடோடி போல ஓரிடத்திலும் நிலைத்திராது, அவருடைய தந்தையாரின் நாட்டு மாளிகைகளில் மாறி மாறிக் காலங்கழிக்க நேர்ந்தது; ஆயினும், அவருக்குத் தம்முடைய தாய் தந்தையர்கள் மாட்டிருந்த அன்பும் மரியாதையும் எள்ளளவும் குறையவில்லை. அவர் அடிக்கடி தம்முடைய மனைவியாருடன் தம்முடைய தாய் தந்தையர்களைக் கண்டும், அவர்களுடைய மாளிகையில் சின்னாள் தங்கியும் வந்தார். அவ்வமயங்களில், அவருடைய அன்னையாரின் செய்கையும், அவருடைய தந்தையாரின் முன் கோபமும், அவருக்கும் அவருடைய மனைவியாருக்கும் பெருந் துயரத்தை விளைவித்தன. அவர் தம்முடைய பெற்றோர்களைக் காணச் சென்ற சமயங்களிலெல்லாம் குடும்ப சச்சரவே நடந்து வந்தது. அவருடைய மனைவியார் செல்வச்சீமாட்டியா

கப் பிறந்திடினும், கணவன் குறிப்பறிந்தொழுகும் நீர்மை மிகுந்தவள். அதனால் தம்முடைய கணவனின் பெற்றோர் தம்மைப்படுத்திய கொடுமைகளையெல்லாம் அவ்வம்மையார் பொருட்செய்யவில்லை. தம்முடைய அன்னையும் பிதாவும் தம்மையும் தம்முடைய மனைவியையும், பலவாறு இம்சித்தலைக் காடரிச் பிரபுவும் சிறிதும் பொருட்செய்யவில்லை. அவருக்கு அவருடைய பெற்றோர்மீது கோபமும் வெறுப்பும் உண்டாகவுமில்லை. "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" என்ற அறமொழியையும், "தாய்சொற் றுறந்தால் வாசக மில்லை" "தந்தைசொன் மிக்க மந்திர மில்லை" என்னும் மெய்யுரைகளையும் அவர் நன்குணர்ந்தவர். இயற்கையிலேயே அவர்கள்மீது அவருக்கிருந்த அன்பு அளவு கடந்ததாகையால், அவர்கள் யோசியாது இழைக்கும் இன்னல்களை அவர் ஒரு சிறிதும் பொருட் செய்யவில்லை. அவருடைய மனைவியாரும் மற்றச் செல்வச் சீமாட்டிகளைப்போல் அவருடைய தாய் தந்தையர்மீது குற்றஞ்சாட்டி அவர் அவர்களை வெறுக்குமாறு செய்தவரல்லர். காடரிச் பிரபு இறுதிவரையில், தம்முடைய பெற்றோர்களை உள்ளன்புடன் நேசித்து வந்தார். அரசியல் மன்றத்தில் அரசியல் நிபுணர் என, தம் இளமையிலேயே பெயரெடுத்த அவருடைய இல்லறவாழ்க்கை அமைதியில்லாது துன்ப மிகுந்திருந்தது வருந்தத்தக்கதே யாகும்.

ஆனால், அத்துயரம் அன்பு நிறைந்த தம்முடைய இல்லாளாலும், நட்புமிகுந்த மெய்யன்பர்களாலும், மழலைச் சொற்களால் பேரின்ப மூட்டும் குழந்தைகளாலும் பெரிதும் மாறினது. அவருடைய மனைவியாராகிய



டி கிரே அம்மையார் (Lady de Gray) அவருடைய தாயாகவும், தாரமாகவும், தாதியாகவும், இருந்து அவருக்குப் பேரின்ப மூட்டினர். அவ்வம்மையுடன் கூடி, அவர் தனிமையில் நடத்திய இல்லறவாழ்க்கை அவருக்குப் பேரின்பத்தை யூட்டியது. அப்பெண்ணணங்கை அவர் மணந்த நாளிலிருந்து அவ்வம்மையார் அவரைத் தெய்வம்போலப் போற்றி வந்தனர்; அவருடைய வாக்கே தெய்வவாக்கென மதித்து நின்றனர்; அவருடைய கொள்கைகளையெல்லாம் முழு நம்பிக்கையுடன் தம்முடைய கொள்கைகளாகக் கொண்டு விளங்கினர்; அவருடைய நண்பர்களைத் தம்முடைய நண்பர்களெனப் போற்றி வந்தனர். அத்தகைய நல்லொழுக்கம் நிறைந்த அச்சீமாட்டியை அவருடைய நண்பர்கள் பெரிதும் போற்றினர். அறிவிலும் வயதிலும் வளர்ந்து வந்த அவருடைய அருஞ்சுதன் அவருடைய துயரங்களையெல்லாம் பெரிதும் மாற்றி வந்தான்.

"இன்பமுந் துன்பமும் ஒருவழி நில்லா"வென்பது உலக வழக்கு. உலகிடை யுதித்தமக்கள் இறப்பது திண்ணமாகவே இருக்கின்றது. "இன்றைக்கிருப்போரை நாளைக்கிருப்பரென் றெண்ணவோ இடமில்லையே" என்றே அறிஞர்களனைவரும் முடிவிற்கு வந்திருக்கின்றனர். இறப்பு என்கிற துயரமேகம் டி கிரேயின் குடும்பத்தையும் அவருடைய நண்பர்களுடைய குடும்பங்களையும் மறைக்கலாயிற்று. 1857-ம் ஆண்டு அவருக்குப் பிறந்த மேரி சாரா (Mary Sarah) என்னும் பெண் மகவு ஓராண்டிற்குள் உயிர்நீத்தது. அவருடைய அந்தரங்க நண்பர்களுள் ஒருவராகிய ஹியூ

ஜஸ் என்பவருடைய மகள் 1856-ம் ஆண்டு இறந்து படுகையில் டி கிரே கொண்ட துயரத்திற்கோ ரளவில்லை. மூன்றாண்டுகளுக்குப் பின்னால் அவருடைய மற்றொரு நண்பராகிய புரூஸ் (Bruce) என்பவர் தம்முடன் பிறந்த சோதரியை இழந்தனர். அப்போது டி கிரே "ஒரு சகோதரியின் அன்பை நானறியேனெனினும், நீ கூறுவதுபோல் அவ்வளவு அன்பு நிறைந்த ஒரு சோதியை இழக்க நேர்ந்த துயரத்தின் கொடுமையை நான் உணர்வேன்" என்று வரைந்த லிகிதமே அந்த நண்பர்களிடையில் மலிந்து நின்ற அன்பை வெளிப்படுத்துகின்றது.

டி கிரே, டாம் ஹியூஜஸ்(Tom Hughes) என்பவருடன் கொண்ட நட்பு மெய்ந் நட்பாகும். அவர்களிருவரும் வெவ்வேறு குலத்திற் பிறந்தவர்கள்; பேதமிகுந்த வழக்கங்களைக் கொண்டவர்கள்; ஆயினும், மெய்ந் நட்பால் பிணிக்கப்பட்ட அவர்கள் ஓருயிரும், ஈருடலும்போல் இருந்து வந்தனர். டி கிரே தமக்கு இடுக்கண் நேர்ந்தபோதெல்லாம் ஹியூஜஸையே அணுகுவது வழக்கம். அவர்களுக் கிடையில் இரகசியமென்பதே இல்லாமலிருந்தது. அரசியல் விஷயங்களில் டி கிரேவுக்குச் சந்தேகங்கள் நேர்ந்தபோதெல்லாம், அவர் ஹியூஜஸின் ஆலோசனையையே நாடி வந்தார்.

டாம் ஹியூஜஸ் லேயார்ட் (Layard), புரூஸ் (Bruce), பார்ஸ்டர் (Forster), முதலியவர்களுடைய நட்பையும், மாரிஸ் (Maurice) கார்லைல் (Carlyle) இராபர்ட் சீசில் (Robert Cecil) முதலிய பெரியார்களின் நட்பையும் பெற்றிருந்தார். எனினும், டாம்



ஹியூஜஸுடன் அவர் கொண்ட நட்புச் சகோதர வாஞ்சையுடனும், மெய்யன்புடனும், பிணிக்கப்பட்டிருந்தது.

இல்லற வாழ்க்கையின் இன்பத்தை ஒருவாறு இழந்த அவர், அவ்வின்பத்தை ஒழுக்கம் மிகுந்த தம்முடைய இல்லாளிடத்தினின்றும், புதல்வனிடத்தினின்றும், டாம் ஹியூஜஸைப் போன்ற மெய்யன்பர்களிடத்தினின்றும் பன்மடங் கதிகமாகப்பெற்றார்.

## 7. அரசியல் அமைச்சர்

தம்முடைய தந்தை இறந்துபட்டமையால் டி கிரே பிரபு பொது அரசியல் மன்றத்தை (House of Commons) விட்டு, பிரபுக்கள் அரசியல் மன்றத்தில் (House of Lords) அமர நேர்ந்தது. இல்வாழ்க்கையிலும் இதர விஷயங்களிலும் அவர் சிறிது மாறிட நேர்ந்ததெனினும் அரசியல் துறையில் அவர் கொண்ட கொள்கைகள் சிறிதும் மாறவில்லை. எனவே பாமர்ஸ்டன் பிரபு (Lord Palmerston) 1859-ம் ஆண்டின் இடையில் புதிய அரசியலை அமைக்கையில் டி கிரே பிரபுவை அரசியல் யுத்த உதவிக் காரியதரிசியாக (Under Secretary of State for War) இருக்கவேண்டினார். டி கிரே பிரபுவிற்கு இயற்கையிலேயே யுத்தங்களின் மேலுள்ள பற்று ருஷ்ய (Russia) யுத்த சமயத்தில் விளங்கியது. அதேசமயத்தில் இராணுவச் சீர்திருத்தத்தில் அவர் கொண்ட ஊக்கமும், காட்டிய நுண்ணறிவும் மேலோங்கிய இப்பதவிக்கு அவரைத் தகுதியுடையவராக்கின. தாம் விரும்பியவாறு இராணுவச் சீர்திருத்தங்களையெல்லாஞ் செய்யச் சமயம் வாய்த்ததென்று கருதி டி கிரே பிரபு பாமர்ஸ்டன் பிரபுவின் வேண்டுகோளுக்குடனே இணங்கினார்.

இச்செய்தியை யுணர்ந்த மான்ஸ்பீல்ட் (Mansfield) என்பவர் ஸிம்லா (Simla) விலிருந்து "பொதுநலத்தைக் கோரியும் என் சார்பாகவும் நீர் யுத்த இலாகாவில் (War Department) அரசியல் உத்தியோகத்தை ஒத்துக்கொண்டதற்காக அக மகிழ்கின்றேன்" என்று டி கிரே பிரபுவுக்கு லிகிதம் வரைந்தார். இத்தகைய கடிதங்கள் பல டி கிரே பிரபுவுக்கு வந்தன. அவைகளைக் கண்ணுற்ற அவர் தம்மால் இயன்றவரையில் இராணுவத்தைச் சீர்திருத்த வேண்டுமென்று உறுதி செய்துகொண்டார். எனினும், அப்பதவியை நெடுநாள் அவர் வகிக்க இயலாது போயிற்று.

அதுகாலை, சிட்னி ஹெர்பட் (Sidney Herbut) என்னும் பெரியார் அரசியல் யுத்த காரிய தரிசியாக (Secretary of State for War) இருந்தார். 1860-ம் ஆண்டின் இறுதியில் அவர் ஒரு பிரபுவாயினார். டி கிரே பிரபு, முன்பே பிரபுக்கள் அரசியல் மன்றத்தவராயிருந்தார். அரசியல் காரியதரிசியும் (Secretary of State) உதவிக் காரியதரிசியும் (Under Secretary of State) பிரபுக்கள் அரசியல் மன்றத்தவர்களாய் இருத்தலாகாதென்றும், அவர்களுள் ஒருவரேனும் பொது அரசியல் மன்றத்தில் (House of Commons) இருத்தல் வேண்டுமென்றும் ஓர் ஏற்பாடு வழக்கில் இருந்துவந்தது. எனவே, சிட்னி ஹெர்பட் பிரபுவாக ஏற்படுத்தப்பட்டதும், டி கிரே பிரபு யுத்த அரங்கத்திலிருந்து உதவிக் காரியதரிசியாக இந்திய அரங்கத்திற்கு (India Department) மாற்றப்பட்டார்.

ஆனால், அவர் அரசியல் யுத்த உதவிக் காரியதரிசியாயிருக்கையில் அவர்பற்றிய நெறியும், ஆற்றிய தொண்டும் அரசியல் ஞானிகளின் மதிப்பையும் நட்பையும் பெற்றன. ஆதலால், அவர் யுத்த அரசாங்கத்தை நீத்து இந்திய அரங்கமேறியும்,

"சமயம் வாய்த்தபோதெல்லாம் அவரை மறுபடி யுத்த இலாகாவில் அமர்த்தல் வேண்டும்" என்று ஹியூபர்ட் (Hubert) என்னும் பெரியார் பாமர்ஸ்டன் பிரபுக்கு வரைய, அவர்.

"நீர் டி கிரே பிரபுவைப்பற்றிக் கூறுவது என்னுடைய சொந்த அபிப்பிராயத்தை யொட்டியே இருக்கின்றதென்று பதிலிறுத்தனர். இது தவிர, விக்டோரியா (Victoria) மகாராணியின் கணவராகிய ஆல்பர்ட் (Albert) மன்னரும்,

"உதவிக் காரியதரிசியாக இருக்கையில் அனைவரும் புகழத் தம்முடைய கடனையாற்றிய டி கிரே பிரபுவின் உதவியை யுத்த அரசாங்கம் இழந்ததென்று நாம் வருந்த முறுகின்றோம்; நம்முடைய இராணுவமும் மிகவும் வருத்தமுறுகின்றது," என்று வரையலாயினர். இங்கு எடுத்துக்காட்டிய விஷயங்கள் டி கிரே பிரபு இராணுவ விஷயங்களுள் காட்டிய ஊக்கத்தை இனிது விளக்குகின்றன.

டி கிரே பிரபு அரசியல் இந்திய உதவிக் காரியதரிசியாக நெடுநாள் இருக்கவில்லை. அரசியல் யுத்த காரியதரிசியாகிய சிட்னி ஹெர்பட் பிரபு இறந்தமையால் அப்பதவி காலியாகியது. அப்பதவியில் டி கிரே பிரபுவை அமர்த்துவதே மிகவும் நன்றாகும் என்று பலர் எண்ணினார்கள். எனினும், அப்பதவி பொது அரசியல் மன்றத்திலிருப்பவர்களாலேயே வகிக்கப்பட வேண்டுமென்று ஒரு கிளர்ச்சி அரசியல் மன்றத்தில் உண்டா



யிற்று. சர் ஜார்ஜ் கார்னிவால் லூயிஸ் (Sir George Cornewall Lewis) யுத்த அமைச்சராக (War Minister) அமர்த்தப்பட்டார். இந்திய உத்தியோகத்திலிருந்த டி கிரே பிரபு மீண்டும் யுத்த இலாகாவில் உதவிக் காரியதரிசியாயினார்.

அவர் உதவிக் காரியதரிசியாக வெளிப்படையாக அமர்த்தப்பட்டிருந்தும், உண்மையில் யுத்த விஷயங்களை அவரே பார்த்துவந்தார். பேருக்கு அரசியல் காரியதரிசியாக விருந்த சர் ஜார்ஜ் கார்னிவால் லூயிஸ் எல்லா விஷயங்களையும் டி கிரே பிரபுவினிடத்திலேயே ஒப்படைத்துவிட்டார். எனவே, டி கிரே பிரபு தம்முடைய இஷ்டம்போல் இராணுவத்தை ஒழுங்குபெறச் சீர்திருத்தினார்.

1863-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் யுத்த அமைச்சராகிய சர் ஜார்ஜ் கார்னிவால் லூயிஸ் மடிந்துவிட்டார். மறுபடியும் யுத்த இலாகாவின் தலைவர் பதவி காலியாகியது. பொது அரசியல் மன்றத்தில் பலர் அப்பதவிக்கு அம்மன்றத்தவர் ஒருவரையே அமர்த்த வேண்டுமென்று பிதற்றினார்கள். ஆனால், டி கிரே பிரபுவின் தொண்டுகளையெல்லாம் கவனித்துக்கொண்டே வந்த பாமர்ஸ்டன் பிரபு டி கிரே பிரபுவை அரசியல் யுத்த காரியதரிசியாக அமர்த்துவதே நன்றென்றுன்னி, அப்பதவியை வகிக்குமாறு அவரை வேண்டினார். எனவே, டி கிரே பிரபுவும் அப்பதவியைச் சில மாதங்கள் வகித்துத் தம்முடைய விரோதிகளுந் தம்மைப் புகழுமாறு நடந்துவந்தார்.

சில ஆண்டுகளுள் புதிய அரசாங்கத்தில் பிரதானியாக இருந்த பாமர்ஸ்டன் பிரபு விண்ணுலகேகினார். பின்பு ரஸ்ஸல் பிரபு பிரதான மந்திரி ஆயினார். மற்ற அரசியல் மந்திரிகளும் உதவி அமைச்சர்களும் பாமர்ஸ்டன் பிரபுவின்கீழ் முன்பு வகித்திருந்த பதவிகளையே வகித்திருந்தனர். டி கிரே பிரபுவும் அரசியல் யுத்த காரியதரிசியாகவே இருந்துவந்தார்.

1865-ம் ஆண்டு பிப்ரவரி (February) மாதம் 2-ம் நாள் இந்திய அமைச்சராக இருந்த ஸர் சார்ல்ஸ் உட் (Sir Charles Wood) என்னும் பெரியார் தம்முடைய பதவியை இராஜிநாமா செய்துவிட்டு, பிரபுக்கள் அரசியல் மன்றத்தை யடைந்தார். அப்பதவியை வகிக்குமாறு டி கிரே பிரபு வேண்டப்பட்டார். பரத கண்டத்தின் மீது இயற்கையிலேயே அன்பு மிகுந்த டி கிரே பிரபு இதற்கு முன்னரே சில மாதங்கள் இந்திய அரசாங்கத்தில் உதவிக் காரியதரிசியாக இருந்து இந்தியாவிற்குத் தம்மால் இயன்ற உதவியை ஆற்றியுள்ளார். ஆதலின், டி கிரே பிரபு மீண்டும் இந்தியாவுக்குத் தம்மால் இயன்ற உதவியைச் செய்யச் சமயம் வாய்த்ததென்று அகமகிழ்ந்தார். ரஸ்ஸல் பிரபுவின் அரசியல் (Russell Ministry) அதேவருடம் ஜூன் மாதம் முடிவுற்றமையால், அப்பதவியை அவர் ஐந்து மாதங்களே வகித்தார். அப்பொழுது ஸர் ஜான் லாரேன்ஸ் (Sir John Lawrence) இந்திய இராஜப்பிரதிநிதியாக விருந்தார். அவரும் இந்தியர் மாட்டு மிகவும் அன்பு கொண்டவர்; இந்தியர்களுக்கு அரசியலில் சில உரிமைகளை அளிக்கவேண்டுமென்று போராடியவர். அவருடைய



கருத்தும் டி கிரே பிரபுவின் கருத்தும் ஒரேமாதிரி இருந்தமையால் அவர்கள் இருவருக்கும் நட்பு மிகுந்தது.

டி கிரே பிரபு இந்திய அமைச்சராக இருக்கையில், ஆப்கானிய யுத்தம் (Afghan War) குடிக்கூலிச் சட்டம், ஒரிசா பஞ்சம் ஆகிய மூன்று விஷயங்களையும் அவர் கவனிக்க நேர்ந்தது.

அவைகளுள் ஆப்கானிய யுத்தத்தில் எந்தப் பக்கமுஞ்சேராது வாளா கிடத்தலே நன்றென இராஜப்பிரதிநிதியாகிய லாரன்ஸ் (Lawrence) எண்ணினார். டி கிரே பிரபுவும் அந்தச் சமயத்தில் அவ்விஷயத்தைப்பற்றித் தெளிவாக அறியாராதலால் லாரன்ஸ் நாடிய பொதுவழியே நல்வழி யென்றெண்ணினார்; அன்றியும், நில உரிமையின்றி, நிலத்திற் குரியவர்களால் இடிப்புண்டு குடிக்கூலிக்கிருக்கும் ஏழை மக்களுக்கும் உதவி செய்ய வேண்டுமென் றெண்ணினார். அதற்கு ஒரு சட்டத்தை யுண்டாக்க வேண்டுமென்று சர் ஜான் லாரன்ஸ் கொண்ட எண்ணமே மிகவும் உயர்ந்ததென வுன்னி டி கிரே பிரபுவும், அதை யாமோதித்தார். இறுதியில் ஒரிசா பஞ்சம் அவருக்குப் பெருங்கவலையை யளித்தது. பஞ்சத்தை ஒழிப்பதற்குப் புகைவண்டி மார்க்கங்கள் மிகவும் அமைக்கப்பட வேண்டுமென்று அவர் உணர்ந்தார். ஆயினும், பதினைந்து ஆண்டுகளுக்கப்பால் அவர் இந்திய இராஜப்பிரதிநிதியானார். அவர் கொண்ட எண்ணம் அக்காலத்தில்தான் ஒருவாறு ஈடேறியது.

மேலோதிய மூன்று விஷயங்களிலும் டி கிரே பிரபுவும் ஸர் ஜான் லாரன்ஸும் ஒரே கருத்தை உடை

யவர்களாக இருந்தனர். அவர்களுடைய கருத்தின் ஒற்றுமை அவர்களை ஒருங்கு சேர்த்தது. இந்திய அமைச்சராக டி கிரே பிரபு அமர்ந்திருக்கையில் ஏற்பட்ட இந்திய அநுபவங்கள், அவர் பதினைந்து ஆண்டுகளுக்குப் பின்னர் இந்திய இராஜப்பிரதிநிதியானதும், அவருக்குப் பேருதவியாக விருந்தன. ஆப்கானிய யுத்தம் முடிவுற்றதும், குடிக்கூலியர்கள் உரிமைபெற்றதும், பஞ்சங்களின் கொடுமை ஒடுங்கியதும் அவர் இராஜப்பிரதிநிதியாக இந்தியாவில் அமர்ந்தபின்பே யென்பது இச்சரித்திரத்திலிருந்தே இனிது விளங்கும். அவர் இந்திய உதவி அமைச்சராக இருக்கையில முளைத்த இந்திய உரிமை என்னும் மரம், இந்திய அமைச்சரா யிருக்கையில் ஓங்கி வளர்ந்து இந்திய இராஜப்பிரதிநிதியாகப் பொலியுங்கால், இந்திய உரிமைச் சட்டங்களாகப் பூத்துக் காய்த்து, அவருக்கு அழியாப் புகழையும் மாறில்லா அன்பையும் உண்டாக்கின.

ஐந்து மாதங்களுக்கப்பால் ரஸ்ஸல் அரசியல் முடிவுற்றது. டேர்பி-டிஸ்ரேயிலி (Derby-Disraeli) அரசியல் ஆரம்பமாகியது. அவ்வரசியலும் இரண்டு ஆண்டுகளுக்கப்பால் முடிவுற்றது. உடனே கிலாட்ஸ்டன் (Gladstone) தம்முடைய அரசியலை அமைத்தார். அவ்வரசியலில் டி கிரே பிரபு அரசியல் சங்கத்தலைவராக (President of the Council) அமர்த்தப்பட்டார். அப்பதவியை அவர் வகித்ததும், மான்ஸ்பீல்ட் (Mansfield) என்னும் தம்முடைய நண்பருக்கு, "சில நாட்களாகக் கல்வி விஷயத்தைப் பற்றி நான் யோசித்து வந்தேன். இப்பொழுது அவ்விஷயம் மிகவும் முக்கியமாகவும்,



உடனே கருதற்குரிய விஷயமாகவு மிருக்கின்றது" என்று வரைந்தார். அரசியல் சங்கத்தலைவராக இருக்கையில் கல்வித்துறையில் பல சீர்திருத்தங்களைச் செய்ய வேண்டுமென்று அவர் தீர்மானித்தார். அத்தீர்மானங்களையெல்லாம் தடையின்றிச் செய்துமுடிக்கத் தமக்கு அவகாசம் நேரிடும் என்றும் அவர் எண்ணியிருந்தார். எனவே, தரும பள்ளிக்கூடச் சட்டம் (Endowed Schools Act) கல்விக்கழக பரீக்ஷைச் சட்டம் (University Tests Act) பாலபோத கல்விச் சட்டம் (Elementary Education Act) முதலிய மூன்று சட்டங்களையும் அவர் அரசியல் மன்றத்தில் கொண்டுவந்தார். அச்சட்டங்கள் அரசியல் மன்றத்தில் ஆராயப்பட்டும் ஆமோதிக்கப்பட்டும் சட்டங்களாவதன் முன்னர் அமரிக்க உள்ளூர் யுத்தத்தை (American Civil War) அவர் கவனிக்க நேர்ந்தது.

அந்தயுத்தத்தைச் சமாதான வாயிலாகவே அடக்க வேண்டுமென்பது அரசியல் வர்க்கத்தவரின் துணிபாகும். டி கிரே பிரபு அரசியல் யுத்த அமைச்சராக இருக்கையில் அவருக்குள்ள நுண்ணறிவையும், விரோதிகளையும் தம் வயப்படுத்தும் சொல்வன்மையையும், உணர்ந்த பலர் இந்தச் சமாதானத்திற்கு டி கிரே பிரபுவையே அனுப்ப வேண்டுமென்று தீர்மானித்தனர். அமரிக்கப் பெரியார்களுள் சிலரையும், ஆங்கில அரசியல் நிபுணர்களுள் சிலரையும் சேர்த்து, ஒரு சங்கமமைத்து அச்சங்கத்தில் இரு திறத்தினரும் ஒருங்கு கூடி யோசித்து, சமாதானத்தை நிறுவ வேண்டுமென்று அவர்கள் முடிவுக்கு வந்தனர். அத்தகைய சமாதா

னத்தை நயத்துடன் நிறுவவல்லார் டி கிரே பிரபுவே என்பதறிந்த கிலாட்ஸன், இங்கிலாந்திலிருந்து அந்தச் சமாதானத்திற்கெனத் தெரிந்தெடுக்கப்பட்ட சங்கத்திற்கு டி கிரே பிரபுவையே தலைவராக அமர்த்தினர். 1870-ம் ஆண்டு பிப்ரவரி (February) மாதம் 9-ந் தேதி டி கிரே பிரபு ஆங்கில தேயத்திலிருந்து ஆங்கில கமிட்டியின் தலைவராக அக்கமிட்டியுடன் நியூ யார்க் (New York) நகரத்திற்குப் பிரயாணமாயினர். அதுவே யாண்டு எப்ரல் (April) மாதம் சமாதான உடன்படிக்கைகள் ஏறக்குறைய இருதிறத்தினராலும் அங்கீகரிக்கப்பட்டனவென்ற செய்திவந்தது. மே (May) மாதம் 8-ந் தேதி வாஷிங்டன் உடன்படிக்கையில் (Treaty of Washington) அவர்கள் கையொப்பமுமிட்டனர்.

அவ் வுடன்படிக்கை விஷயத்தில் டி கிரே பிரபு காட்டிய திறமை ஆங்கிலர்களாலும் அமரிக்கர்களாலும் போற்றப்பட்டது. அநாவசிய யுத்தத்திற்கும், யுத்தத்தின் கொடுமைகளுக்கும் உயிர்ச் சேதங்களுக்கும், திரவிய விரயத்திற்கும் முட்டுக்கட்டை யிட்டு, சமாதானத்தை நிறுவிய டி கிரே பிரபுவை அவருடைய விரோதிகளும் புகழ்ந்தனர். அந்தச் சமாதானத்தில் அவர் காட்டிய திறமையையும், ஆற்றியதொண்டையுங் கருதி மார்குஉஸேட் (Marquisate) என்ற பட்டம் அவருக்கு அளிக்கப்பட்டது. அன்று முதல் அவர் மார்குயஸ் ஆப் ரிப்பன் (Marquis of Ripon) என்னும் மகுடந் தாங்கினர்.

அதுவே யாண்டு ஆக்ஸ்போர்ட் கல்விக்கழகம் (Oxford University) அவருக்கு டாக்டர் ஆப்



சீவில் லா (Doctor of Civil Law) என்ற கௌரவ பட்டத்தை யளித்தது.

வாஷிங்டன் உடன்படிக்கை முடிவுற்றதும் ரிப்பன் பிரபு (Lord Ripon) கல்விச் சட்டங்களைப்பற்றிய தீர்மானத்தை மறுபடியும் அரசியல் மன்றத்தில் கொண்டுவந்தார். அச்சட்டத்தால் அரசியல் சங்கத்தில் (Cabinet) எண்ணிறந்த விரோதிகள் அவருக் கேற்பட்டனர். 1873-ம் ஆண்டு மார்ச்சு (March) மாதம் ஐரிஷ் கல்விக்கழகச் சட்டத்தை (Irish University Bill) கிலாட்ஸ்டன் அரசியல் மன்றத்தில் கொண்டு வருகையில் அவர் தோல்வியடைந்தமையால், ரிப்பன் பிரபு முன்போலவே அரசியல் சங்கத்தலைவராக அமர்த்தப்பட்டார். அவ்வரசியலும் 1877-ம் ஆண்டு ஜூலை மாதம் 24-ம் நாள் முடிவுற்றது. உடனே டிஸ்ரேலி (Disraeli) அரசியல் அமைக்கப்பட்டது. அவ்வரசியல் 1880-ம் ஆண்டு வரையில் அனைவரும் போற்ற நடந்துவந்தது.

அரசியல் தொல்லைகள் நீங்கினதும் "நான் பொறுப்புகளற்று உரிமையுடையவனாக மாறியதற்காக மனமகிழ்கின்றேன்" என்று ரிப்பன் பிரபு ஆநந்தக் கடலாடினர்.

## 8. ஆன்ம உணர்ச்சி

அரசியல் துறையிலிருந்து விலகியதும் ரிப்பன் பிரபு, சிலகாலம் ஓய்வுடன் மதவிஷயங்களை ஆராயத் தொடங்கினார். 1867-ம் ஆண்டு அவருடைய அன்னையார் மடிந்ததும் அவர் துக்க மிகுதியால் மத ஆராய்ச்சியால் அத்துயரத்தை மாற்ற எண்ணினாரெனினும், அரசியல் கவலைகள் மதத்தின் நுட்பத்தை உய்த்துணர அவருக்கு அவகாசமளியாது தடுத்தன. சில நாட்களுக்குப் பின்னர், தம்முடைய மெய்யன்பர்களுள் ஒருவரும், கிறிஸ்துவ சமூக சீர்திருத்தச் சங்கத்தின் தலைவரும், கல்வி கேள்விகளில் சிறந்தவருமாகிய மாரிஸ்(Maurice) என்னும் பெரியார் மரித்தார். 'இன்பமும் துன்பமும் இயைந்ததே உலகம்' என்பதை ரிப்பன் பிரபு உணர்வாரெனினும், உலக வாழ்க்கையில் சமாதானமார்க்கத்தை மதப்பற்றாலும், மத உணர்ச்சியாலும், உணரலாமென்னும் நம்பிக்கை அவருக்கு மிகவும் இருந்தது. மேலும், ஈருடலும் ஓருயிரும்போல் இடைவிடாது இளமையிலிருந்தே நெருங்கிப்பழகிய மெய்யன்பரும், சந்தேகம் நேர்ந்த சமயங்களிலெல்லாம் நல்லறிவுணர்த்திய உத்தம நண்பருமாகிய டாம் ஹியூஜஸ் என்னும் பெரியாரும் ரிப்பன் பிரபுவைவிட்டுப் பல காதங்களுக்கப்பால் வேலையினிமித்தம் வசிக்கலானார். தாயையிழந்த துயரமும், ஆபத்தில் உதவும் நண்பரை இழந்த வருத்தமும், மெய்யன்பரைப் பிரிந்த துக்கமும் அவரை வருத்தலாயின. பின்பு, அரசியல் துறையிலும் அவருக்கு ஓய்வு நேர்ந்தமையால் அவர் மதவிஷயங்களை ஆராயத்



துணிந்து நியூமேன் (Newman) என்னும் பெரியாரின் நூற்களை ஊக்கத்துடன் வாசிக்கலாயினார்.

அவ்வாறு அவர் சிலமாதங்கள் ஓயாது மதங்களின் உண்மையை நுகர்ந்து, பரமனிடத்தில் மெய்யன்பையும் விசுவாசத்தையும் பெற்றாலன்றித் தம்முடைய மதமாகிய பிராடெஸ்டண்ட் (Protestant) கொள்கை இனிது நிறைவேறாது என்று எண்ணினார். ஆனால், நியூமென் என்னும் பெரியாரின் நூற்களை ஓதவோத ரோமன் கத்தோலிக் (Roman Catholic) மதத்தில் அவருக்கு அதிகப் பற்றுண்டாயிற்று. நாளேறவேற அப்பற்று வளர்ந்து உண்மையான மதவுணர்ச்சியாக மாறியது.

தம்முடைய உள்ளத்திற்கும், தம்முடைய அறிவிற்கும் ஏற்ற அம்மதத்தைப் பற்றுவதே நன்றென அவருக்குத் தோன்றியது. அக்காலத்தில், ரோமன் கத்தோலிக் மதத்தினருக்கு அரசியலில் பதவி அளித்தலாகாதென்று அரசாங்கக்கட்டளை இருந்தது. எனவே, அரசியல் துறையில் ஈடுபட்டிருந்தவர்களெல்லாம் பிராடெஸ்டண்டு மதத்தைச் சேர்ந்தவர்களாகவே இருந்தனர். அரசியல் துறையில் பல ஆண்டுகளளவும் பெரும் பதவிகளையெல்லாம் வகித்த ரிப்பன் பிரபு, அதுகாறும் பிராடெஸ்டண்டு கொள்கையினராகவே இருந்தார். அவருடைய நண்பர்களும் அரசியல் தோழர்களும் அதே கொள்கையைப் பற்றினவர்களாகவே இருந்தனர்.

அவ்வாறு தாம் மதமாறிடின் தம்முடைய நண்பர்களும் அரசியல் தோழர்களும், தம்மைப்போன்ற

செல்வந்தர்களும் தம்மை இகழ்ந்துரைப்பரென்பதை ரிப்பன் பிரபு நன்கறிவார். எனினும், தம்முடைய உள்ளத்துக்கும், அறிவுக்கும் இயைந்த மதத்தைக் கைக்கொள்ளலே மிகச் சிறந்ததென்று அவருக்குத் தோன்றியது. தம்முடைய உற்றார் உறவினர் நண்பர்கள் அரசியல் தோழர் முதலியவர்களின் வெறுப்பு அவரைச் சிறிதும் தடுக்கவில்லை. உலகமே தம்மை வெறுத்திடினும் ரோமன் கத்தோலிக் ஆவதே உசிதமென்றெண்ணி 1874-ம் ஆண்டு செப்டம்பர் (September) மாதம் ரோமன் கத்தோலிக் ஆயினார். பத்திரிகைகள் பல அவரைப் போற்றியுந் தூற்றியும் ஆர்ப்பரித்தன. அவருடைய நண்பர்களும் அவரிடம் நெருங்கிப் பழகுதலை விட்டனர். கிலாட்ஸ்டன் இவ்விஷயத்தை யுணர்ந்ததும், இம்மத மாற்றம், "ஒருவர் தம்முடைய இராஜபக்தியையும் கடமையையும் ஒழித்து மற்றொருவருடைய கருணைக்கு உரிமைப் படுவதுபோலாம்" என்று இகழ்ந்துரைத்தார். அம் மதத்தவர்கள் ரோமன் கத்தோலிக் மதத்தலைவராகிய போப்புக்கு அடங்கியே நடக்கவேண்டும் என்னும் நியதியை உணர்ந்தே கிளாட்ஸ்டன் அவ்வாறு அவருக்கு லிகிதம் வரைந்தார்.

இவ்வாறு தம்முடைய நண்பர்களுடைய இழிமொழியையும், அரசியல் தோழர்களுடைய பழிமொழியையுந் தாங்கிய ரிப்பன் பிரபு, அவைகளைச் சிறிதும் பொருட் செய்யாது, அரசியல் பதவிகளை நீத்து அமலனை அன்புநெறி நின்று ஆராதித்து வந்தார்.

170652

## 9. இந்திய இராஜப்பிரதிநிதி

டிஸ்ரேலியின் அரசியல், (Disraeli Ministry) ஆறு ஆண்டுகள் அரசியல் நெறிவழுவாது நீடித்திருந்து 1880-ம் ஆண்டு முடிவுற்றமையால், அவ்வாண்டு பொதுத் தேர்தல் நடந்தேறியது. அத்தேர்தலில் வெற்றிபெற்ற கிளாட்ஸ்டன் (Gladstone) அரசியலை அமைத்தார். அவ்வரசியலில் ரிப்பன் பிரபு இந்தியாவின் இராஜப்பிரதிநிதியாக அமர்த்தப்பட்டார்.

அதுகாறும் ரோமன் கத்தோலிக் (Roman Catholic) மதத்தினர் அரசியலில் உயர்ந்த பதவிகளை வகிக்கலாகாது என்ற ஏற்பாடு இருந்தது. ஆயினும், ரிப்பன் பிரபு பலவாண்டுகளாக, உயர்ந்த அரசியல் பதவிகளை வகித்து நடத்திய அவரது திறமையையும், சிறப்பாக இந்தியாவின் அரசியல் காரியதரிசியாகவும், அரசியல் உதவிக் காரியதரிசியாகவும் இருந்து இந்தியாவுக்கு ஆற்றியதொண்டையும், யுத்த இலாகாவில் அரசியல் காரியதரிசியாகவும், அரசியல் உதவிக் காரியதரிசியாகவும் அமர்ந்து நிறுவிய இராணுவச் சீர்திருத்தங்களையும் உன்னி, அவருடைய மதபேதத்தைக் கருதாது, ஏகமனதுடன் புதிய அரசியலிலும் அவரையே இந்திய இராஜப்பிரதிநிதியாக அமர்த்த வேண்டுமென்று அரசியல் தலைவர்கள் தீர்மானித்தனர்.

புதிய அரசியலில் தம்மை இராஜப்பிரதிநிதியாக அமர்த்தியதை யுணர்ந்த ரிப்பன் பிரபு, அரசியல் ஏற்

பாட்டிற்கும் விரோதமாக அரசியல் தலைவர்கள் தம்மை இராஜப்பிரதிநிதியாக அமர்த்தினார்களே என்று ஆச்சரியமும், இந்தியாவின் அரசியலில் இந்தியர்களுக்கு உரிமையை ஒருவாறு வழங்க அமயம் வாய்த்ததே யென்று ஆநந்தமு மெய்தினர்.

மேலும், இந்திய இராஜப்பிரதிநிதியாக அமர்த்தப்பட்டவர்களுள் நார்த்புருக் பிரபு (Lord Northbrook) டப்பரின் பிரபு (Lord Dufferin) லாண்ட்ஸ்டௌன் பிரபு (Lord Landsdowne) கர்ஸன் பிரபு (Lord Curzon) என்னும் நால்வரும், இந்திய அரசியலில் உதவி அமைச்சர் பதவியை வகித்திருந்தனர். ஆனால், அரசியல் உதவி அமைச்சர் பதவியுடன் இந்திய அரசியல் அமைச்சர் பதவியையும் வகித்த இராஜப்பிரதிநிதி ரிப்பன் பிரபு ஒருவரேயாவர்.

ஏப்ரல் (April) மாதம் 28-ந் தேதி அவர் இராஜப்பிரதிநிதியாக அமர்த்தப்பட்டார் என்ற செய்தியை யுணர்ந்ததும், இந்துதேய பக்தன் (Hindu Patriot) என்னும் புகழ் மிகுந்த கல்கத்தா (Calcutta) நகரின் வர்த்தமானப் பத்திரிகை,

"ரிப்பன் பிரபுவினுடைய பல்வேறு அநுபவங்களாலும், இந்திய அரசியலில் சிறந்த பள்ளியில் அவர் அடைந்த பழக்கங்களாலும், நாம் நம்பக்கூடிய மனிதராக அவரைக் கருதுகின்றோம்......உயர்குடியில் பிறந்தவரும், பொது ஜனத்தலைவராக அவரைப்போன்ற நிலைமையில் உள்ளவரும் உள்ளொளியின் வன்மையினாலேயே தம்முடைய குலமதங்களை மாற்றக்கூடும்.



அத்தகைய உள்ளொளியின் வன்மை மிகுந்த ஒருவர் வாயில்லாப் பலகோடி ஏழை இந்திய மக்களுக்கு நியாயமளியாதிரார்" என்று வரைந்து ரிப்பன் பிரபுவை வரவேற்றது.

இந்திய உரிமையைப் பற்றிச் சிறப்பாகவும் இந்திய விஷயங்களைப் பற்றிப் பொதுவாகவும் அவர் தமது இளமையிலிருந்தே பல்லாண்டுகள் அரசியல் மன்றத்தில் பேரன்பு காட்டிவந்தார். அதை அறிந்த எண்ணிறந்த இந்தியர்கள் அவர் இந்தியாவுக்குச் செய்யும் நன்மையைப் பேராவலுடன் எதிர்பார்த்து நின்றனர்.

# 10. ஆப்கானிய வழக்கு

ரிப்பன் பிரபு இராஜப்பிரதிநிதியாக இந்தியாவை யடைந்ததும் முதல் ஆறுமாதங்களளவும் அவர் ஆப்கானிய வழக்கைக் கவனிக்க நேர்ந்தது. அந்த வழக்கு அவருக்குப் பெருங்கவலையை அளித்து நின்றது.

ஷா ஷூஜா (Shah Shuja) என்னுங் காபுல் (Kabul) தேய மன்னவன், 1809-ம் ஆண்டு, தன்னுடைய கொடுங்கோன்மையால் காபுல்தேயவாசிகளால் அந்தத் தேயத்தினின்றுந் துரத்தப்பட்டான். அரசியல் நெறி தவறித் தன்னுடைய குடிகளாலேயே துரத்தப்பட்ட அப்பேதை ஆங்கிலரை அடைக்கலம் புகுந்தான். ஆயினும், ஆங்கிலர் ஆப்கானிய விஷயத்தில் தலையிடவில்லை.

1826-ம் ஆண்டு தோஸ்த் மகமத்கான் (Dost Muhammad Khan) என்பவன் காபுலுக்கும், கஜனிக்கும் (Ghazni) தலைவனாயினான். ஆங்கிலர்கள் அவனைக் காபுல் மன்னனென அழைத்தனர். 1835-ம் ஆண்டு தோஸ்த் மகமத்கான், அமீர் (Amir) என்னும் பட்டந் தாங்கினான்.

1836-ம் ஆண்டு இந்தியாவின் இராஜப்பிரதிநிதியாகிய அக்லண்டு பிரபு (Lord Auckland) அமீர் தோஸ்த் மகமத்கானுடன் சமாதானத்தை நிறுவ, காபுலுக்கு ஒரு தூதரை ஏவினார். அமீர், இரஞ்ஜித் சிங் கைப்பற்றிய பெஷாவார் (Peshawar) என்னுந் தலத்



தைத் தனக்களித்தால் தான் ஆங்கிலேயர்களுடன் சமாதானமா யிருப்பதாக அறிவித்தான். ஆங்கிலத் தூதர் அவன் விருப்பத்திற் கிணங்காமையால், அவன் வெகுண்டு ருஷ்ய (Russia) தேயத்துத் தூதர்களுடன் சேரலாயினான். அதனால், தம்முடைய எண்ணம் நிறைவேறாதென்ப துணர்ந்த ஆங்கிலத் தூதர் காபுலைவிட்டு இந்தியாவை அண்மினார்.

அமீர் தோஸ்த் மகமத்கான் சமாதான உடன்படிக்கைக் கிணங்காமையால், 1838-ம் ஆண்டு ஜூலை மாதம் இராஜப் பிரதிநிதி மூவினத்தினர் உடன்படிக்கை (Tripartite Treaty) என்னும் உடன்படிக்கையை இரஞ்ஜித் சிங்குடனும், ஆங்கிலர்களிடையில் அடைக்கலம் புகுந்திருந்த ஷாஷூஜா மன்னனுடனும் செய்துகொண்டார். அவ் வுடன்படிக்கைக் கிணங்க ஷாஷூஜாவையே அமீராக அமர்த்துவது என்று தீர்மானிக்கப்பட்டது.

அதற்கிணங்க ஆங்கில சைனியம் அதுவேயாண்டு ஆகஸ்டு (August) மாதம் காபுலைக் கைப்பற்றியது. காபுல் ஆங்கிலவயமானதும் அமீர் தோஸ்த் மகமத்கான் ஊரைவிட் டோடிவிட்டான். உடனே, ஷாஷூஜா பெயருக்கு அமீராக அமர்த்தப்பட்டான். 1840-ம் ஆண்டு ஊரைவிட்டோடிய அமீர் தோஸ்த் மகமத்கான் ஆங்கிலேயர்களைத் தஞ்சமடைந்தான். இராஜப்பிரதிநிதி அவனுக்குப் போதியவருமான மளித்து அவனைக் கல்கத்தாவுக்கு அனுப்பினார்.

பெயருக்கு மாத்திரம் ஷாஷூஜா அமீராக இருந்தான். உண்மையில் ஆப்கானியதேயத்து அரசியலை ஸர்

வில்லியம் மாக்னாட்டன்(Sir William Macnaghten) என்னும் பெரியாரே நடத்திவந்தார். தங்களுடைய தேயம் பாராட்டுத் தூதராகிய ஓர் ஆங்கிலரால் நடத்தப் படுவது ஆப்கானிதேயத்துக் குடிமக்களுக்குச் சிறிதும் விருப்பமில்லை. மகமதிய மதத்தையுங் குலத்தையுஞ் சேர்ந்த தங்களை மகமதிய மன்னனொருவனே ஆள வேண்டுமென்பது அவர்களுடைய துணிபு. ஷாஷுஜா என்னும் தங்களுடைய பழைய மன்னவன் அமீராக அமர்த்தப்பட்டும், அரசியல் உரிமையை அவனுக்களியாது, அவனுடைய பெயரால் ஆங்கிலர் ஒருவர் தங்களை ஆளுவதை அவர்கள் முற்றும் வெறுத்தனர். அதனால் ஆங்கில ஆட்சியை ஒழிக்க வேண்டுமென்று ஒரு கிளர்ச்சி உண்டாகியது. அக்கிளர்ச்சியில் 1840-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 23-ந் தேதி சர் வில்லியம் மாக்னாட்டன் கொல்லப்பட்டார். எல்பின்ஸ்டன் (Elphinstone) என்னுந் தலைவரும் அவருடைய சைன்யமும் கைதி செய்யப்பட்டனர்.

இச்செய்தியை உணர்ந்த இந்திய அரசாங்கத்தினர் ஆப்கானியதேயத்தை அடக்குதற்குரிய முறைகளைத் தேடலாயினர். இடையில் எல்லன்பரோ பிரபு (Lord Ellenborough) இராஜப்பிரதிநிதியாக இந்தியாவுக்கு வந்தார். இந்தியாவை அவர் அடைந்ததும் ஜெனரல் நாட் (General Nott) ஜெனரல் போலக் (General Pollock) என்னும் இரண்டு இராணுவத் தலைவர்களை ஒரு பெரிய சைன்யத்துடன் ஆப்கானி தேயத்திற்கு அனுப்பினார். ஒரு மாதத்திற்குள் காபுல் நகரங் கைப்பற்றப்பட்டது. ஷாஷுஜாவுக்குப் பதிலாக,



கல்கத்தாவில் ஆங்கில அரசியல் ஆதரணையிலிருந்த தோஸ்த் மகமத்கான் ஆப்கானி தேயத்தின் அமீராக அமர்த்தப்பட்டான். அத்தேயத்தை அரசாளும் உரிமை அவனுக்கு அளிக்கப்பட்டது. ஆப்கானிய குடிமக்களின் குறை ஒழிந்தது; வெறுப்பும் அருகியது; அமைதி எங்கணும் நிலவியது. தோஸ்த் மகமத்கான் 1863-ம் ஆண்டுவரையில் ஆப்கானி தேயத்து அமீராக அமர்ந்திருந்தான்.

அமீர் தோஸ்த் மகமத்கான் இறந்துபட்டதும், அவனுடைய எண்ணிறந்த சுற்றத்தார் அவன் பட்டத்தையடைய விரும்பினார். அதுகாலை, இந்தியா இராஜப் பிரதிநிதியாக இருந்த ஸர் ஜான் லாரன்ஸ் (Sir John Lawrence) வாளாக் கிடக்கும் நூதனமுறையைக் கையாண்டார். ஐந்தாண்டுகள் கழிய தோஸ்த் மகமத்கானின் இளைய சுதனாகிய ஷேர் ஆலி (Sher Ali) என்பான் வெற்றியுடன் ஆப்கானி தேயத்தின் அரசனாயினான். உடனே, இந்திய அரசியலினர் அவனை அமீராக அங்கீகரித்து, அவனுக்கு உதவியுஞ் செய்தனர்.

ஸர்ஜான் லாரன்ஸ் கையாண்ட வாளாக்கிடத்தல் என்னும் நூதனமுறை, ஷேர் ஆலிக்கு இந்திய அரசியலின்மேல் சிறிது சந்தேகத்தைப் பிறப்பித்தது. ஸர்ஜான் லாரன்ஸுக்குப் பிறகு இராஜப்பிரதிநிதியாகிய மேயோ பிரபு (Lord Mayo) அம்பல்லா (Umballa) என்னும் இடத்தில் அவனை நேரில் கண்டு உரையாடி அவனுடைய சந்தேகத்தை ஒழித்தார்.

ஆனால், மேயோ பிரபுவால் நிறுவப்பட்ட சமாதானம் நீடித்து நிற்கவில்லை. அவருக்குப் பின்னால்

இராஜப்பிரதிநிதியாக வந்த நார்த்புருக் பிரபு (Lord Northbrook) சர் ஜான் லாரன்ஸினுடைய "வாளாக் கிடக்கும்" முறையையே பற்றினார். ஆனால், ருஷ்ய தேயத்தின் துன்பங்களிலிருந்து தன்னைக் காப்பாற்றத் தனக்கு வாக்களிக்குமாறு ஷேர் ஆலி வேண்டினான். நார்த்புருக் பிரபு யோசனையின்றி அதனை மறுத்தார். எனவே, ஷேர் ஆலியினுடைய பழைய சந்தேகங்களெல்லாம் மீண்டும் பிறந்தன. தனக்கு உதவிசெய்ய உறுதியுடன் மறுக்கும் இந்திய அரசாங்கத்தின் பற்றற்றிருப்பதே மிகவும் நன்றென அவனுக்குத் தோன்றியது. அதனால், அவன் இந்திய அரசாங்கத்திற்கு விரோதமாக ருஷ்ய உதவியை நாடினான்.

அப்பொழுது லிட்டன் பிரபு (Lytton) இராஜப் பிரதிநிதியாக இந்தியாவுக்கு வந்தார். வந்ததும் ஆப்கானிய வழக்கே அவருடைய கருத்தைக் கவர்ந்தது. ஷேர் ஆலி ஆங்கிலர்களை முற்றும் வெறுத்ததை அவர் உணர்ந்தனர். ஆயினும், வெளிப்படையாக ருஷ்ய உதவியை அவன் நாடாதது அவருக்குச் சிறிது சந்தேகத்தையே அளித்தது. ஆதலின், அவன் இந்திய அரசாங்கத்தின் நண்பனா அல்லது விரோதியா என்பதை வெளிப்படையாக அறியவேண்டும் என்று அவருக்குத் தோன்றியது. 1878-ம் ஆண்டு அமீர் ஷேர் ஆலி வெளிப்படையாக ருஷ்ய தூதர்களை வரவேற்றதன்றி ஆங்கிலத் தூதரொருவரை வரவேற்க முற்றும் மறுத்தான்.

எனவே, 1878-ம் ஆண்டு நவம்பர் மாதம் 21-ந் தேதி இந்திய அரசாங்கத்திற்கும் அமீருக்குஞ் சண்டை



தொடங்கியது. அச்சண்டையில் அமீர் ஷேர் ஆலி ருஷ்ய தேயத்திற்கு ஓடிவிட்டான். ருஷ்ய உதவியைப் பெற்று இந்திய அரசியலை முறியடிக்க, அவன்கொண்ட எண்ணங்களெல்லாம் அவலமாயின. ருஷ்ய அரசியலால் ஏமாற்றப்பட்ட துயரமும், இந்திய அரசியலில் உண்டாகிய வெறுப்புந் தாங்கமுடியாமல் அவன் 1879-ம் ஆண்டு பிப்ரவரி (February) மாதம் இறந்துபட்டான்.

உடனே, அவனுடைய இரண்டாவது சுதனாகிய யகுப் கான் (Yakub Khan) அமீரென்னும் பட்டம் பெற்றான். ஆயினும், ஆப்கானி தேயமுழுமையும் அவனுக் களிக்கப்படவில்லை. கந்தஹார் என்னுந் தலத்தை இந்திய அரசியலார் கைக்கொண்டு எஞ்சிய பகுதிக்கு அவனை அரசனாக்கினர். ஆப்கானிஸ்தானத்தைப் பகுதி பகுதிகளாகப் பிரித்து, அதன் வன்மையை ஒடுக்க வேண்டும் என்பதே லிட்டன் பிரபுவின் முக்கிய நோக்கமாகும். அக்கருத்திற் கிணங்க, அவர் கந்தகாரை அத்தேயத்திலிருந்து பிரித்து அதைத் தம்வயமாக்கிக் கொண்டார்.

மேலோதியங்கு, யகுப்கானை அமீராக அமர்த்தியதும், சர் லூயிஸ் காவெக்நரி (Sir Louis Cavagnari) என்பார், இந்திய அரசியல் தூதராக ஆப்கானி தேயத்திற்கு அனுப்பப்பட்டார். ஆனால், சில மாதங்களுக்குள் அவரும் அவருடன் இருந்தவர்களும் ஆங்குக் கொல்லப்பட்டார்கள். யகுப்கானும் இப்படுகொலையில் சம்பந்தப்பட்டிருப்பான் என்று பலர் எண்ணினர். ஆனால், யகுப்கானுக்கு அமீராக இருக்கவேண்டும் என்ற ஆவல் உண்மையில் கிடையாது. அரசியல்

கவலையின்றி, உல்லாசமாகக் காலத்தைக் கழித்தலே நன்றென அவனுக்குத் தோன்றியது. எனவே, 1879-ம் ஆண்டு செப்டம்பர் (September) மாதம் காபுல் கைப்பற்றப்பட்டதும் அவன் இந்தியாவிலேயே இராஜாங்க உதவியில் வசிக்க விரும்பினான். இந்திய அரசாங்கத்தார் அவனுடைய வேண்டுகோளுக் கிணங்கினார். பின்னர், ஆப்கானி தேயத்திற்கு எவரை அமீராக ஏற்படுத்துவதென்ற சந்தேகம் பிறந்தது.

ஆப்கானி தேயத்துக் குடிமக்கள் அமீர் தோஸ்த் மகமத்கானின் பௌத்திரனாகிய அப்துர் ரஹிமான் என்பவனை அமீராகுமாறு அழைத்தனர். அப்துர் ரஹிமான் (Abdur Rahman) சென்ற பத்தாண்டுகளாக ருஷ்ய தேயத்திலேயே வசித்து வந்தான். அவனை அமீராக அமர்த்துவதே சாலவும் நன்றென லிட்டன் பிரபுவுக்குத் தோன்றியது.

இந்நிலையில் ரிப்பன் பிரபு இந்திய இராஜப்பிரதிநிதியாயினார். அவரும் லிட்டன் பிரபுவைப் போலவே அப்துர் ரஹிமானையே அமீராக்கத் துணிந்தார். ஆப்கானியர்கள் ஆப்கானிஸ்தானம் முழுமைக்கும் அமீராக அமர ஏகமனதாய் அவனையே அழைத்தனர். மேலும், ஆப்கானிய அமீர்கள் சந்ததியில் அவனொருவனே குடிகளின் நம்பிக்கைக்குரியவனாக இருந்தான். ஆதலால், அவனுடன் உறவாடி ருஷ்ய அரசியலுடன் அவனைச் சேராதவாறு செய்வதே தம்முடைய கடனென்று ரிப்பன் பிரபு உணர்ந்தார்:

அவ்வாறு ஆப்கானிதேயக் குடிகளாலேயே அமீராகத் தெரிந்தெடுக்கப்பட்ட அப்துர் ரஹிமான், கந்த



கார் தனக் களிக்கப்படுமாவென்றும், இந்திய அரசியலின் தூதர் தன்னுடன் இருக்கவேண்டுவது அவசியமாவென்றும், எந்தெந்த விரோதிகளைத் தான் விலக்க வேண்டுமென்றும், அவ்வாறு விலக்கினால் இந்திய அரசாங்கம் தனக்கு என்னென்ன உதவிகளைச் செய்யுமென்றுஞ் சில கேள்விகளைக் கேட்டான். உடனே, ரிப்பன் பிரபு அவனுடைய கேள்விகளுக்கு, கந்தகாரைப்பற்றிய விவாதமே கிடையாதென்றும், இந்திய அரசியல் தூதனை வைத்துக்கொள்ளல் அவசியமில்லையென்றும், இதர தேயங்களைப் பற்றிய கேள்வியே கிடையாதென்றும், அவன் இந்திய அரசியலின் ஆலோசனைக்கடங்கி நடந்தால் இந்திய அரசியல் மற்ற அரசியல்களுக்கு எதிராக அவனுக்கு உதவி புரியுமென்றும் பதிலிறுத்தார்.

இந்திய அரசியலில் பலர் அப்துர் ரஹிமான்மீது சந்தேகங் கொண்டபோதிலும், ரிப்பன் பிரபு அவனை முற்றும் நம்பினார். அதற்கிணங்க அப்துர் ரஹிமானும் தன்னுடை வினாக்களுக்கெல்லாம் உரிய விடையைப் பெற்றதும், ரிப்பன் பிரபுவினுடைய வேண்டுகோளுக் கிணங்கக் காபுல் நகரடைந்தான். அதுவேயாண்டு, ஜூலை மாதம் 22-ந் தேதி, இந்திய அரசியலின் உத்தரவிற் கிணங்க, ஒரு பெரிய தர்பாரில், ஜெனரல் ஸ்டீவர்ட் (General Stewart) என்பவரால் ஆப்கானி தேயத்து அமீரென்று அப்துர் ரஹிமானுக்குப் பட்டஞ் சூட்டப்பட்டது. சமாதான உடன்படிக்கைக் கிணங்க அப்துர் ரஹிமான் நடந்துவந்தான்.

சில மாதங்களுக் கப்பால் அயூப்கான் (Ayub Khan) என்பவன் மெய்வாண்டு (Maiwand) என்னும்

இடத்திலிருந்த ஆங்கில சைன்யத்தைப் படுகொலை செய்தான். அயூப்கான் ஷெர் ஆலியின் இரண்டாவது மைந்தனுவான். ஷெர் ஆலி தோல்வியுற்று ருஷ்யாவுக்கு ஓடியதும், அவன் ஹீரட் (Herat) என்னும் ஊருக்குக் கவர்னராயினுன். ஆப்கானி தேயத்திற்கே அமீராகவேண்டும் என்னும் பேரவா அவனுக்கிருந்தமையால், அவன் கந்தஹாரையுங் கைப்பற்ற முயன்றுன். அவ்வமயத்தில், அயூப்கானுடன் நடந்த போரில், அப்துர் ரஹிமான் ஆங்கில சைன்யத்திற்குப் பேருதவி புரிந்தான்.

1881-ம் ஆண்டின் ஆரம்பத்தில், அரசியல் மன்றத்தைத் திறக்குங்கால் நிகழ்த்திய சொற்பொழிவில் விக்டோரியா மகாராணி இந்திய சைன்யம் ஆப்கானிஸ்தானத்தை விட்டுத் திரும்பிவிட வேண்டுமென்று கூறினுர். அதற்கிணங்க, ரிப்பன் அந்தவாண்டு ஜனவரி (January) மாதம் 30-ந் தேதி சில மாதங்களுள் இந்திய சைன்யம் ஆப்கானி தேயத்தைவிட்டுச் செல்லுமென்றும், அவ்வாறு செல்லுங்கால் கந்தஹார் அமீரையே சேருமென்றும் அப்துர் ரஹிமானுக்கு அறிவித்தார்.

ரிப்பன் பிரபுவின் உறுதிமொழிக் கிணங்க, சில மாதங்களுள் இந்திய சைன்யம் ஆப்கானி தேயத்தை விட்டு, இந்தியாவை யடைந்தது. கந்தஹாரும் அமீருக்கு அளிக்கப்பட்டது. சமயம் பார்த்துக்கொண்டே ஹீரட்டில் காத்திருந்த அயூப்கான், மறுபடியும் அமீராக முயன்றுன். அதுவேயாண்டு, ஜுலை மாதம் 27-ந் தேதி அமீர் தோல்வியடைய, அயூப்கான் கந்த-



ஹாரைக் கைப்பற்றினுன். ஆனல், செப்டம்பர் மாதம் 22-ந்தேதி அப்துர் ரஹிமான் அயூப்கானை முறியடித்து ஹீரட்டையும் தன்னுடைய இராஜ்யத்துடன் சேர்த்துக்கொண்டான்.

இப்போருக்குப் பின்னர், ஆப்கானி தேயத்தில் அமைதி நிலவியது. ஆப்கானிய குடிமக்களும் ஓர் ஆப்கானிய அமீரே தங்களை ஆளுவதை யெண்ணி ஆநந்த மெய்தினுர். ஆறுமாத மளவும் பெருங்கவலை யளித்த ஆப்கானிய வழக்கு முடிவுற்றதென ரிப்பன் பிரபு இன்பக்கடலில் ஆழ்ந்தனர்.

## 11. மைசூர் அரசாங்க வமைப்பு

ஆப்கானிய வழக்கு முடிவுற்றதும் ரிப்பன் பிரபுவின் கருத்து மைசூரை நாடியது.

பண்டைக்காலத்தில் மைசூர் விஜயநகர இராஜ்யத்தைச் சேர்ந்த பகுதியாக இருந்தது. இடையில் 1565-ம் ஆண்டு விஜய நகர இராஜ்யம் வலியிழந்து சிறுசிறு பகுதிகளாகப் பிரிவுண்டதும், மைசூருந் தனிப் பகுதியாக மாறியது. அத்தலத்தை உடையார் சந்ததியைச் சார்ந்த இந்து மன்னர்கள் 1750-ம் ஆண்டுவரையில் மனுநெறி வழுவாது, அரசாண்டு வந்தனர். அது சமயம், மைசூரை யாண்டு வந்த மன்னவர் மனவலிமையும், தம் மரபிற்குரிய வன்மையும், தயையும் அற்றவராக இருந்தார். அம்மன்னவரின் இயல்பை யுணர்ந்த ஹைதர் ஆலி என்னும் மகமதியவீரன் தன்னுடைய பேராவலை வெளியில் காட்டி, தன்னுடைய உள்ளக் கருத்தை நிறைவேற்ற அதுவே தகுந்த சமயமென்பதுணர்ந்தான்.

ஹைதர் ஆலி (Haider Ali) 1722-ம் ஆண்டு பிறந்தான். அவனுடைய தந்தையார் மைசூர் அரசியலில் ஓர் உயர்ந்த உத்தியோகத்தை வகித்திருந்தார். இளமையிலிருந்தே ஹைதர் ஆலி அஞ்சாநெஞ்சு படைத்த வீரனாக விளங்கினான். அவனுடைய வீரச் செயல்களை யுணர்ந்த மைசூர் அரசர், அவனை பெங்களூருக்கு (Bangalore) ஜாகிர்தாரன் (Jaghir) ஆக்கிய



தன்றி, தம்முடைய இராணுவத்திற்கும் சேனாதிபதியாக அமர்த்தினார். அம்மன்னவருடைய இயல்பை யுணர்ந்த ஹைதர் அலி, அவரை யொழித்துவிட்டு மைசூரைத் தன் வயப்படுத்தி, தானே மைசூர் மன்னவனாகச் சமயம் பார்த்துக்கொண்டே இருந்தான். அவனுடைய எண்ணத்திற்கிணங்க, அவனுடைய வலிமையும் நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டே வந்தது. சில ஆண்டுகள் கழிந்தபின், ஹைதர் அலியே மைசூர் அரசியலையும் நடத்தலாயினான். 1761-ம் ஆண்டு அவனே மைசூருக்கு அரசனாயினான்.

"ஆசைக்கோ ரளவில்லை" என்னும் பொய்யா மொழிக்கிணங்க, ஹைதர் அலியின் பேராசை அளவு கடந்து வளரலாயிற்று. மைசூரின் அரசனானால் போதுமென்று முதலில் எண்ணிய அவன் சில ஆண்டுகளுள் தென் இந்தியா முழுவதையும் அடக்கியாளப் பேராவல் கொண்டான். அவனுக்குப் பிரெஞ்சுக்காரர்களுடைய (French) உதவியும் இருந்தது. இந்தியாவில் ஆங்கிலர் வன்மையை ஒழிக்கவேண்டுமென்று பிரெஞ்சுக்காரர்கள் எண்ணியிருந்தனர். ஹைதர் அலி இயற்கையிலேயே ஆங்கிலர்களைப் பகைத்து வந்தமையால், அதனை யுணர்ந்த அன்னோர் அவனுடைய இராணுவத்தைப் பண்படுத்த அவனுக்குப் பேருதவி செய்தனர்.

தன்னுடைய சைன்யம் பண்படுத்தப்பட்டதும், ஹைதர் அலி 6000-குதிரைப் படையுடன் தென் இந்தியாவில் வந்து ஆங்கிலர்களின் அரணாகிய சென்னையைத் (Madras) தாக்கினான். ஹைதர் அலி திடீரென்று போருக்கு வந்தமையால், சென்னையம்பதியிலுள்ள

தலைவர்கள் பயந்து அவனுடன் சமாதானஞ் செய்து கொண்டனர். சமயம் நேர்ந்தபோது இருதிறத்தினரும் ஒருவருக்கொருவர் உதவி செய்யவேண்டுமென்ற உடன்படிக்கையும் ஏற்பட்டது. அப்பொழுது கிளைவ் பிரபு (Lord Clive) இந்திய கவர்னர் – ஜெனரலாக (Governor-General) இருந்தார்.

உடன்படிக்கையில் கையொப்பமிட்டுச் சிலநாட்கள் கழிந்ததும், தென் இந்தியாவையே தன் வயப்படுத்தவேண்டும் என்ற பேரவா அவனுக்கு மீண்டும் உண்டாயிற்று. அதனால், ஹைதர்அலி மஹாராஷ்டிரர்களுடன் போர்புரிந்து பெருந்தோல்வியுற்றான். தோல்வியுற்றபின், அவன் சென்னை அரசாங்கத்தாரை உடன்படிக்கைக் கேற்ப, தனக்கு மஹாராஷ்டிரர்களுடன் போராட உதவிபுரியுமாறு வேண்டினான். ஆனால் சென்னை அரசாங்கத்தார் அவன் தங்களைக் கேளாது, மஹாராஷ்டிரர்களுடன் போராடச் சென்றமையால் தாங்கள் எவ்வித உதவியுஞ் செய்யவியலாது என்று மறுத்து விட்டனர்.

இச்செய்தியையுணர்ந்த ஹைதர்அலியின் மகமதிய வுதிரம் பொங்கி எழுந்தது. இயற்கையிலேயே ஆங்கிலர்கள் மாட்டு அவன்கொண்ட வெறுப்புப் பன்மடங் கதிகரித்தது. ஆங்கிலர்கள் நம்பிக்கைத் துரோகிகளென்று அவன் எண்ணினான். பின்பு ஒரு பெரிய சைன்யத்தைத் திரட்டிக்கொண்டு அதிக கோபத்துடன், சென்னையைத் தாக்கி, கர்னல் பெய்லி (Colonel Baillie), ஸர் ஹெக்டர் மன்றே (Sir Hector Munro) என்னும் இருவர் சைன்யத்தையும் முறியடித்தான். அதுகாலை வாரன்



ஹேஸ்டிங்ஸ் (Warren Hastings) இந்தியாவின் கவர்னர் ஜெனரலாக இருந்தார். அவர் இச்செய்தியையுணர்ந்ததும், கர்னல் பியர்ஸ் (Colonel Pearse) என்பவருடைய தலைமையில் நிலவழியாக ஒரு பெரிய சைன்யத்தையும், சர் அயர் கூட் (Sir Eyre Coote) என்பவருடைய தலைமையில் கடல்வழியாக மற்றொரு சைன்யத்தையும் தென் இந்தியாவுக்கு அனுப்பினர்.

அதுகாறும், ஹைதர் அலிக்குப் பேருதவி புரிந்து வந்த பிரெஞ்சுக்காரர்கள், அவ்வமயம் அவனுக்கு உதவி செய்ய மறுத்தனர். எனவே, ஹைதரலி 1781-ம் ஆண்டு ஜூலை (July) மாதம் 18-ந்தேதி பரங்கிப் பேட்டை (Port Novo) என்னுந் தலத்தில் நடந்த யுத்தத்தில் சர் அயர் கூட்டால் முறியடிக்கப்பட்டான். அடுத்த ஆண்டு தென் இந்தியாவிற்கே அரசனாக வேண்டுமென்ற அவனுடைய பேரவா அழிந்தது. 1782-ம் ஆண்டு ஹைதர்அலி இறந்துபட்டான். சிவாஜி மன்னவரைப்போல் அவன் குடிகள் நலத்தை நாடுபவனல்லன். ஆயினும், "தென் இந்திய சிவாஜி" என்ற பட்டத்திற்கு அவன் தகுதியுள்ளவனாகவே இருந்தான் என்பதற்கு அவனுடைய வீரச் செயல்களே போதிய சான்றாகும்.

ஹைதர்அலி இறந்துபட்டதும், அவனுடைய மகனாகிய திப்பு (Tipu) அப்போரை நடத்தி வந்தான். 1784-ம் ஆண்டு மங்களூர் (Mangalore) உடன்படிக்கையுடன் அப்போர் ஒருவாறு முடிவுற்றது. ஆயினும், ஹைதர்அலியைப் போலவே திப்புவுக்கும் தென் இந்தியாவிற்கு அரசனாக வேண்டுமென்ற பேரவா

இருந்தது, "மைசூரின் சிங்க"மெனப் புகழ்பெற்ற அவன் ஆங்கிலர்களையெல்லாம் வெறுத்து வந்தான்.

தன் பேரவாவின் காரணமாய் திப்பு மலபார் பிரதேசங்களையெல்லாம் மனமாரக் கொள்ளை யடித்து, ஆங்கு அநேக வாண்டுகளாக விளங்கிய இந்து ஆலயங்களை இடித்துத் தள்ளி 1789-ம் ஆண்டு திருவாங்கூர் இராஜாவையும் தாக்கினான். திருவாங்கூர் இராஜா ஆங்கில அரசியலின் ஆதரணையிலிருந்தார். ஆகலின் அது சமயம் கவர்னர்-ஜெனரலாக இருந்த கார்ன்வாலிஸ் பிரபு (Lord Cornwallis) ஒரு பெருஞ் சேனையைத் திரட்டிக்கொண்டு தாமாகவே நேரில்வந்து ஸ்ரீரங்கப் பட்டினத்தை (Seringapatam) முற்றுகையிட்டார். தன்னுடைய சேனையின் வலிமையையும் எதிரியின் சேனையின் வலிமையையும் உணர்ந்த திப்பு, இனிப் போராடின் தோல்வி யடைவது திண்ணமென்பதறிந்து உடனே சமாதானத்தை வேண்டினான். அதற்குக் கார்ன்வாலிஸ் பிரபுவும் இணங்க 1792-ம் ஆண்டு ஸ்ரீரங்கப்பட்டின உடன்படிக்கை (Treaty of Seringapatam) நிறைவேறினது. அதில் இரு திறத்தினரும் கையொப்ப மிட்டனர்.

1799-ம் ஆண்டு வெல்லெஸ்லி பிரபு (Lord Wellesly) ஆங்கில அரசியலுக்கடங்கி மைசூர் அரசனாக வீற்றிருக்குமாறு திப்புவைக் கேட்டார். இயற்கையிலேயே முரட்டுச் சுபாவம் நிறைந்த திப்புவுக்கு, தன் இளமையிலிருந்து மனமார வெறுத்த ஆங்கிலர்களுக்கு அடங்கியிருக்கத் தன்னால் இயலாது என்று தோன்றியது. அதனால், ஆங்கில அரசியலை அழித்



தலை தன்னுடைய கடனாகும் என்றெண்ணி அவன் ஆப்கானிதேய அமீரின் உதவியை நாடினான். இதையுணர்ந்த கவர்னர் ஜெனரலாகிய வெல்லெஸ்லி பிரபு உடனே சென்னையிலிருந்து ஒரு சைன்யத்தையும், பம்பாயிலிருந்து ஒரு சைன்யத்தையும், ஸ்ரீரங்கப்பட்டினத்தை முற்றுகையிட ஏவினார். ஆங்கு நடந்த போரில், அஞ்சாநெஞ்சுடன் போராடிக் கொண்டிருந்த டிப்பு ஸ்ரீரங்கப்பட்டின வாயிலுக்கருகில் ஒரு துப்பாக்கிக் குண்டினால் தாக்குண்டு இறந்துபட்டான்.

"தேன் இந்திய சிவாஜி" என்னும் ஹைதர் அலி ஆரம்பித்த மைசூர் மகமதிய அரசியல், அவனுடைய மைந்தனாகிய, "மைசூரின் சிங்கம் என்னும் திப்புவுடன் முடிவுற்றது. திப்பு தன்னுடைய தந்தையைப்போல் கல்லாக் கயவனல்லன். அவன் கல்வியெனுங் கருந்தனத்தைக் கொண்டவன்; எண்ணிறந்த இந்திய பாஷைகளைப் பேசுந்திறனும் வாய்ந்தவன்; ஐரோப்பிய அரசியல் விஷயங்களையெல்லாம் நன்குணர்ந்தவன். அக்காலத்தில் உலகெலாம் போற்றும் வீரர் நெபோலிய (Napoleon) ருடன் அவன் நெருங்கிப் பழகியது ஆச்சரியமாக இருக்கின்றது. ஆயினும், திப்புவினுடைய மதவெறி அவனுடைய வீரத்தையுங் கல்விப்பேற்றையும் தடுத்து நின்றது. மதவெறி பிடித்த அவன், இந்துக்களை வாட்டிய கொடுமையும், இந்து ஆலயங்களை அழித்த செய்கையும் அனைவருக்கும் அவன்மீது வெறுப்பை உண்டாக்கின.

திப்பு இறந்து பட்டதும், ஸ்ரீரங்கப்பட்டினமும்
மைசூரும் ஆங்கிலருக்கு உரிமையாயின. ஆனால் வெல்
லெஸ்லிபிரபு மைசூரை ஆங்கில இராஜ்யத்துடன் சேர்த்
திடச் சிறிதும் விரும்பவில்லை.ஹைதர்அலியினுடைய சந்
ததியில் மைசூரின் மன்னவனாக வீற்றிருத்தற்குரிய ஆற்
றல் நிறைந்தவ னொருவனும் அப்போதில்லை. அதனால்,
ஹைதர்அலியால் 1761-ம் ஆண்டு தள்ளப்பட்ட, இந்து
உடையார் மரபிலுதித்த ஒருவருக்கே மைசூரை அளித்
தல் வேண்டுமென்று அவர் தீர்மானித்தார். அம்மர
பில் மைசூர் மன்னவராகத் தெரிந்தெடுக்கப்பட்டவர்
ஐந்து வயதுடைய அரசிளங் குமாரராக இருந்தனர்.
அவர் உரிய பருவமெய்திடும் வரையில் திப்புவினுடைய
அமைச்சராக விருந்தவரும், வயதிலும் அறிவிலும், அர
சியல் ஞானத்திலுஞ் சிறந்தவருமாகிய பூர்ணையா என்
னும் மஹாராஷ்டிர அந்தணரை மைசூர் அரசியல்காரியங்
களை நடத்திவருமாறு வெல்லெஸ்லி பிரபு அமர்த்தி
னர்.

1811-ம் ஆண்டு வரையில் பூர்ணையா பண்டை
நீதிநெறி வழுவாது, அரசியலை நடத்திவந்தார். மைசூர்
நீர்வளத்திலும் நிலவளத்திலுங் குடிவளத்திலும் சிறந்து
விளங்கியது. அவ்வாண்டில் வெல்லெஸ்லி பிரபுவால்
தெரிந்தெடுக்கப்பட்ட அரசிளங் குமாரர் உரிய பரு
வத்தை எய்தினர். அதனால், அவர் மைசூர் மகாராஜா
வாகப் பட்டஞ் சூட்டப்பட்டார்.

சில' வாண்டுகளுக்குப் பின், அவர் அரசியல்
தொண்டுகளை மறந்து, குடிமக்களின் குறைகளைக் கவனி
யாது தீயவழிகளைப் பற்றலாயினர். மைசூர் அர



சியல் அறநெறியை நீத்து மறநெறியைப் பற்றலாயிற்று.
மைசூரின் நீர்வளமும், நிலவளமும், குடிவளமும்
குறைந்தன. அரசியல் வருமானமும் ஆண்டுகள் கழி
யக்கழிய மிகவுங் குறைவுபட்டது. மைசூரின் குடி
மக்களை வறுமைப்பிணி பற்றியது. அக் குறைகளையெல்
லாம் நீக்க வில்லியம் பென்டிங் பிரபு 1831-ம் ஆண்டு
மைசூர் மன்னவரை அப்பதவியினின்றும் நீக்கினர்.
அவ்வாண்டு முதல் 50-ஆண்டுகளளவும் மைசூர் அரசி
யல் ஆங்கில அரசியல் பிரதிநிதிகளாலேயே நடத்தப்
பட்டு வந்தது. பின்பு மைசூர் பண்டை மாண்பையும்,
வளத்தையும் மீண்டும் எய்தியது.

1867-ம் ஆண்டு ஸர் ஜான் லாரேன்ஸ் (Sir John
Lawrence) இராஜப்பிரதிநிதியாக இருக்கையில், ரிப்
பன் பிரபு இந்திய அரசாங்கத்தில் அரசியல் அமைச்ச
ராக இருந்தார். அவ்வாண்டு சர் ஜான் லாரென்ஸும்
ரிப்பன் பிரபுவும் மைசூரை உடையார் மரபிலுதித்தவ
ருக்கே அளித்தல் வேண்டும் என்ற முடிவுக்கு வந்த
னர். அதனால், அம்மரபில் அரசர்க்குரிய இலக்ஷணங்
கள் அமைந்த ஒரு சிறுவரை இந்திய அரசியலார் தெரிந்
தெடுத்து அவ்வரசிளஞ் சிறுவருக்கு நீதிநெறியைப்
புகட்டி வந்தனர்.

ரிப்பன் பிரபு இந்திய அரசாங்கத்தில் அரசியல்
அமைச்சரா யிருக்கையில் கொண்ட எண்ணம் அவர்
இந்தியாவின் இராஜப்பிரதிநிதியானதும், நிறைவேறி
னது. தெரிந்தெடுக்கப்பட்ட அரசிளங் குமாரர் உரிய
பருவமும், அரசர்க்குரிய ஒழுக்கமும், நீர்மையும், அர

சியல் ஞானமும் பெற்று விளங்குவதைக் கண்டதும், 1881-ம் ஆண்டு அவரை மைசூர் மகாராஜாவாகவும் ஏற்படுத்தினர்.

அம்மன்னவர் அரசியல் அறிஞர்களை அமைச்சர்களாகக் கொண்டு மைசூர் குடிமக்கள் அகமும் முகமும் மலர, நீதிவழுவாது அரசாண்டு வருவாராயினர். அரசியல் ஞானம் மிகுந்த ரிப்பன் பிரபுவும், அவர் நீதி முறையை வியந்து மனமகிழ்ந்தார்.

## 12. பொதுக் குடிக் கணக்கு

ஆப்கானியவழக்கும், மைசூர் மகாராஜா அமைப்பும் முடிவுற்றதும், ரிப்பன் பிரபு இந்திய அரசியலில் பல சீர்திருத்தங்களைச் செய்யப் பெரும்பாடு பட்டார். 1881-ம் ஆண்டு, "சண்டைகளெல்லாம் முடிவுற்றமையால், உள் விஷயங்களைப் பற்றிய முறைகளை நாட எனக்கு அதிக அவகாசங் கிடைத்திருக்கின்றது. பஞ்சங்களை விலக்கல், பிரதம கல்விபயிற்றல், நகர பரிபாலன சபையில் தெரிந்தெடுக்கும் முறையைப் பரப்புதல், முதலிய விஷயங்களில் இனி நான் மிகவும் உழைத்து வருவேன்" என்று அவர் தம்முடைய நண்பராகிய பார்ஸ்டர் (Forster) என்னும் பெரியாருக்கு ஒரு கடிதம் வரைந்தார். அக்கடிதம் ரிப்பன் பிரபுவினுடைய உண்மை உணர்வையும், இந்தியாவின்மீது அவருக்குள்ள அன்பையும் விளக்குகின்றது.

மேலும், அதுவே யாண்டில் முதன் முதலில் இந்தியாவில், காஷ்மீரத்தையும், (Kashmir) நேபாளத்தையும் (Nepal) தவிர்த்துப் பொதுக்குடிக் கணக்கெடுக்கப் பட்டது. அக்கணக்கினால் முக்கிய உண்மைகள் பல விளங்கலாயின. அவை ரிப்பன் பிரபுவினுடைய சீர்திருத்தங்களுக்கெல்லாம் அடிப்படையாக அவருக்குப் பெரிதும் உதவிசெய்தன. உயர்தரக் கல்விப் பேறு பெற்றவர்களுடைய தொகையும், பிரதமக் கல்வியறிவும் வாய்க்கப் பெறாதவர்களுடைய தொகையும், அக்குடிக் கணக்கில் விளக்கமாயின. அதனால், ரிப்பன் பிரபு பிரதமக் கல்விமுறையையும், இந்திய அரசியல் உத்தியோகச் சட்டத்தையும், இல்பர்ட் சட்டத்தையும், நகர பரிபாலன சபையில் தெரிந்தெடுக்கும் முறையையும் வற்புறுத்தலானார்.

# 13. பஞ்சக் கொடுமை விலக்கு

இந்திய அரசாங்கத்தில் அரசியல் அமைச்சராக இருக்கையிலேயே ரிப்பன் பிரபு ஒரிசா பஞ்சத்தின் கொடுமைகளைப் பற்றி உணர்ந்திருந்தார். அதனால், அவர் இந்திய இராஜப்பிரதிநிதியாகி ஆப்கானிய வழக்குகளையெல்லாம் அடக்கியதும், பஞ்சத்தால் வாடி வதங்கும் இந்திய ஏழைமக்களின் துயரை ஒழித்து, சில சீரிய முறைகளை நாடலே தம்முடைய முதற்கடன் எனத் துணிந்தார்.

பஞ்ச காலங்களில், பஞ்சத்தால் அல்லலுறும் எண்ணிறந்த மக்களுக்குப் பொருளும், உணவும் உதவுவதற்கு ஏராளமான பணந்தேவையாக இருந்தது. ரிப்பன் பிரபுவுக்கு முன்னிருந்த இராஜப்பிரதிநிதிகள் அப்பணத்தின் பொருட்டு "லைஸன்ஸ்" (Licence) என்னும் வரியைச் செல்வந்த வியாபாரிகளுக்கு விதித்துப் பொருளீட்டி வந்தனர். அப்பழக்கம் ரிப்பன் பிரபுவின் காலத்திலும் முதலில் நடந்துவந்தது.

1882-ம் ஆண்டில் அரசிறைக் கணக்கின் (Budget) பொருளமைச்சராக (Finance Member) இருந்த பாரிங் (Barring) என்பவர், வெளிநாடுகளிலிருந்து இந்தியாவுக்கு வருஞ் சரக்குகளில் சாராயங்களைத் தவிர்த்து, மற்றப் பொருள்களுக்கு வரிவிதித்தலாகாதென்றும், ஏழைகள் உள்பட இந்தியாவில் உள்ள மக்கள் அனைவரும் அறியாது அளிக்கின்ற உப்புவரி



யைக் குறைக்கவேண்டுமென்றுந் தீர்மானங் கொண்டுவந்தனர். அன்றியும், பஞ்சகாலங்களில் வியாபாரிகளின் மேல் விதிக்கப்பட்ட லைஸன்ஸ் வரியை நீக்கி, அதற்குப் பதிலாக ஆண்டுக்கு 2000-ரூபாய்களுக்கு மேல் வருமானமுள்ளவர்களுக்கு வருமான வரி (Income - Tax) என்னும் வரியை விதிக்கவேண்டுமெனவும் அவர் மொழிந்தார். அப்புதிய வரி வீண் கிளர்ச்சியை உண்டாக்குமென்றும், பஞ்ச காலத்தில் மாத்திரம் விதிக்கப்பட்ட லைஸன்ஸ் வரிக்குப் பதிலாக இவ்வரி விதித்தலை இந்தியமக்களும், இந்தியாவிலுள்ள மற்றவர்களும் வெறுப்பார்கள் என்றும் உணர்ந்த ரிப்பன்பிரபு வருமான வரியை விதித்தலாகாது என்று திடமாக மறுத்தார்.

அதனால், அவ்வாண்டு வருமான வரி விலக்கப்படவேண்டுமென்றும், லைஸன்ஸ் வரியைச் சமயம் நேரிடும்போது மாத்திரம் விதிக்கவேண்டுமென்றுந் தீர்மானிக்கப்பட்டது. 1886-ம் ஆண்டு, அரசியல் நிதி குறைவுபட்டமையால், நிலத்திலிருந்து வரும் வருமானந் தவிர்த்து மற்ற வருமானங்களுக்கெல்லாம் வரி விதிக்கப்பட்டது. தவிர, ரிப்பன் பிரபுவின் காலத்தில் வெளிநாட்டிலிருந்து இந்தியாவுக்கு இறக்குமதியாகுஞ் சரக்குகளின்மேல் எடுக்கப்பட்ட வரி மீண்டும் விதிக்கப்பட்டது. ஏழை மக்களிடத்திலிருந்து அறியாது வசூலிக்கப்படும் உப்பு வரியும் உயர்த்தப்பட்டது.

ரிப்பன் பிரபுவின் ஆட்சியில் இந்தியாவில் நல்வளம் நிறைந்திருந்தமையால் வரியும் மிகவுங் குறைவாகவே விதிக்கப்பட்டது. வெளிநாடுகளிலிருந்து இந்-

தியாவுக்கு வரும் சாராயம் தவிர, மற்றச் சரக்குகளின் மேல் வரி விதிக்கப்படாமையாலும், உப்பு வரி குறைக்கப்பட்டமையாலும் ரிப்பன் பிரபு இந்திய மக்களின் உள்ளங்களையெல்லாம் பொதுவாகவும், இந்திய ஏழை மக்களின் உள்ளங்களை யெல்லாஞ் சிறப்பாகவுங் கொள்ளைகொண்டார் என்று கூறினும் மிகையாது.

மேலும், பஞ்ச காலங்களில் ஒரு நகரிலிருந்து பஞ்சமுண்டாகிய இடத்திற்கு வேண்டிய பொருள்களை அனுப்புவதற்குப் புகைவண்டிகள் பேருதவியாக இருந்தன. இருப்புப் பாதையை இந்தியா முழுமையும் அமைக்க வேண்டுமென்பது ரிப்பன் பிரபுவின் துணிபு. அவ்வாறு இருப்புப்பாதைகளை இடுவது அரசியல் செலவை அதிகப்படுத்துமாதலால், அரசாங்க இருப்புப் பாதை இடுவது இயலாத காரியமாக இருந்தது. ஆனால், இந்தியா முழுமையும் இருப்புப்பாதைகளை யமைத்தால், பஞ்ச காலங்களில் அவை பேருதவியாக இருந்து, பஞ்சத்தின் கொடுமையை ஒருவாறு ஒழித்து நன்மை உண்டாக்குமென அவர் கருதினார். அதனால் அவர் அரசியல் உதவியின்றி இந்தியாவில் இருப்புப்பாதைகள் இடவல்ல முறையை நாடினார்.

1863-ம் ஆண்டிற்கு முன்னர் இந்தியாவில் இருப்புப்பாதை அமைக்க, அரசியலில் சேராத சில கம்பெனி (Companies)களுக்கு அரசாங்கத்தினர் உத்தரவளித்து வந்தனர். ஆனால், அவ்வாண்டிலிருந்து அத்தகைய கம்பெனியார்களுக்கு இருப்புப்பாதை அமைக்க உத்தரவு மறுக்கப்பட்டது. ரிப்பன்பிரபு அரசியலால் இயலாததும், பஞ்சக் கொடுமையை ஒழிக்க அத்தியாவசியமானது



மான இருப்புப்பாதைகளை அமைக்கப் பொதுக் கம்பெனியார்களுக்கு உத்தரவளித்தார். அதன் பயனாக இருப்புப்பாதை இந்தியாவில் அதிக விரைவாகப் பரவியது. இதனால் பஞ்சத்தை ஒழிக்க இயலாவிடினும் பஞ்சத்தின் கொடுமையை ஒருவாறு ஒழிக்க ரிப்பன் பிரபு நாடிய முறைகளுள் இது மெச்சத்தக்கதேயாகும்.

மேலும், பஞ்சத்தைப்பற்றித் தீர விசாரிக்க அவர் ஒரு கமிட்டியை அமர்த்தினார். அதனுடைய முடிவுரையிலிருந்து, பஞ்சநிவர்த்தி என்கிற ஒரு நூலை இயற்றி வெளியிட்டார். அதில் பஞ்சங்கள் நேரிடுவதன் காரணத்தையும் அத்தகைய பஞ்சங்களைத் தடுத்தற்குச் செய்யவேண்டிய முறைகளையும், பஞ்சம் நேர்ந்த காலத்தில் பஞ்சக்கொடுமையை ஒழிப்பதற்குக் கையாள வேண்டிய முறைகளையும் விளக்கமாக விரித்துரைத்துள்ளார். மேலும், சில ஆண்டுகளுக்கு முன்னால் நிறுவப்பட்டிருந்த விவசாய இலாகா (Department of Agriculture) என்னுஞ் சங்கம் சரியாகத் தன்னுடைய கடனை யாற்றவில்லை. அதனால் ரிப்பன் பிரபு மீண்டும் அவ்விலாகாவைப் புதுப்பித்து அதனை உபயோகமான வழியில் உழைக்குமாறு செய்தார். அதனால் குடியானவர்கள் பெரும் பயனடைந்தனர்.

ரிப்பன் பிரபு மேலோதிய சீரியமுறைகளை நாடிப் பஞ்சங்கள் நேரிடா வழியையும், அவ்வாறு தவறி நேரிடினும் அப்பஞ்சங்களை ஒழிக்கும் முறைகளையும் உணர்ந்து, பஞ்சக்கொடுமையை ஒழித்து வந்தார்.

## 14. வங்காள நிலவரிச் சட்டம்

ஏழைமக்களின் நலத்தை நாடும் அரசியலே நல்லரசியல் என்னும் பேருண்மையை யுணர்ந்த ரிப்பன் பிரபு, தம் இளமைமுதல் ஏழை மக்களுக்குத் தம்மால் இயன்ற உதவியைச் செய்திடலே தம்முடைய கடன் என்ப துணர்ந்துவந்தார். இந்தியாவின் கண்ணுள்ள ஏழை மக்களின் நிலைமையும், தொழிலாளர்கள் கால வரையறையின்றி உழைக்குங் கொடுமையும், இந்தியாவிலுள்ள ஏழைக் குடியானவன் பயிர் செய்யும் முறைகளை நன்குணராது படும்பாடும் ரிப்பன் பிரபுவினுடைய உள்ளத்தைக் கரைத்துநின்றன. அக் குறைகளையெல்லாம் நீக்கல் தம்முடைய கடன் என்று அவர் தெரிந்து அவற்றிற்குரிய பல நெறிகளை நாடினர்.

பண்டைக்காலம் முதல் இந்தியாவிலுள்ள நிலம் இரண்டு பிரிவாகப் பிரிக்கப்பட்டிருந்தது. அவைகளில் ஒன்று பிறர் நிலத்தில் குடியானவர்கள் பயிர் செய்தும் உறைந்தும் வருவதாம். அந்த நிலத்திற்கு ரயத்தி (Ryoti) என்று பெயர். அந்நிலத்தில் வாழும உரிமை பண்டைக் காலத்திலிருந்து குடியானவர்களுக்கு உண்டு. மற்றொன்று நிலம் ஒருவனுக்கு உரிமையாய் இருப்பது. அவன் தன் நிலத்தைத் தன்னிஷ்டப்படி உபயோகித்துக் கொள்ளலாம்.

ஆனால், நிலத்திற் குரியவனுக்கும் அவனுடைய நிலத்தில் குடிக்கூலிக்கிருக்கும் குடியானவனுக்கும்



அடிக்கடி வழக்கு நடப்பதுண்டு. அத்தகைய வழக்கு மிகவும் மும்முரமாக வங்காள தேயத்திலும் (Bengal) அவுட் தேயத்திலும் நடந்துவந்தது. கார்ன்வாலிஸ் பிரபு (Lord Cornwallis) வினுடைய காலத்தில் இவ்வழக்கை ஒருவாறு ஒழிக்க நிலங்களின் பெருமை மிகுந்த நிலையாகிய தீர்மானம் (The Permanent Settlement) என்பது ஏற்படுத்தப்பட்டது. ஆனால், அந்த ஏற்பாட்டால் நிலத்திற்குரியவர்கள் (Landlords) அரசாங்கத்திற்குச் செலுத்தவேண்டிய வரி நிர்ணயிக்கப்பட்டதே யல்லால், உரிமையின்றி வாடிய ஏழைக் குடியானவன் அல்லலை ஒழிக்கவும், நிலத்திற் குரியவனுக்குள்ள உரிமையைப்போலக் குடிக்கூலிக்காரனுக்கும் சில உரிமைகள் உண்டு என்பதை வற்புறுத்தவும், அத்தீர்மானத்தால் ஏற்படவில்லை.

1873-ம் ஆண்டு குடியானவர்கள் குழப்பங்கள் ஆங்காங்குக் கிளர்ந்தெழுந்தன. நிலத்திற் குரியவர்களுடைய கொடுமையைத் தாங்கமுடியாமல், தங்களுக்குரிய உரிமைகளைக் கொள்ளவேண்டும் என்ற விருப்பத்தாலேயே குடியாளவர்கள் இவ்வாறு குழப்பஞ் செய்யத் தொடங்கினரென்பதை ரிப்பன் பிரபு முன்னரே அறிந்துள்ளார். ஆகையால், வெளியூர் வழக்குகள் ஒழிந்ததும், நிலத்திற்குரியவர்களால் துன்புற்று வாழும் ஏழைக் குடியானவர்களுக்கு, உரிமையை வழங்கவேண்டுமென்று அவர் துணிந்தனர். பின்பு அவர் அம்முறையை முதலில் வங்காளத்திலேயே கையாளவேண்டுமென்று தீர்மானித்து வங்காள வரிச்சட்டத்தை (Bengal Rent Bill) அங்கே நிறுவ முயன்றார்.

தம்முடைய தீர்மானம் இந்தியா அமைச்சருடைய சம்மதியுடன் சட்டமாக மாறிவிடின், வங்காள ஜமீன் தார்கள் தம்மை வெறுக்கநேரிடும் என்பதை ரிப்பன் பிரபு நன்கறிவர். ஆயினும், ஏழைமக்களுக்கு விருப்பை யும், சந்தோஷத்தையுஞ் சமாதானத்தையும் அளித்து, ஜமீன்தாரர்களுடைய வெறுப்பைக் கொள்ளலே நன்று என்று அவருக்குத் தோன்றியது. ஏழைமக்கள் உரி மைக்கென ஜமீன்தாரர்களுடைய வெறுப்பையுந் தாங்கத் துணிந்த, அவருடைய இயல்பன்றோ தன்னலம் பேணுப் பெருந்தகையாளர் இயல்பு.

ஆனல், இந்தியா அமைச்சர் அச்சட்டத்தில் அவர் வரைந்தவைகளையெல்லாம் அப்படியே ஏற்றுக்கொள்ள வில்லை. அவர், ஒரு குடியானவன் ஜமீன்தாரருடைய நிலத்திலாவது கிராமத்திலாவது 12-ஆண்டுகள் விடாது வசித்தால், அவனுக்கே நிலத்தில் வசிக்கும் உரிமையை வழங்கவேண்டும் என்பது தம்முடைய கருத்தென்று ரிப்பன் பிரபுவுக்கு அறிவித்தார். உடனே ரிப்பன் பிரபு, "இம்முறையை நாம் கையாண்டால் ஏழைக் குடியானவனுக்கு நிலத்தில் வசிக்கும் உரிமையை வழங்க எந்த ஜமீன்தாரனும் இணங்கமாட்டான். அன்றியும், அவன் இந்த ஏற்பாட்டை அழிக்கத் தன்னுடைய குடியானவர்களை ஒரு நிலத்திலிருந்து மற்றொரு நிலத் திற்கும், ஒரு கிராமத்திலிருந்து மற்றொரு கிராமத்திற் கும் மாற்றிக்கொண்டே இருப்பான். அதனல் ஒரு குடியானவன் ஒரு நிலத்திலேனும், அல்லது ஒரு கிரா மத்திலேனும் விடாது 12-ஆண்டுகள் வசிக்க இயலாது. கடைசியில் ஒரு குடியானவனாவது நிலத்தில் வசிக்கும் உரிமையைப் பெறமுடியாது" என்று இந்தியா அமைச்ச ருடைய கருத்திற்கிணங்க ஏற்படுத்துவதால் விளையுங் குறைகளையெல்லாம் விளக்கமாக எடுத்துக் காட்டினர்.



எனினும், ரிப்பன் பிரபுவின் கருத்தை இந்திய அரசியலாரும், இந்திய அமைச்சரும் பொருட் செய்ய வில்லை. ஆதலின், 1883-ம் ஆண்டு, அமைச்சருடைய கருத்தின்படி வங்காள வரிச்சட்டம் அரசியல் சட்ட மாக ஏற்படுத்தப்பட்டது.

ரிப்பன் பிரபுவின் முக்கிய கருத்து அந்தச் சட்டத் தில் விலக்கப்பட்டிருந்தும் வங்காள ஜமீன்தாரர்கள் அவரை வெறுத்தனர். தங்களுடைய உரிமையை ஒழிக்க வந்த விரோதியென்று அவரைக் கடிந்தனர். பரம்பரை யாகப் பண்டைக் காலத்திலிருந்து தாங்கள் கையாண்டு வந்த முறைகளைக்கு முட்டுக்கட்டையிடத் தோன்றிய கொடியரென்று அவரைப் பழித்தனர். ஆனல், சில ஆண்டுகளுக்குப்பின்னல், அவரைப்பழித்த அந்தஜமீன் தாரர்களே, ரிப்பன் பிரபுவினுடைய மதப்பற்றையும் இந் தியாவின் மாட்டும் இந்திய ஏழைமக்களிடத்திலும் அவர் கொண்ட ஆர்வத்தையு முணர்ந்தனர். பின்பு அவர்கள் ரிப்பன் பிரபு இந்தியாவைவிட்டுச் செல்லுங் கால் அவரைப் பலவாறு புகழ்ந்து மனமகிழ்ச்சியுடன் ஒரு பத்திரத்தை (Address) அவருக்கு வாசித்தளித் தனர். அவருடைய ஒழுக்கமும் உண்மையும் அவர்க ளுடைய உள்ளத்தைக் கொள்ளைகொண்டன.

ஏழைக்குடியானவர்களும் ரிப்பன் பிரபுவைத் தமது தந்தைபோல் போற்றினர். அவர்கள் தங்களுக்குரிய

உரிமையை யெல்லாம் அப்பொழுது பெறவில்லை. ஆயினும், தங்களுடைய உரிமைக்கெனப் போராடிய உத்தமரென்று அவரைப் புகழ்ந்தனர். வேறு ஜாதியில் பிறந்தும், தம்முடைய நிலையிலிருப்பவர்களுக்குள்ள செல்வச் செருக்கும், அரசியல் தலைவரென்ற ஆணவமும், சிறிதுமின்றி ஏழை மக்களுக்குத் தம்மாலியன்ற உதவியை ஆற்றலே தம்முடைய கடன் என்ற அறநெறியைப் பற்றி நடந்தமையால், அனைவரும் அவரை மனமார வாழ்த்தினர்.

## 15. தேச பாஷைப் பத்திரிகைச் சட்டம்

இதுநிற்க, சென்ற ஐம்பதாண்டுகளாக இந்தியப் பத்திரிகைகளைப் பற்றிய விவாதம் இந்தியாவில் மும்முரமாக நடந்து வந்தது. வாரன் ஹேஸ்டிங்ஸ் (Warren Hastings) இராஜப் பிரதிநிதியாக இருந்த காலத்திலேயே ஸர் தாமஸ் மன்ரோ (Sir Thomas Munro) என்னுஞ் சென்னை கவர்னர், "இந்தியாவில் நம்முடைய ஆட்சி எதிர்காலத்தில் நெடுங்காலம் நீடித்திருக்கவும், நாம் இந்தியாவை விட்டுச் செல்லுங்கால் இந்தியாவிலுள்ளவர்கள் தங்களைத் தாங்களே ஆளுந்திறமையுள்ளவர்களாக்கவும் நாம் இந்தியாவிலுள்ள பத்திரிகைகளை அடக்கவேண்டும்" என்று இந்தியாவின் கவர்னர் ஜெனராலுக்கும் கிழக்கு இந்திய கம்பேனி (East India Company)யாரின் அத்தியக்ஷர்களுக்கும் (Directors) வரைந்திருந்தார். அவருடைய கடிதத்தைக் கண்ணுற்ற கவர்னர் ஜெனரலாகிய வாரன் ஹேஸ்டிங்ஸ் "பத்திரிகைகளின் உரிமை இந்தியக் குடிகளின் இயற்கை யுரிமை என்பதே என்னுடைய துணிபு" என்று பதில்வரைந்துவிட்டார். கம்பெனியின் முதலாளிகளும் மன்ரோவின் கருத்துக்களைச் சிறிதும் பொருட் செய்யவில்லை.

வாரன் ஹேஸ்டிங்ஸ் காலத்திலேயே பிரசுர உரிமை இந்தியாவுக்கு வழங்கப்பட்டதால், இந்தியாவில் சுயபாஷைப் பத்திரிகைகள் ஆரம்பிக்கப்பட்டன. ஆனால், அவருக்குப் பின்னால் 1823-ம் ஆண்டு, கவர்னர் ஜெனரல் வேலையைக் கவனித்த ஆடம் (Adam) என்பவர், சட்ட வரம்பொன்று மின்மையால் அரசியலைக் கண்ட

வாறு பழிக்கத் தொடங்கும் பத்திரிகைத் தலைவர்களை ஐரோப்பாவுக்கு அனுப்பிவிடவேண்டும் என அவசரச் சட்டம் (Ordinance) ஒன்றை 1823-ம் ஆண்டு ஏற்படுத்தினர். வில்லியம் பெண்டிங் பிரபு (Lord William Bentinck) காலத்தில் ஆங்கில இந்தியப் (Anglo-Indian) பத்திரிகைகள் அரசியல் முறையைக் கண்டவாறு கண்டித்தனவெனினும் அவர் அவைகளைச் சிறிதும் பொருட் செய்யவில்லை. ஆனால் 1835-ம் ஆண்டு, இந்தியப் பத்திரிகைகளிலும் புத்தகங்களிலும் பிரசுரிக்கப்படும் பொதுக் கருத்துக்களை வரைநிறுவித் தண்டித்தல் நல்லரசியலின் இலக்கண மன்றென்பதுணர்ந்து, பத்திரிகைகளின் அவசரச் சட்டத்தை நீக்கி அவைகளுக்கு உரிமையை வழங்கினர். சிப்பாய் கலகம் நடந்த சமயத்தில் ஆங்கிலப் பத்திரிகைகளையும் தேச பாஷைப் பத்திரிகைகளையும் சிறிதுகாலம் முற்றும் நிறுத்தி வைக்கவேண்டுமென ஓர் அநித்யச் (Temporary) சட்டம் ஏற்படுத்தப்பட்டது.

லிட்டன் பிரபுவின் (Lord Lytton) காலத்தில் ருஷ்ய யுத்தம் நடந்தது. அந்த யுத்தத்தில் ருஷ்யதேயம் பெற்ற வெற்றிகளை யெல்லாம் இந்தியாவிலுள்ள சுய பாஷைப் பத்திரிகைகள் புகழ்ந்து பேசின; அன்றியும், இந்தியாவில் ஆங்கிலர் தமது அரசியலை நெறிமீறி நடத்தலால், அதனை ஒழித்தலே நன்றென்றும் வரைந்தன. அக்கட்டுரைகளைக் கண்ணுற்ற இந்திய அமைச்சராகிய ஸாலிஸ்பரி பிரபு (Lord Salisbury) அக்கட்டுரைகளை யெல்லாங் கவனிக்குமாறு லிட்டன் பிரபுவுக்கும் இந்தியாவிலுள்ள மற்ற உத்தியோகஸ்தர்களுக்கும் கட்டளை யிட்டார்.



உடனே, லிட்டன் பிரபு தேசபாஷைப் பத்திரிகைகளின் உரிமையை ஒடுக்க, தேசபாஷைப் பத்திரிகைச் சட்டம் (Vernacular Press Act) என்னுஞ் சட்டத்தை நிறுவினர். அச்சட்டத்திற் கிணங்க, தேச பாஷைப் பத்திரிகைகள் அரசியலுக்கு விரோதமாகவும், அரசியலை வெறுக்குமாறுங் கட்டுரைகள் வரைந்து பிரசுரிக்கலாகாவென்று ஏற்பாடாயிற்று. அன்றியும், பத்திராதிபர்கள் அவ்வாறு நடவாதிருக்க அவர்களிடமிருந்து வாக்குறுதி பெறவும், ஈடுவாங்கவும் நியாயாதிகாரிகளுக்கு (Magistrates) அதிகாரமும் வழங்கப்பட்டது.

ஆயினும், அந்தச் சட்டத்தை இராஜப்பிரதிநிதி இந்தியாப் பிரதேசத்தில் எங்கு உபயோகிக்குமாறு கட்டளை யிடுகின்றாரோ அந்த இடத்திலேயே அதை உபயோகிக்க வேண்டுமென்ற நியதியும் இருந்தது.

1878-ம் ஆண்டு லிட்டன் பிரபு ஏற்படுத்திய அந்தச்சட்டம் தேசபாஷைப் பத்திரிகைகளைப் பந்தித்ததேயல்லால், ஆங்கில இந்தியப் பிரசுரங்களைப் பந்திக்கவில்லை. ஆனால், அந்தச் சட்டம் நான்கு ஆண்டுகள் வரையில் சட்டப் புத்தகத்தில் இருந்ததைத் தவிர, அது ஒரு சமயமும் உபயோகிக்கப் படவில்லை.

இதனை யுணர்ந்த கிலாட்ஸ்டன் இத்தகைய பக்ஷபாதமுள்ள சட்டம் சட்டப் புத்தகத்தில் இருத்தலாகாது என்றும், அது இந்திய மக்களுக்கு இந்திய அரசியலின்மீதும் ஆங்கிலர்கள்மீதும் வெறுப்பை உண்டாக்குமென்றும் 1881-ம் ஆண்டு ஜனவரி (January) மாதம் 29-ந்தேதி அச்சட்டத்தைச் சட்டப் புத்தகத்தி

லிருந்து அடியோடு எடுத்து விடுதலே நலமென்றும் அதுகாலை இராஜப் பிரதிநிதியாக விருந்த ரிப்பன் பிரபுவுக்கு அறிவித்தார்.

கிலாட்ஸ்டனுடைய லிகிதத்திற்கு முன்னரே தேச பாஷைப் பத்திரிகைகளின் சட்டத்தை ஒழித்து விடவேண்டுமென்று ரிப்பன் பிரபு தீர்மானித்திருந்தார். அதனால், அவர் அதுவே தகுந்த சமயமென உணர்ந்து அச்சட்டத்தைச் சட்டப் புத்தகத்திலிருந்து ஒழித்து விட ஒரு தீர்மானம் கொண்டுவந்தார். ஆனால், அத்தீர்மானத்தைச் சங்கமும் (Council) சட்ட நிரூபணசபை (Legislative Council) யும் ஏற்றுக்கொள்ளவில்லை.

அச்சட்டத்தை அடியோடு எடுத்துவிட்டு அதற்குப்பதிலாக, "தேசபாஷைப் பத்திரிகைகளாயினும், ஆங்கில இந்தியப் பத்திரிகைகளாயினும் அரசியலுக்கு விரோதமாகக் கட்டுரைகள் வரைந்திடின், அப்பத்திரிகைகள் சட்டப்படி தண்டிக்கப்படும்" என்று ரிப்பன் பிரபு ஜாதிவித்தியாச மில்லாமல் கொண்டுவந்த தீர்மானத்தை, இந்தியாவிலிருந்த ஆங்கிலர்கள் பெரிதும் வெறுத்தனர். இந்திய மக்களைவிடத் தாங்கள் உயர்ந்தவர்கள் என்று அவர்கள் கொண்ட இறுமாப்பே அதற்குக் காரணமாகும். ரிப்பன் பிரபுவின் தீர்மானத்தை, ஆங்கிலப் பத்திரிகைகள் கண்டவாறு கண்டித்தன. தங்களுடைய பிறப்புரிமையை ஒழிக்கத் தங்களுடைய குலத்திலேயே உதித்த கோடரிக் காம்பெனவும் அவரைப் பழித்தன.

"பனங்காட்டுநரி சலசலப்புக் கஞ்சாது" என்னும் மொழிக்கிணங்க, ரிப்பன் பிரபு இம்மிரட்டல்களுக்கெல்லாம் அஞ்சவில்லை. தம்முடைய நிர்வாகசங்கமும் சட்ட



நிரூபணசபையும், இந்தியாவில் அதுகாலை உறைந்துவந்த ஆங்கிலர்களும் தம்முடைய தீர்மானத்தை எதிர்த்து நின்றபோதிலும், தமக்கு உரிய சர்வ அதிகாரத்தினாலே சுயபாஷைப் பத்திரிகைகளின் சட்டத்தைச் சட்டப் புத்தகத்திலிருந்து எடுத்துவிட அவர் துணிவு கொண்டார்.

ஆனால், சில மாதங்களுக்குப்பின் ரிப்பன் பிரபுவினுடைய துணிவையும், அவருடைய உண்மையோடியைந்த கருத்தையும் உணர்ந்த அவருடைய நண்பர்களும் சட்ட நிரூபண சபையினரும் அவருடைய தீர்மானத்தை ஆமோதித்தனர். 1882-ம் ஆண்டு தேச பாஷைப் பத்திரிகைச் சட்டம் சட்ட புத்தகத்திலிருந்து அடியோடு எடுக்கப்பட்டது.

அப்போது இந்திய மக்கள் கொண்ட களிப்புக்கும், இந்தியாவிலுள்ள ஆங்கில மக்கள் கொண்ட வெறுப்புக்கும் எல்லையில்லை. இந்திய மக்களுள் கற்றோரும் மற்றோரும் செல்வந்தர்களும் வறியவர்களும் தங்களுக்கு உரிமை வழங்கவந்த உத்தமரென்று ரிப்பன் பிரபுவைப் போற்றினர். இந்தியாவிலுள்ள ஆங்கிலர்கள் தங்கள் பிறப்புரிமையை ஒடுக்கிய கொடியாரென்று அவரைப் பலவாறு பழித்தனர்.

ரிப்பன் பிரபு, "என்கடன் பணிசெய்து கிடப்பதே" என்ற அறநெறியைப் பற்றியவராதலால், அவர் பிறருடைய விருப்பையும் வெறுப்பையும் ஜாதிமத பேதங்களையும் சிறிதும் கவனியாது தம்முடைய அரசியலை இனிது நடத்தலானார்.

## 16. கல்வி முறை

இந்தியாவின் அரசியல் ஆங்கில மொழியிலேயே நடந்து வருகின்றதல்லவா? இந்திய மக்கள் அவ்வரசியலில் உரிமைபெறவும் உத்தியோகம் வகிக்கவும் ஆங்கில மொழி ஞானம் படைத்தவர்களாக இருத்தல் வேண்டும் என்ற முறை ஏற்படுத்தப்பட்டது. அதனால், உயர்தரக் கல்வி ஆங்கில மொழியிலேயே புகட்டப்பட வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது. எனினும், ஆங்காங்கு எழும்பிய கிளர்ச்சியின் பயனால் எம்மொழியில் கல்வியை இந்திய மக்களுக்குப் புகட்டி, அரசியலில் உத்தியோகத்தையும் உரிமையையும்பெற அவர்களைத் தகுதியுடையவராக்குவது என்னும் வழக்கைத் தீரவிசாரிக்க மெக்காலே (Macaulay) என்னும் பெரியாரைத் தலைவராகவுடைய ஒரு சங்கம் நிறுவப்பட்டது. 1835-ம் ஆண்டு ஆங்கில மொழியிலேயே இந்திய மக்களுக்குக் கல்வியைப் புகட்டவேண்டும் என்று அச்சங்கம் முடிவு கட்டிக் கூறியது.

அம்முடிவிற்கிணங்க வில்லியம் பென்டிங் பிரபு (Lord William Bentinck) அதுவே யாண்டு மார்ச்சு (March) மாதம் கல்விச்சட்டம் ஏற்படுத்தி, கல்கத்தா வைத்திய கலாசாலை (Calcutta Medical College) க்கு அஸ்திவாரமிட்டார். அத்தகைய கல்வியை இந்தியா முழுமையும் பரப்ப, கிறிஸ்துவப் பாதிரிமார்களும் பெரும்பாடு பட்டுழைத்தனர்.

1854-ம் ஆண்டு இந்திய அமைச்சராகிய சர் சார்லஸ் உட் (Sir Charles Wood) என்பவர் கல்வியைப்பற்றிய தீர்மானம் ஒன்று அனுப்பினார். அது சமயம்



இந்தியாவில் கவர்னர் ஜெனரலாக இருந்த டேல்லௌஸி (Delhousie) பிரபு அதை ஏற்றுக்கொண்டு கிராமங்களில் தேசபாஷைப் பள்ளிக்கூடங்களை அமைத்தனர். 1857-ம் ஆண்டு லண்டன் கல்விக் கழக (London University) முறையில் கல்கத்தா (Calcutta) பம்பாய் (Bombay) சென்னை (Madras) முதலிய முக்கிய இடங்களில் கல்விக் கழகங்கள் அமைக்கப்பட்டன. சிலவாண்டுகளுக்குப் பின்னால் லாகூரிலும் (Lahore) அலஹாபாதிலும் (Alahabad) கல்விக்கழகங்கள் தோன்றலாயின.

மேலோதிய கல்விக் கழகங்கள் அறிவைப் பண்படுத்தியதுடன் மேனாட்டு ஞானத்தையும் இந்திய மக்களுக்குப் புகட்டி வந்தமையால், மேனாட்டையும் கீழ்நாட்டையும் இக்கழகங்கள் பிணித்துநின்றன என்று கூறுதல் மிகையாகாது.

ஆனால், இவ்வுயர்தரக் கல்வி, சிலருக்கே புகட்டப்பட்டன. உயர்தரக் கல்வியைப் புகட்டக் காட்டிய ஊக்கம் பிரதமக் கல்வியில் காட்டப்படவில்லை. அதன் பயனாக மேனாட்டு ஞானத்தைப் பெரிதும், கீழ்நாட்டு ஞானத்தைச் சிறிதும் அடைந்த ஒரு சிறுவகுப்பு இந்தியாவில் தோன்றியது. அவர்கள் ஆங்கிலத்தில் பேசுவதை ஆயிரக்கணக்கான இந்திய மக்கள் உணர இயலாமல் போயிற்று.

இக்குறைகளை உணர்ந்த ரிப்பன் பிரபு, "ஒரு மரம் தோப்பாகாது" என்பதற்கிணங்க, இந்தியாவில் ஆங்காங்குச் சிலர் உயர்தரக் கல்விப்பேறு பெற்றதனால், இந்தியமக்களனைவரும் கல்விப்பேறு வாய்ந்தவர் என்று

கூறலாகாது என்று எண்ணினார். அதனால், அவர் உயர்தரக் கல்விப்பேறு வாய்க்கப்பெற்ற இந்தியமக்கள் அக்கல்விப்பேறு வாய்க்கப்பெறாத எண்ணிறந்த மக்களினின்றும் வேற்றுமை யுறுவாராதலால், கற்றவர் வகுப்பு என்ற ஒரு புதியவகுப்பு இந்திய மக்களுக்குள்ளேயே தோன்றக்கூடும் என்று அஞ்சினார். பிரதமக் கல்வியையேனும் இந்தியமக்கள் கட்டாயமாகக் கற்றாலன்றி உயர்தரக் கல்வியால் உண்டாகும் வேற்றுமை ஒழியாது என்று அவர் உன்னி, கல்வி விஷயங்களையெல்லாம் தீரவிசாரித்துக் கல்வி இந்தியா முழுமையும் பரவுதற்குரிய முறைகளை ஆராய்ந்து முடிவுக்கு வருமாறு 1881-ம் ஆண்டு ஹண்டர் (W. Hunter) என்னும் பெரியாரின் தலைமையில் ஒருசங்கத்தை நிறுவினார். 1883-ம் ஆண்டு அச்சங்கத்தார் தங்களுடைய முடிவுகளையெல்லாம் தெளிவாக வரைந்து ரிப்பன் பிரபுவினிடமளித்தனர். அடுத்த ஆண்டு அச்சங்கத்தின் தீர்மானங்களுக் கிணங்க அரசியலில் ஒரு சட்டமானது நிறுவப்பட்டது. அதுகாலை ரிப்பன் பிரபுவின் இந்திய அரசியல் பொறுப்பு இறுதி அடைந்து விட்டமையால், அவர் அச்சட்டத்தை அமுலுக்குக் கொண்டுவர இயலாது போயிற்று. எனினும் அவருக்குப் பின் வந்தோர் அச்சட்டத்திற் கிணங்கக் கல்வியைப் பரப்பும் முறைகளைப் பற்றினார்கள். எனினும், உயர்தரக் கல்வியின் முறைகளை யுணர்ந்து, பிரதமக் கல்வியை அனைவருக்கும் எளிதில் அளித்த பெருமை ரிப்பன் பிரபுவுக்கே உரியது. கல்வியெனுங் கருந்தனத்தின் மாண்பைப் பள்ளியில் ஓதாமலே உணர்ந்த அவர் கல்வியைப்பரப்ப எடுத்துக்கொண்ட முயற்சி பாராட்டத் தக்கதே யாம்.

## 17. இராஜரீக உத்தியோகமும் போட்டிப் பரீட்சையும்

இந்திய இராஜரீக உத்தியோக விஷயத்திலும் ரிப்பன் பிரபு இந்திய மக்களுக்குப் பெருந்தொண் டாற்றினார். அக்காலத்தில் இந்திய இராஜரீக உத்தியோகங்கள், லண்டனில் நடக்கும் போட்டிப் பரீக்ஷையில் தேறியவர்களுக்கும், இராஜப் பிரதிநிதியால் தகுந்தவர்கள் என்று தெரிந்தெடுக்கப் பட்டவர்களுக்கும் அளிக்கப்பட்டன. இவைகளில் பின் சொன்னமுறை லிட்டன் பிரபுவினாலே ஏற்படுத்தப்பட்டது. அந்த ஏற்பாட்டால், இராஜப்பிரதிநிதிக்கு வேண்டியவர்களும், நல்ல குடியில் பிறந்தவர்களுமே உத்தியோகங்களை வகிக்கலாயினர். இயற்கையிலேயே லிட்டன் பிரபு, கல்விப்பேறு வாய்ந்த இந்தியர்களை வெறுத்து வந்தார். அவர் முதலில் இந்தியர்களை இராஜரீக உத்தியோகத்திற்கு உரியவர்களாக்கக் கூடாதென்றெண்ணினார். ஆயினும், ஆங்கிலதேயத்திலுள்ள இந்திய சபையில், இராஜரீக உத்தியோகத்தில் ஐந்திலொருபங்கு இந்தியர்களுக்கு அளிக்கப்படவேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது. அவர் அதற்கிணங்கினாரெனினும், உயர்தர உத்தியோகங்களைக் கல்விப்பேறற்ற உயர்குடியில் பிறந்தவர்களுக்கே அவர் கொடுத்து வந்தார். அதனால் கல்விப்பேறு வாய்ந்த இந்தியர்கள் மாட்டு அவருக்கு இருந்த வெறுப்பு வெள்ளிடை மலையென விளங்கியது.

மேலும், லிட்டன் பிரபு இந்தியர்களை லண்டனில் நடக்கும் போட்டிப் பரீக்ஷைக்கும் போகாது தடுக்க

வேண்டுமெனக் கருதினார். அதனால் அவர் அப்பரீட்சைக்குப் போகின்றவர்கள் 19-வயதுள்ளவர்களாக இருக்கவேண்டும் என ஒருவிதி ஏற்படுத்தினார். அதற்கு முன்னர் 21-வயது வரையறுக்கப்பட்டிருக்க, அழுக்காற்றினாலும், வெறுப்பினாலும் லிட்டன் பிரபு இவ்வாறு செய்தனர். அது கல்விப்பேறு பெற்ற இந்தியர்களுக்கு அவர்மாட்டு வெறுப்பை உண்டாக்கியது. இந்திய மாணவனொருவன் 19-ஆண்டு நிறைவதன் முன்னர் அந்நிய பாஷையாகிய ஆங்கிலமொழியில் அறிவு வாய்க்கப் பெறுவது இயலாத காரியம் என்பதையுணர்ந்த கற்றறிந்த இந்தியர்கள் பழையபடி வயதை 21-ஆண்டுகளாக மாற்றுமாறு கிளர்ச்சி செய்தனர்.

லிட்டன் பிரபுவின் சதியாலோசனையையும் வஞ்சனையையும் ரிப்பன் பிரபு உணர்ந்தவுடன், அவர் அக்குறைகளை யெல்லாம் ஒழிக்கும் வகை தேடினர். 1883-ம் ஆண்டு இங்கிலாந்திலும் (England) இந்தியாவிலும் ஒரே சமயத்தில் போட்டிப் பரீக்ஷையை வைக்கவேண்டும் என்று அவருடைய நிர்வாக சபையிலே கொண்டுவந்தத் தீர்மானம் தள்ளப்பட்டது.

உடனே 1884-ம் ஆண்டு ரிப்பன் பிரபு இந்திய இராஜரீக உத்தியோக விஷயத்தைப்பற்றித் தம்முடைய கருத்துக்களை யெல்லாம் தெளிவாக விளக்கி ஆங்கில இந்திய சபைக்கு அனுப்பினார். அதில் இராஜரீகப் போட்டிப் பரீக்ஷைக்கென நிர்ணயத்திருக்கும் வயதைப் பழையபடி 21-ஆண்டுகளாக்க வேண்டுமென்றும் உத்தியோகத்திற்குப் பரீக்ஷையின்றித் தெரிந்தெடுக்கப்படுகின்றவர்களில் நூற்றுக்கு 18-பேரை உயர்தர



உத்தியோகத்திலும், ஐந்திலொருபாகத்தினரை இராஜரீக உத்தியோகத்திலும் அமர்த்தவேண்டு மென்றும், அவ்வாறு தெரிந்தெடுக்கப் படுவோர் ஒவ்வொரு மாகாணத்தி லிருக்கும் அரசியலால் தெரிந்தெடுக்கப்படவேண்டுமென்றும், அவர்கள் கட்டாயம் கல்வியில் பட்டம் பெற்றவர்களாக இருக்கவேண்டும் என்றும், தெரிந்தெடுக்கவேண்டிய நியதிகளை ஒவ்வொரு மாகாணமும் அவ்வம் மாகாணத்திற் கேற்றவாறு அமைத்துக்கொள்ளலாமென்றும் வரைந்திருந்தார்.

அவருடைய காலத்தில் இராஜரீக உத்தியோக விஷயத்தில் அவர் எழுதியதுபோலவே ஏற்படுத்தப்படவில்லை; எனினும், அவருக்குப் பின்வந்த டப்பரின் பிரபு (Lord Dufferin) வின் காலத்தில் ரிப்பன் பிரபுவின் ஏற்பாடுகளே சட்டங்களாக மாறின. ரிப்பன் பிரபு லிட்டன் பிரபுவைப்போல் அழுக்காறு அரும்பி அல்லலுறாமலும் ஜாதிபேத மின்றியும் செலுத்திய நீதிமுறைகளை எண்ணி யெண்ணி இந்தியர்களுள் கற்றவர்கள் அவரைப் பலவாறு போற்றிப் புகழ்ந்தார்கள். ஆனால், பிறப்புரிமை என்ற இறுமாப்புடைய ஆங்கிலர்கள் அனைவரும் அவரைத் தூற்றி இகழ்ந்தன ரென்பது கூறாமலே விளங்கும்.

## 18. ஸ்தல சுய ஆட்சி

"இந்தியாவிலுள்ள நம்முடைய குடிகள் எந்த மதத்தினராகவும் ஜாதியினராகவும் இருப்பினும், அரசியல் உத்தியோகத்திற்குரிய கல்வியும் திறமையும் நேர்மையும் வாய்க்கப் பெற்றவர்களாயிருப்பின் வஞ்சனையின்றி நம்முடைய அரசியலில் சேர்த்துக் கொள்ளப்படுவர்'' என்று விக்டோரியா மகாராணியார் 1851-ம் ஆண்டில் ஓர் அறிக்கை வெளியிட்டனர். அதற்கிணங்க, அரசியல் உத்தியோகத்தை வகிக்கவும், அதில் பங்குபெறவும், தகுதியுள்ள இந்தியர்களுக்கு, உரிமை வழங்கவேண்டுமென்பதே ரிப்பன் பிரபுவின் துணிபு.

அக்காலத்தில் இந்தியாவைப் பற்றி, "குடிகளில்லாக் குடியரசு,'' "நியாய அதிகாரிகளே நிறைந்த இராஜ்யம்,'' என்று எட்மண்ட் பர்க்(Edmund Burke) என்னும் அரசியல் நிபுணரும், "இந்தியாவில் நாம் குடிகளைத் தள்ளிவைத்து விடுகின்றோம்; நாம் இந்தியர்களை ஒன்றுங் கேளாமல் நினைத்த காரியங்களை நினைத்தபடி செய்து முடிக்கிறோம்'' என்று ஸர் ராபர்ட் மான்ட்காமெரி (Sir Robert Montgomery) என்பவரும், 1871-ம் ஆண்டு ஆங்கில அரசாட்சியாரைக் கண்டித்துப் பேசலாயினர். இதனால், இதற்குமுன் இந்திய அரசியலார் இந்தியர்களைப் புறக்கணித்துத் தங்களிஷ்டம் போல் அரசியலை நடாத்தி வந்தனரெனத் தெரிகிறது.



ஆனால், கல்விக் கழகங்களில் பயின்று உயர்தரக் கல்வி வாய்க்கப்பெற்ற இந்தியர்கள் மேனாட்டு அரசியல் முறைகளையும், குடிகளின் உரிமைகளையும் உணர்வார்களாதலால், அவர்கள் அரசியலில் உத்தியோகம் வகிப்பதும், அதில் பங்கு பெறுவதும் தங்களுக்குச் சிறந்த உரிமையென்ப துணர்ந்தனர்.

மகாராணியின் அறிக்கைக் கிணங்க, சாதி மத பேதமின்றி இந்தியர்களுக்கு உரிய பதவியை அரசியலில் வழங்கவேண்டுமென்று கருதிய ரிப்பன் பிரபுவின் தீர்மானமும், அரசியலில் தமக்குரிய உரிமையைப் பெறவேண்டுமென்று உயர்தரக் கல்விகற்ற இந்தியர்கள் கொண்ட ஆர்வமும் அரசியலில் சில சீர்திருத்தங்களைச் (Political Reforms) செய்யுமாறு அவரைத் தூண்டின.

"கல்வியின் வளர்ச்சியும், நாளுக்குநாள் பெருகும் பத்திரிகைகளின் இயல்பும், புத்தி கூர்மை வாய்ந்த அரசாட்சிக்குப் பதில் நியாயவரம்புடன் விளங்கும் அரசாட்சியும், இருப்புப்பாதை, தந்தி முதலியவைகளின் விருத்தியும், மேனாட்டுச் சம்பந்தமும், குடிகளிடத்தில் ஒருவகை மாறுதலை ஏற்படுத்தத் தொடங்கி இருக்கின்றன; புதிய எண்ணங்கள் பிறக்கின்றன; புதிய ஆவல்கள் அரும்பியுள்ளன;............இந்திய அரசியலில் இதுபோழ்து இரண்டு முறைகளைக் கையாளவேண்டும்; அவைகளில் ஒன்று பிரசா உரிமையை அமைத்துக் கல்வியை வளர்த்து, பொது ஊழியங்களில் இந்தியர்களை அமர்த்தி, சுய ஆட்சியை வளர்க்கத் துணிதலாம். மற்றொன்று இந்தியமக்கள் அரசியலில் தக்க அளவில்

பந்து பெறுதலைக் கண்டு அச்சமும் அழுக்காறுங் கொள்ளுதலாம். இவ்விரண்டில் ஏதேனும் ஒரு முறையை நாம் கையாளவேண்டும். இவைகளில் ஒன்று நாட்டின் வளர்ச்சியை உண்டாக்கும்; மற்றொன்றோ நாட்டை முற்றும் அழிக்கும். ஆனால், லிட்டன் பிரபு பின்னேறிய முறையைக் கையாண்டார்; 'நான் முன்னேறிய முறையே மேலானதெனக் கருதுகின்றேன்' என ரிப்பன் பிரபு இந்தியா அமைச்சருக்கு வரைந்த நிருபமே அவருடைய கருத்தை இனிது விளக்குகின்றது.

அதற்கிணங்க அவர், “ஸ்தல சுய ஆட்சியை நாம் அசட்டை செய்யலாகாது” என்று ஓதியதை மற்ற ஸ்தல ஸ்தாபனங்கள் (Local Governments) களிப்புடனும் மரியாதையுடனும் ஒப்புக்கொண்டன. எனவே 1882-ம் ஆண்டு மே(May) மாதம் 18-ம் நாள், ஸ்தல சுய ஆட்சி (Local Self Government) யை நிறுவுதற்குரிய சட்டங்கள் செய்யப்பட்டன.

அச்சட்டத்தின் பயனாக, வாக்களிக்கும் உரிமை பரப்பப்பட்டது. அறிவுடையவர்களுஞ் செல்வாக்குடையவர்களும் அரசியலில் தம்முடைய நாட்டத்தைச் செலுத்தலாயினர். மகாராணியார் தமது அறிக்கையில் அளித்த வாக்கும், ஒருவாறு ஈடேறியது; கற்றறிந்த இந்தியர்களுடைய எண்ணமும் நிறைவேறியது.

அச்சட்டத்திற்கு முன்னரே ஆங்கிலர்கள் நிறைந்த கல்கத்தா, பம்பாய், சென்னை முதலிய இடங்களில்



நகர பரிபாலன சபைகள் (Municipal Councils) அமைக்கப்பட்டிருந்தன. உள்ளூர் பிரதேசங்களில் உள்ளூர் ஆட்சி அந்தந்த ஜில்லாத் தலைவர்களாலேயே (District Officers) நடத்தப்பட்டு வந்தது. ஆனால், மாகாணத் தலைவர்களெல்லாம் ஆங்கிலர்களாகவே இருந்தமை உள்ளூர் சுய ஆட்சிக்கு முரணாக இருந்தது.

இச்சட்டத்திற்குப்பின் நகரபரிபாலனசபையில் ஆங்கில மக்களும், ஆங்கிலத் தலைவர்களும் மிகவும் குறைந்து போயினர். சபைத்தலைவர் மற்ற நகரபரிபாலன சபை அங்கத்தினரால் தெரிந்தெடுக்கப் படவேண்டும் என்பது ஆங்கிலர்களுக்குச் சிறிது வெறுப்பை யுண்டாக்கியது. ஆனால், இந்தியர்களுள் பலர் தெரிந்தெடுக்கப்பட்டு நகர பரிபாலனத்தில் கருத்தைச் செலுத்தலாயினர். நகர பரிபாலன சபையில் குடியாட்சியும் சுயவாட்சியும் தாண்டவமாடின. இச்சட்டத்தால் வாக்களிக்கும் உரிமையைப் பொதுவாகவும், தலைவரைத் தெரிந்தெடுக்கும் உரிமையைச் சிறப்பாகவும் பெற்ற இந்தியமக்கள் ரிப்பன் பிரபுவைப் போற்றுது மற்றென் செய்வர்.

இந்தச் சட்டம் இந்தியர்களுக்கு மிகுந்த களிப்பை உண்டாக்கியது. ஆங்கிலர்கள் முதலில் சிறிது வெகுண்டனர். எனினும் சட்டத்தின் நியாயத்தை யுணர்ந்தபின் அவர்களும் அதனை ஏற்றுக்கொண்டனர். ஆங்கிலப் பிரசுரங்களும் ரிப்பன் பிரபுவை ஒருவாறு போற்றின.

“என்னுடைய பெயரானது தற்கால இந்திய அரசியலில் உள்ளூர் சுய ஆட்சியுடன் பல்வேறு காரணங்களால் பிணிக்கப்பட்டிருக்கின்றது. அதனால், தேய

முழுமையுமுள்ள இந்தியர்களுக்கு என்னிடத்தில் நம்பிக்கையும் பற்றும் உண்டாகி இருப்பது எனக்கே அதிக ஆச்சரியத்தை விளைவிக்கின்றது" என்று ரிப்பன் பிரபு கிம்பர்லி (Kimberly) என்னுந் தம்முடைய நண்பருக்கு வரைந்திருக்கின்றார். இதனால் இந்தியர்கள் ரிப்பன் பிரபுவின் மாட்டுக்கொண்ட அன்பு இனிது விளங்குகின்றது. நிற்க, இந்தியர்கள் ரிப்பன் பிரபுவை "நகரபரிபாலன சபையின் தந்தை" என்று போற்றியதும் மிகையாகாது.

"குடிகளில்லாக் குடியரசு" என்று இந்திய அரசியலை இகழ்ந்து பேசிய எட்மண்ட் பர்க் என்னும் பெரியாரின் மெய்ம்மொழி இச்சட்டத்தால் ஒருவாறு வலியிழந்தது.

## 19. இல்பர்ட் சட்டம்

இந்தியாவில் உறைந்து வந்த ஆங்கிலர்கள் தமது பிறப்புரிமையைப் பெரிதும் போற்றி வந்தனர். அவர்கள் அரசாளும் வர்க்கத்தினராய் இருந்தமையால், தாங்கள் இந்தியர்களைவிட உயர்ந்தவர்கள் என்ற இறுமாப்பு அவர்களிடம் மிகுந்திருந்தது. இந்த ஜாதி பேதத்தை ஒழிக்கவேண்டுமென அரசியல் ஞானிகளில் பலர் கருதினர். இந்த ஜாதிபேதம் ரிப்பன் பிரபுவினுடைய காலத்தில் விக்டோரியா மகாராணியார் தமது அறிக்கையில் வெளியிட்ட வாக்குக்கு விரோதமாக நியாயவரம்பின்றிப் பரவி யிருந்தது.

அத்தகைய பேதம் நியாயவிசாரணையிலும் தலையெடுத்தோங்கினது. ஓர் ஆங்கில நியாயாதிபதிக்கு இந்தியர்களை விசாரித்து நியாயம் வழங்க அதிகாரமிருந்தது. ஆனால், ஓர் இந்திய நியாயாதிபதிக்கு ஓர் ஆங்கிலனை விசாரித்து நியாயம் வழங்கும் உரிமை அளிக்கப்படவில்லை. ஓர் ஆங்கில நியாயாதிபதியைவிட அதிகமாக நியாயஞானமும் கல்வியறிவும், நடுவு நிலைமையும் ஓர் இந்திய நியாயாதிபதிக்கு இல்லையென்றே வைத்துக் கொள்வோம். ஆனால், ஆங்கில நீதிபதிக்கு ஈடாக இந்திய நீதிபதியும் அவ்வியல்புகளைப் பெற்றிருக்கின்றான் என்று உணர்ந்த பின்பன்றோ அவ்விந்தியன் நியாயாதிபதியாக அமர்த்தப்படுகிறான். தவிர, நியாயத்தை வழங்கும் முறையில் ஓர் இந்திய நியாயாதிபதியை ஓர் ஆங்கிலனும் குறைகூறத் துணியவில்லை. அப்படியிருந்

தும், ஆங்கிலனாய்ப் பிறந்த தன்னை இந்திய நீதிபதி நியாயம் விசாரிப்பது தனக்குக் குறைவென்றே அவன் எண்ணினான்.

மேலும் ஓர் ஆங்கில நியாயாதிபதியைக்கொண்டே ஓர் ஆங்கிலனுக்கு நியாயம் வழங்கும் முறை மிகவுங் கடினமாக விருந்ததன்றி, இந்தியர்கள் உள்ளத்தில் வெறுப்பையும் விளைவித்தது.

இவ்வாறு நாளுக்குநாள் வளரும் வெறுப்பையும் ஜாதி பேதத்தையும் அடியோடு ஒழிக்கக்கருதி 1882-ம் ஆண்டு, "நியாயாதிபதியாக வீற்றிருத்தற்குரிய இலக்கணங்களை யுடையவர்கள் ஆங்கிலர்களாக இருப்பினும் இந்தியர்களாக இருப்பினும், அவர்கள் வித்தியாசமின்றி ஆங்கிலர்களையும் இந்தியர்களையும் விசாரித்து நியாயம் வழங்கும் உரிமையுடையவராவார்". என்ற தீர்மானங் கொண்டுவரப்பட்டது.

அத்தீர்மானத்தை யுணர்ந்ததும் இந்தியருக்குள் அமைதி நிலவியமையால், அரசியல் அமைச்சருடைய உத்தரவுடன் 1883-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் (February) 2-ந் தேதி சர் கோர்ட்டிநே இல்பர்ட் (Sir Courtenay Ilbert) என்னும் இந்திய அரசியல் நியாய அமைச்சரானவர் (Legal Member) சட்ட நிரூபண சபை (Legislative Council) யில் அதைக் கொண்டு வந்தார்.

உடனே பெருங் கிளர்ச்சி உண்டாயிற்று. சில வாரங்களில் இந்தியாவிலுள்ள ஆங்கிலர்களெல்லாம் அச்சட்டத்தைக் கண்டிக்க வாயினர். கல்கத்தா



[library stamp]

டௌன் ஹாலில் ஒரு பெரிய கூட்டங்கூடியது. அந்த இராஜதானி முழுவதும் எண்ணிறந்த கூட்டங்கள் கூடி ஒரே மனதாக அச்சட்டத்தைக் கண்டித்துப் பேசலாயின. "இந்தியாவில் உரிமையோடிருக்க வேண்டியவர்கள் ஆங்கிலக் குடிகளே" என்று ஆங்கிலப் பத்திரிகைகள் கூக்குரலிட்டன.

இக்கிளர்ச்சியைக் கண்டதும் ரிப்பன் பிரபு சிறிது தயங்கினார். எனினும், தாம் கொண்டுவந்த சட்டத்தைச் சட்டமாக்கலே முறையென்றுன்னி இக்கிளர்ச்சியின் போராவாரத்தை ஒடுக்கச் சில மாறுதல்களை அச்சட்டத்தி லேற்படுத்தினார். அம்மாறுதல்களையும் ஆங்கில மக்கள் ஏற்றுக்கொள்ளவில்லை.

பின்பு ரிப்பன் பிரபு அச்சட்டத்தில், "ஓர் ஆங்கிலன், இந்திய நியாயாதிபதியினாலாயினும் ஆங்கில நியாயாதிபதியினாலாயினும் விசாரிக்கப்படலாமென்றும், அவ்வாறு விசாரிக்கப்படுங்கால் பாதி ஆங்கிலர்களாலும் அல்லது அமரிக்கர்களாலுமாகிய நடுநிலையாளர் சபை (Jury) ஒன்றை அவன் விருப்பமிருந்தால் கேட்டுப் பெறலாமென்றும்" மாற்றினார். இம்மாறுதலை அனைவரும் ஏற்றுக்கொண்டனர்.

"நடுநிலையாளர் சபையை நாடும் முறை ஜாதி வித்தியாசத்தை அறவே ஒழிக்கவில்லையெனினும், இந்திய நீதிபதிக்கும் ஆங்கிலேயனொருவனை விசாரித்து நியாயம் வழங்கும் உரிமை அளிக்கப்பட்டமையால், கல்வியபின்ற இந்தியமக்கள் ஒருவாறு திருப்தி யடைந்தனர். அதைப்போலவே இந்தியாவில் உறைந்துவந்த

ஆங்கில மக்களும், இந்திய நியாயாதிபதிக்குத் தங்களை விசாரித்துத் தண்டிக்கும் உரிமை வழங்கப்பட்டதெனி னும் நடுநிலையாளர் சபை ஒன்று இருக்கின்றதென்று திருப்தி யடைந்தனர். எனவே அச்சட்டம் இல்பார்ட் சட்டம் என்ற பெயருடன் எதிர்ப்பின்றி நிறைவேறி யது.

இச்சட்டத்தினல் இந்தியாவில் உறைந்துவந்த ஆங்கில மக்களில் பலர் ரிப்பன் பிரபுவை வெறுத்தார் கள். ஆனுல், இந்திய மக்கள் அனைவரும் அவரைத் தமது தந்தையெனப் போற்றி வத்தினர். ஆங்கிலர்க ளிடத்திலிருந்து அவர் எய்திய வெறுப்பென்னும் பனி, இந்தியர்களிடத்துதித்த அன்பென்னும் சுடரொளியால் மறைந்தொழிந்தது.

## 20. இந்தியர் உரிமையை நாடிய இராஜப்பிரதிநிதி

"என் கடன் பணிசெய்து கிடப்பதே" என்ற உண்மை நெறியைப்பற்றி, சாதிமத பேதங்களை ஒழித்து, இந்திய இராஜப்பிரதிநிதி இந்தியர்களுடைய நலத் தையே நாடல்வேண்டும் என்ற பேருண்மையைத் தம் முடைய வாழ்க்கையிலும், செய்கையிலும் மேற் கொண்ட பெரியார் ரிப்பன் பிரபு ஒருவரேயாவர். ஆயிரக்கணக்கான எளிய வாயற்ற இந்தியர்களுக்கு அர சியலில் சம உரிமையும் கல்வியும் நன்களித்து, அவர்க ளுடைய உள்ளத்தைக் கொள்ளை கொண்ட ரிப்பன் பிரபு இராஜப்பிரதிநிதியாக விருந்து இறுதியில் ஆற்றிய தொண்டு இல்பார்ட் சட்டமேயாகும். அச்சட்டம் நிறை வேறியதும், ரிப்பன் பிரபு தம்முடைய பதவியை இராஜிநாமா செய்தார். தாயைப் பிரியுங் குழவிகள் போல இந்திய மக்கள் மிக்க வருத்தத்துடன் அவரை விட்டுப் பிரிந்தனர். ஆயினும், அவர் மாட்டுத் தங் களுக்கிருந்த அன்பை அவர்கள் பலவாறு காட்டினூர் கள்.

முன்பு அவரைப் பன்முறை பழித்துரைத்த ஆங் கிலப் பிரசுரங்களும் "தம்மிடத்தில் ஒப்படைக்கப்பட்ட பல்லாயிர மக்களுக்கு ரிப்பன் பிரபுவைப்போல் அவ்வ ளவு உண்மையாகவும், ஆவலுடனும் இதுவரையில், எந்த இராஜப்பிரதிநிதியும், பாடுபடவில்லை" என்று பின்பு அவரைப் போற்றின.

"இப்பொழுது நான் பெறுகின்ற புகழுக்குக் காரணம் நீங்கள் விதைத்துச் சென்ற விதையேயாகும்" என்று அவருக்குப் பின்னால் இராஜப்பிரதிநிதியாக வந்த டப்பரின் பிரபு (Lord Dufferin) நான்கு ஆண்டுகளுக்குப் பின்னர், அவரைப் புகழ்ந்து பேசலானார்.

அவருடைய காலத்தில் நிறுவப்பட்ட சட்டங்கள் இந்திய சரிதத்தில் மிகவும் முக்கியமானவை. அச்சட்டங்கள் இந்திய சரிதத்தையே மாற்றின என்று கூறினும் மிகையாகாது. "அத்தகைய மனவலி மிகுந்த ஒருவர் வாயில்லாப் பலகோடி ஏழை இந்திய மக்களுக்கு நியாயமளியாதிரார்" என்று ஐந்தாண்டுகளுக்கு முன்னர் இந்து தேயபக்தன் (Hindu Patriot) என்னும் பத்திரிகை வரைந்த மொழியும் மெய்த்தது.

"ஏழைக் குதவுதலே இறைவனைத் தொழுதலாம்" என்னும் கொள்கையின் உண்மையை உணர்ந்த அவருடைய ஆட்சியும், தன்னலம் பேணாப் பெருந்தகையாளராகிய அவருடைய இயல்பும், ஆங்கில அழுக்காறும் ஆணவமும் அற்ற அவருடைய வாழ்க்கையும், தம் மக்களின் வெறுப்பையும் இந்திய மக்களின் விருப்பையும் தாங்கிய அவருடைய அரசியல் நெறிமுறையும், இந்தியர் அகத்தில் பசுமரத் தாணிபோல் என்றும் பதிந்திடுமென்பதற்கு ஓர் ஐயமுமில்லை.

## 21. அரசியல் நிபுணர்

ரிப்பன் பிரபு இந்திய இராஜப் பிரதிநிதியாக அமர்ந்து தம்மாலியன்ற தொண்டை இந்தியமக்களுக் காற்றி வந்தனரல்லவா? அவர் ஆங்கில தேய மடைந்த பின் 1886-ம் ஆண்டு கிளாட்ஸ்டன் அரசியலில் கடற்படையின் தலைவராக (First Lord of Admiralty) அமர்த்தப்பட்டார். அப்பதவியை அவர் பல்லாண்டுகள் வகிக்கவில்லை. ஆயினும், அவர் அப்பதவியை வகித்தவுடன் கப்பற்படையில் சில சீர்திருத்தங்களைச் செய்யத் தொடங்கினார். கிளாட்ஸ்டன் அரசியல் அயர்லாந்து (Ireland) சுய ஆட்சி (Home Rule) சட்டத்தால் தோல்வியுற்றமையால் அவ்வரசியல் முடிவுற்றது.

எனினும், ரிப்பன் பிரபு ஓய்வுடன் தம் வாழ்நாட்களைக் கழித்தாரில்லை. அயர்லாந்து வழக்கு அவருடைய கருத்தை வலித்தது. அயர்லாந்துக்கு உரிமையாட்சி வழங்கவேண்டுமென்று அவர் உன்னினார். உடனே அவர் மார்லி (Morley) என்னுந் தம்முடைய நண்பருடன் அயர்லாந்துக்குச் சென்று ஆங்குப் பல்லிடங்களில் பேசி, அயர்லாந்து மக்களின் நிலைமையையும், உரிமையாட்சியைப் பெற அவர்கள் உரியவராயிருத்தலையும் உணர்ந்தார். அயர்லாந்து மக்கள், இந்தியாவில் அவர் ஆற்றியதொண்டை நன்குணர்வார்களாதலால் அவரைப் பலவாறு போற்றிப் புகழ்ந்தனர். தங்க

ளுடைய உரிமைக்கென அவர் அரசியல் மன்றத்தில் பெரிதும் போராடுவார் என்ற நம்பிக்கை அவர்களுக்கு உண்டாயிற்று.

அரசியல் மன்றத்தில் நாற்பதாண்டுகள் வரையில் பல உயர்ந்த பதவிகளை வகித்த அவருடைய அநுபவத்தைக் கருதியும், இந்தியாவில் அவர் நடாத்திய சீரிய ஆட்சியைக் கருதியும் அனைவரும் அவரைப் பெரிய அரசியல் நிபுணராக மதித்தனர்.

வயதும் அறிவும் அரசியல் ஞானமும் முதிர்ந்த அவர் அரசியலில் ஒருபதவியை வகிக்காவிடினும், சைன்யம், கல்வி, தொழிற்சாலைகள், தொழிலாளர்கள் முதலிய விஷயங்களில் தொண்டு புரியத் தளராத ஊக்கத்தைக் காட்டிவந்தார். 1892-ம் ஆண்டு கிளாட்ஸ்டனின் நான்காம் முறை அரசியல் அமைக்குங்கால் ரிப்பன் பிரபு ஆங்கில வெளி இராஜ்ய அமைச்சராக (Secretary of State for the Colonies) அமர்த்தப்பட்டார். சில ஆண்டுகளில் கிளாட்ஸ்டன் கண் குருடும் காது செவிடும் ஆயினர். அதனால் அவர் அரசியலிலிருந்து விலக நேர்ந்தது. உடனே ரோஸ்பரி பிரபு (Lord Rosebury) பிரதான அமைச்சராயினர்.

ரிப்பன் பிரபு 1895-ம் ஆண்டுவரையில் ஆங்கில வெளி இராஜ்ய அமைச்சர் பதவியை வகித்து எங்கும் சமாதானத்தையும் சகோதர வாஞ்சையையும் நிலைநிறுத்திப் பெரும்பெய ரெய்தினர். 1895-ம் ஆண்டு அவ்வரசியல் முடிவுற அவர் தமது பதவியை ராஜீநாமா செய்துவிட்டார்.



கிளாட்ஸ்டன் தமது பதவியைவிட்டுச் சென்றதும் லிபரல் (Liberal) கட்சியின் தலைமையை வகிக்க அவரைப்போல் திறமை வாய்ந்தவர் ஒருவருங் கிடைக்கவில்லை. அவருக்குப்பின் ரோஸ்பரி (Rosebury) அப்பதவியை வகிக்க, ஹார்கோர்ட் அவரை வெறுக்கலாயினர். அச்சமயம் ரோஸ்பரி, ஹார்கோர்ட், மார்லி, என்னும் மூவரும் அக்கட்சியில் தலைசிறந்து விளங்கினர். அவர்களுள் ரோஸ்பரி சில ஆண்டுகள் அக்கட்சிக்குத் தலைவராக இருந்து ராஜீநாமா செய்துவிட்டுச் சென்றார். அவருக்குப் பின்னர் ஹார்கோர்ட் அக்கட்சிக்குத் தலைவராகி அதனை நல்ல முறையில் நடத்தி வந்தார். பிறகு காம்பேல் பானர்மான் (Campbell-Bannerman) என்பவர் பொது அரசியல் மன்றத்தில் அக்கட்சிக்குத் தலைவராகி அதனை நடத்தலானர்.

1905-ம் ஆண்டு லிபரல் கட்சியார் அரசியலை அமைக்கையில் ரிப்பன் பிரபு அரச முத்திரைக் கதிகாரியாகவும் (Lord Privy Seal) பிரபுக்கள் அரசியல் மன்றத்தில் லிபரல் கட்சியின் தலைவராகவும் அமர்த்தப்பட்டார். காம்பெல் பானர்மான் பிரதான அமைச்சராயினர்.

ரிப்பன் பிரபுவுக்கு அப்பொழுது 78-வயதாயிற்று. சுமார் ஐம்பதாண்டுகளாக உத்தரவாதமுள்ள பதவிகளை ஓயாது வகித்துத் தமது உள்ளத்திற்கு முரணின்றித் தம்முடைய தொண்டை நீதி நெறியிலாற்றிய அவர் ஓய்வை நாடலானர். ஆனால் பிரதான அமைச்சர் வேண்டுகோளால் அவர் மேலோதிய பதவியை ஏற்றுக் கொண்டார்.

1907-ம் ஆண்டு ரிப்பன் பிரபுவினுடைய வாழ்க்கை சிதறுண்டது. அவருடைய மனைவியார் அவ்வாண்டு பிப்ரவரி மாதம் 28-ந் தேதி விண்ணுலகெய்தினார். அவ்வம்மையார் பிரிவு ரிப்பன் பிரபுவை வாட்டியது. ஐம்பதாண்டுகளளவும் அவ்வம்மையார் தாயாகவும், தாரமாகவும், தாதியாகவும் இருந்து செய்த ஊழியத்தை எண்ணியெண்ணி அவர் வருந்தலானார். அடுத்த மாதம் ஆறும் நாள் அவ்வம்மையார் செயின்ட் மேரி (Saint Mary) ஆலயத்தில் உரிய மரியாதைகளுடன் அடக்கஞ் செய்யப்பட்டார்.

பின்பு ரிப்பன் பிரபு, வயதின் முதிர்ச்சியாலும், மனைவியைப் பிரிந்த துயரத்தாலும் அரசியல் பதவிகளை விட்டு, ஓய்வாய் இருக்கவெண்ணினார். ஆனால், பிரதான அமைச்சர் அவ்வரசியல் முடிவுறுங்காறும் பொறுத்திருக்குமாறு அவரை மிகவும் வேண்டிக்கொண்டார்.

அதுகாலை மார்லி (Morley) இந்திய அரசாங்கத்தில் அமைச்சராக இருந்தார். அவர் இந்தியாவுக்குரிய சீர் திருத்தங்கள் சிலவற்றை நிறுவவெண்ணினார். அவர் அதுசமயம் இந்திய இராஜப்பிரதிநிதியாக விருந்த மின்டோ பிரபு (Lord Minto) வுடன் ஆலோசித்து ஒரு பெருஞ்சட்டத்தைத் தயாரித்து ரிப்பன் பிரபுவினுடைய கருத்தை வினவினார். அப்பொழுது ரிப்பன் பிரபு பிரபுக்கள் அரசியல் சபையில் தலைவர் பதவியையும் ஒழித்துவிட்டுக் காலங்கழித்து வந்தார்.

மார்லியினுடைய சீர்திருத்தத்தைப் பற்றி, பத்திரிகைகள் பலவாறு வரைந்தன. எங்கும் கிளர்ச்சிகள்



தோன்றின. அக்கிளர்ச்சியை அடக்க மின்டோபிரபு, வாக்குரிமையையும் (Freedom of Speech) பிரசுர வுரிமையையும் (Freedom of the Press) நிறுத்தச் சில முறைகளைக் கையாண்டார். இம்முறைகளை மார்லியும் ஆமோதித்ததால், இந்தியர்கள் மார்லியினுடைய சீர்திருத்தங்களைப் பற்றிச் சந்தேகிக்கலாயினர்.

அதுசமயம் இங்கிலாந்திலிருந்த கோபாலகிருஷ்ண கோகலே (Gopal Krishna Gokhale) என்பவர்,

“என்னுடைய தேயத்தவர்களுக்கு மார்லியன் மீது இருந்த நம்பிக்கை இப்பொழுது சிதறுண்டு விட்டது....ஆனால், ரிப்பன் பிரபுவினிடத்தில் அவர்களுடைய நம்பிக்கையும் அன்பும் மரியாதையும் எப்பொழுதும் போலவே இருக்கின்றன. ஆங்கிலர்களையெல்லாம் பொதுவாக வெறுக்கின்றவர்களும் ரிப்பன் பிரபுவைப்பற்றி மரியாதையாகப் பேசுகின்றனர். இன்று இந்தியாவில் கற்ற வகுப்பினர் புத்திமதியைக் கேட்கவல்ல ஆங்கிலர் அவரொருவரேயாவர். அவருடைய மொழிகள் இந்தியர் நலத்தைப் பேணாது வேறு எண்ணத்தால் உதித்தனவென ஒருவருஞ் சந்தேகியார்கள்” என்று ஒருகடிதம் வரைந்தார்.

1908-ம் ஆண்டு பிரதான அமைச்சராக இருந்த காம்பெல் பானர்மானும் இறந்துபட்டார். அவருக்குப் பின்னால் அமைச்சராக வந்த ஆஸ்குவித் என்பவர் (Asquith) ரிப்பன் பிரபுவை உத்தியோகம் வகிக்குமாறு மிகவும் வேண்டினார். ஆனால், ரிப்பன் பிரபு பிரபுக்கள் அரசியல் மன்றத்தில் தலைவர் பதவியை வகிக்கத் தம்மால் இயலாதென்று மறுத்துவிட்டார்.

இதனை யறிந்ததும் அவருடைய நண்பர்கள் மிக வும் வருந்தினர். ஐந்து மாதங்களுக்கப்பால் ரிப்பன் பிரபு அரசமுத்திரை அதிகாரியின் பதவியையும் இராஜீ நாமா செய்துவிட்டார்.

"நம்முடைய அரசியல் சரிதத்தில் தொண்டாற்று வதில் பிடிவாதத்தையும், சமயோசித யுக்தியையும், உயர்வையுங் காட்டியவர்கள் உம்மைவிட வேறு ஒரு வர் இருப்பதாக எனக்குத் தோன்றவில்லை" என்று மார்லி அவரைப் புகழ்ந்தார்.

"நான் பல தலைவர்களுக்குக் கீழ் உழைத்துள் ளேன். ஆனால் அவர்களில் ஒருவரிடத்திலேனும், நான் ரிப்பன் பிரபுவினிடத்தில் வைத்துள்ள அவ்வளவு நம் பிக்கையும் மரியாதையும் வைத்ததில்லை" என்று எர்ல் காரிங்டன் (Earl Carrington) வரைந்தார்.

பின்னர் ரிப்பன் பிரபு அரசியலிலிருந்து விலகி ஓய்வை நாடினார்.

120652
600 008.

# முடிவுரை

அரசியல் துறைகளிலிருந்து விலகியபின், ஒன்பது மாதங்களே ரிப்பன் பிரபு உலகிடைவதிந்தார். அப்பொழுதும் அரசியல் விஷயங்களில் அவருடைய ஊக்கங் குன்றவில்லை. 1909-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் அவர் நோய் வாய்ப்பட்டார். இரண்டு மாதங்கள் அப்பிணி அவரைப் பெரிதும் வருத்தியது. ஜூன் மாதம் அப்பிணி அவரைவிட்டுப் பிரிந்ததுபோல் தோன்றியதெனினும், ஜூலைமாதம் 9-ந்தேதி அவர் விண்ணுல கெய்தினார். அறுபது ஆண்டுகள்வரையில் ஆங்கில அரசியலில் ஈடுபட்டுழைத்த பெரியாராகிய அவர் மறைந்து போயினர். அந்தோ! இந்தியாவிற்கு முதலில் உரிமை வழங்கிய உத்தமர் மடிந்தார். ஏழை மக்களுக்கு என்றும் உழைத்த பெரியார் பெருந்துயில் கொண்டார். ஆங்கில அரசியல் ஒரு பெரிய நிபுணனை இழந்தது; இந்திய மக்கள் பெருநண்பனை இழந்தனர்.

அவராற்றிய தொண்டும் பற்றிய நெறியும் சரிதத்தில் பதிந்திருக்கின்றன. அன்றியும், அவருடைய வாழ்க்கை உலகிற்கோர் உவமையென நின்று அரசியல் துறையை நாடுகின்றவர்களுக்கு ஊக்கத்தை யூட்டி உண்மையை உணர்த்துமென்பது திண்ணம்.

---

"ஆனந்தபோதினி" அச்சுக்கூடம், சென்னை.